# கவிஞர்காரை



# கவிஞர்காரை

கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை

(முன்னாள் அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

அவர்களின்

# நினைவு மலர்

இலண்டன்

2005

உ

சிவமயம்



கந்தரனுபூதி

எந்தா யுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே

# தமிழரானவர் முதுசொம்

காரை என்ற புனைபெயர் தாங்கியே
        கவிதை வானில் எறித்த முழுநிலா
ஊரைத் தன்னெழுத் தூழியத் தால்தமிழ்
        உலகெலாம் நிலை நாட்டிய உத்தமன்
ஆர வாரமற்(று) ஆய்வுகள் செய்தவன்
        அநுப வஸ்த்தன் ஆசிரியர் நடுவன்ஓர்
தாரகை எனப் போற்றிடத் தக்கவன்
        தமிழ ரானவர் முதுசொம்நம் சுந்தரம்

நாட்டுக் கூத்துக்கள் ஆடி நயந்தவன்
        நாட கத்தின் வளங்கள் அறிந்தவன்
ஏட்டில் கூத்துப் பழக்கும் அண்ணாவியார்
        இரவெ லாம்மத் தளத்தொ டிசைத்திடும்
பாட்டில் நெஞ்சைப் பறிகொடுத் துப்பல
        பாத்தி ரங்களை ஆட்டிப் படைத்தவன்
வாட்டும் நோய்தரு வாதையினூடும் நம்
        மலைய கத்தவர் கூத்தை ஆராய்ந்தவன்

ஆர வாரங் கடந்தவன் தன்முதுகு
        ஆரும் ஏற அனுமதிக் காதவன்
ஈர அன்பினன் உதவிகள் செய்வதில்
        ஈடில் லாதவன் நட்புக் கிலக்கணம்
நேரில் போயிரு வார்த்தைகள் சொல்லிக்கண்
        நீரி லாட்ட ஒண்ணாத மிகப்பெருந்
தூரமாம் எனும் சோகம் சுமந்தனம்
        தூய நெஞ்சினோய்! சென்றுவா நண்பனே!

கண்ணை மூடிநீ தூங்குகிறாய், உன்றன்
        காதல் மக்கள் கண்ணீர் கடலாட, நான்
என்ன வாறவர்க் காறுதல் சொல்லுகேன்!
        ஏவர்தாம் எனக் காறுதல் சொல்லுவார்!
விண்ணை மூடிக் கவிந்தது காரிருள்
        வீட்டில் எல்லா விளக்கும் அணைந்தன
எண்ண எண்ண இனிக்கின்ற பண்பினோய்
        எண்ணுகேன் உனை என்றைக்கும் எண்ணுகேன்!

**கவிஞர் சோ. பத்மநாதன்**
முன்னாள் முதல்வர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி

அமரர்

# கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை

(முன்னாள் அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

அவர்கள்



**மலர்வு: 20.05.1938** **உதிர்வு: 21.09.2005**

திதி வெண்பா

பார்த்திப ஆண்டென்பர் பகர்புரட் டாதியென்பர்
வாய்த்த அபர சதுர்த்தி என்பர் - கீர்த்திபெறு
சுந்தரனார் காரை தொலையா வழி நடக்க
சிந்தை துணிந்த தினம்

# Our grandad

Our grandad Dr. S. Sundarampillai was a genius gentleman we had ever seen. He was very kind and cared about us. As he was a famous poet and a prominent dramatist, he was very good at telling stories for us. His charming face and charismatic personality was a huge influence in our childhood. We were very proud children when you blessed us with the initial alphabets during vijayathasami. We still remember how we helped you to walk in the garden as a routine exercise for you. Our parents always told us how well you did in your studies. You never stopped learning. Even in the last days of your life you were very consistent to publish your book. We were really amazed at your knowledge and the will power you had.

You loved your country, you loved your language and you loved your dramas. You will always be in our hearts and we will never forget the things you have done for us. We wish we were bit older to look after you when you really needed. But our parents did a tremendous service to you as you were a beloved dad. We need you in our life ahead as a guide, leader and a guru. We pray the almighty for your athma to rest in heaven and in our hearts forever. We miss you a lot.

Shainthavaan, Sruthy,
Luxmi, Seyon,
Sarukan

# அப்பா

அப்பா! நெஞ்சுருகி நினைக்கின்றோம்; எங்களுக்குக் கொடையாக, நித்திய சுகமாக, அன்பாக உலா வந்த நாட்களே இன்று ஆறுதலாக மிளிர்கின்றன. பட்டென்று இளகி விடுகின்ற மனசு அது; இரக்கம், கருணை, அரவணைப்பு, துடிப்பு, பாசம் எனத் தன் அன்பு எனும் சிறகுக்குள் பொத்திப் பொத்திப் பாதுகாத்த வாழ்வு மனம் நிறைந்து விரிகின்றது.

குடும்பமும் உறவுகளும் இலக்கிய முயற்சிகளுமே உலகமென்று சுற்றிச் சுற்றி வந்த அன்புத் தந்தை தன் விருப்புக்களை எம்மீது திணிக்காது, ஆனால் காந்தம் போன்று தன் விருப்புக்களை நாம் மதித்து வாழ வழிவகுத்த வாழ்வு எல்லாமே நிறைவு. பொறுப்புக்களை, உணர்வுகளைத் தன் ஆளுமைகளை வாழ்க்கையினை, அதன் யதார்த்தத்தினை நயமாகச் சொல்லிச் சென்றமையால் அவர் வழியில் பல்லாயிரம் மாணவர்களுடன் நாமும்.

உள்ளன்பிற்குக் கட்டுப்படுகின்ற அதே வேளை, திட்டமிட்டு மனிதத்தின் கடையிலே நின்று செய்கின்ற வக்கிரங்களைத் தூ ரெறிந்து மீண்டும் புதுப் பொலிவு காணும் மனிதன் இவர். முயற்சி அது நிறைவு; சாவின் இறுதிவரை படிப்பு அல்லது வாசிப்பு அது நிறைவு; கல்வியில் உயர்வு அது நிறைவு; தொழிலில் கம்பீரம் அது நிறைவு; நிர்வாகத் திறமை அது நிறைவு; பெற்றெடுத்த தெய்வங்கள் அது நிறைவு; அன்புச் சகோதரர்கள் அது நிறைவு; காதல் மனைவி அது நிறைவு; பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவுகள், நண்பர்கள் அது நிறைவு; வாழ்வே நிறைவாக அழகிய தமிழாக வாழ்ந்த அப்பாவின் வரலாற்றுப் பதிவுகளின் எச்சங்கள், எழுத்தினுள் அடங்காதவையாக . . .

வடஈழத்தின் அழகிய தீவு காரைநகர். அங்கு வரலாற்றுக் காலத்தில் மன்னர்கள் போர் புரிந்தார்கள் என்ற காரணப் பெயருடன் விளங்கும் பூமி, களபூமி எனும் இடம். அதுவே இவரின் பிறப்பிடம். அப்பூமியின் உரமே எப்போதும் தன் வாழ்வின் உரமெனக் கொண்டு வாழ்வோடு போராடிப் போராடி உயர்வு கண்டார்.

1938 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 20 ஆம் திகதி திருவோண நட்சத்திரத்தில் அன்பு மகனாக ‘சூரியக்குஞ்சுவாக’, ‘மடிகொள்ளாப்பிள்ளையாக’, ‘இலந்தைப்புழுவாக’ (அப்பாவின் தாய் மகன்பற்றிச் சொல்லுகின்ற வார்த்தைகள்) செல்லர் - தங்கம் தம்பதியினருக்கு வந்து பிறந்தார். அன்பொழுகி அரவணைத்துச் ‘சுந்தரம்பிள்ளை’ என நாமமிட்டு, நல்லதம்பி, லட்சுமி ஆகிய மூத்த சகோதரர்களுக்கு உறவாகக் கையளித்துப் பெற்றோர் மகிழ்ந்தனர். தனக்குத் துணையாக பரமேஸ்வரி, வள்ளியம்மை(கிளி) ஆகிய இளைய சகோதரிகளை வரித்துக்கொண்டு பொலிவு பெற்றார்.

கட்டுக்குடுமி, சலவை செய்த வேட்டி, அகன்ற கரும் மார்பு அதுதான் தந்தையின் தந்தை செல்லர்; அவர் அரவணைத்துத் தோளில் தூக்கி வைக்கச் செக்கச் சிவப்பழகி அன்னையவள் தங்கம், கண்ணில் ஒரு முறை ஈழத்துச் சிதம்பரனாரை நினைக்கின்றாள். எல்லாத் தெய்வங்களுக்கும் நேர்த்தி வைத்துச் சுந்தரம்பிள்ளைக்கு நெற்றியிலே விபூதியிட்டு வாழ்த்தி வழியனுப்பக் காரைநகர் ஊரித் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக்கல்வி ஆரம்பமாயிற்று. தொடர்ந்து ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரியில் தனது கல்வியைத் தொடரலானார். கத்தோலிக்கக் கல்லூரி என்பதனால் ஆங்கில மொழி மூலமான கல்வியும், மேலைத்தேச நாகரிகத்துடனான உணவு, உடை பழக்கவழக்கங்களும் இவருக்குக் கம்பீரத்தைத் தந்தன. அதுமட்டுமன்றி, காரைநகரில் இருந்து கடல் நீரேரி ஊடாக ஊர்காவற்றுறைக்குச் சென்று கற்று வருவதற்கு ‘மச்சுவாயே’ பயன்படுத்தி வந்தனர். ஊர்காவற்றுறை நீதிமன்றில் வேலை செய்யும் வழக்கறிஞர்கள், உத்தியோகத்தர்கள் தாம் ஏறும் மச்சுவாயில் சிறார்களாகிய இவர்களையும் ஏற்றிச் செல்வது வழக்கம். அவர்களது கல்வித் தகைமைகளையும், ஆளுமைச் சிறப்புக்களையும் மனதினுள்ளே நினைந்து, நாளை இத்தகையதொரு இடத்தை நாமும்

பெற்றுவிட வேண்டுமென்ற எண்ணம் இவர் மனதில் வேரூன்றத் தொடங்கியது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் உயர்தரக் கல்வியையும், கொழும்பு அக்குவேனஸ் பல்கலைக்கழகக் கல்லூரியில் பல்கலைலக் கழகக் கல்வியையும் கற்றுவர வாழ்வினிலே ஒரு பேரிடி. நாற்பத்தைந்து வயதே நிரம்பிய தந்தை மாரடைப்பால் மரணமானார். குடும்பத்து ஆலமரம்; செல்வச் செழிப்புடனே குடும்பத்தை வாழவைத்த அன்புத் தலைவன். எக்குறையுமின்றிக் கல்வி கற்க வழிகாட்டிய தந்தை. ஏழ்மை என்றால் என்னவென்று தெரியாமல் வளர்ந்த வளர்ப்பு. குடும்பம் நிலைகுலைந்து போயிற்று. (மரணம் எப்போதும் பொல்லாததுதான்)

கலைமாணிப் பட்டத்திற்கான பரீட்சையின் ஒரு பாடம் எழுதிவிட்டு பஸ்ஸில் இருந்து இறங்கி வரத் தாய்மாமன் அரவணைத்துக் கூட்டி வருகின்றார். அந்தக் கடலை அண்டிய பரந்த வெளியில், மெல்ல மெல்லத் தந்தையின் மரணம் சொல்லப்படுகின்றது. உப்புக்காற்று வெறுப்பையேற்ற ஓவென்ற அலறலுடன் ஓட, அங்கு யானையையொத்த தந்தை நடுக்கூடத்தில் மல்லாக்காக் கிடத்தப்பட்டிருக்கின்றார். அழுது அழுது நெஞ்சு வலியால் துடித்துத் துவண்டு இழவு கொண்டாடிச் சோர்ந்து அடுத்த இரண்டு பாடங்களையும் எழுத முடியாதளவு இவருக்குச் சோகம். என்ன செய்வது? அடுத்த வருடம் மீண்டும் பரீட்சை எடுப்போம் எனத் தீர்மானித்துத் திண்ணையில் சோர்ந்திருக்கின்றார்.

அன்போடு ஒரு கை தோளை அணைக்கின்றது. இளவயதில் பொட்டிழந்து வெள்ளைச் சேலைக்குள் புகுந்து கொண்ட அன்புத் தாயின் சோகமுகம். "தம்பி நீ நாளைக்குச் சோதினை எழுதப்போ. இவ்வளவு நாளும் படிச்சதை வைச்சு எழுது". "முடியாதணை என்னால அங்கை கதிரையிலை போயிருக்க முடியாது" மகனின் வார்த்தைகள். "இல்லைத் தம்பி உந்தப் படிப்பைத்தான் அப்பா நம்பியிருந்தவர். அவற்ரை ஆசைக்காய் நீ சோதினை எழுதப் போகத்தான் வேணும். பெயில் விட்டாலும் பறவாயில்லைலப் போயெழுது" எப்போதும் அன்பு கலந்த அதிகாரக்குரல் தான்,

அம்மாவின் குரல். பணிந்துவிட்டான் மகன். அன்பு ஆசிரியர் சபார-த்தினமும் மாலைப் பொழுதில் வந்து “உம்மால் முடியும் போய் எழுதும்” என ஊக்கப்படுத்திவிட்டுச் செல்கின்றார். தாயின் ஆசை-க்காகத் தந்தையின் ஆத்ம சாந்திக்காக இரண்டு பாடங்களையும் எழுதி அந்த வருடமே பீ. ஏ. பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

காரைநகரில் இருந்து வேலை கிடைக்கும்வரை மல்லாகத்திற்-குச் சைக்கிளில் சென்று தனியார் வகுப்புக்கள் நடத்தி வருவாயைப் பெறவேண்டிய தேவை. உழைப்பு; கடும் உழைப்பு. முயற்சி; கடும் முயற்சி. இதுதான் வாழ்வின் இறுதிவரை இவரது நியதி.

பன்மொழித் திறமை கல்வி ஆளுமைக்குச் சாதகமாயிற்று. தமிழ் மொழி, ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் ஏதே-னும் சந்தேகம் என்றால் அதற்குரிய நூலைத் தேடி எடுத்து வாசி-க்கும் மட்டும் ஓய மாட்டார். தன்வளர்ச்சிக்கு நீரூற்றிய ஆசிரியப் பெருந்தகைகளை எப்போதும் நன்றியுடன் நினைத்திடுவார். பண்டிதர் வித்துவான் க. கி . நடராஜன், வித்துவான் பொன் முத்துக்குமாரன், வித்துவான் க. வேந்தனார், பண்டிதர் ஆ. பொன்னுத்துரை, தமிழ்த்-தாத்தா கந்த முருகேசனார், ஆ. சபாரத்தினம் ஆகியோர் கற்பித்த தமிழ் பற்றி எப்போதும் பெருமை கொள்வார். எஸ். செல்லத்துரை, ஜோர்ஜ் மனுவேற்பிள்ளை, அன்ரன் யேசுதாசன், எம். எம். துை-ரசிங்கம் ஆகிய ஆசிரியர்களிடம் ஆங்கிலம் கற்றிருந்தார். தனக்கு ஷேக்ஸ்பியரைச் சொல்லித்தந்தவர் துரைசிங்கம் சேர் என அடிக்கடி சொல்லும் இவர், ஆசிரியரின் இறுதிக்காலத்தில் அன்பு மாணவனாக மட்டுமன்றி அன்புமகனாகவும் விளங்கிக் குடும்பத்தில் ஒருவராக இருந்து கடமைகளைச் செய்ததை அவரது பிள்ளைகள் நன்றியுடன் உரைப்பர்.

கே. நாகரத்தினம், பிரம்மஸ்ரீ சீதாராமசாஸ்திரிகள், சீ. சீ. எஸ். ஆனந்தகுருகே ஆகியோரிடம் முறையாக சமஸ்கிருதம் கற்றதனால் உச்சரிப்புப் பிழையின்றி சுலோகங்களைச் சொல்லுகின்ற ஆற்றல் கொண்டார். அத்துடன் வடமொழியில் உள்ள மூல இலக்கியங்களை ஆர்வத்துடன் கற்று அவற்றிலிருந்து உதாரணங்களை எடுத்துத் தன்

ஆய்விற்குப் பயன்படுத்திக் கொள்வார்.

சண்டிலிப்பாய் நாகரத்தினம் ஆசிரியரிடம் பாளி மொழியையும் வண. மகாநாம தேரரிடம் சிங்கள மொழியையும் கற்றிருந்தார். இத்தனை மொழி நூல்களாலும் இவரது வீட்டு அலுமாரிகள் நிறைந்து காணப்படும். அது உண்மையில் சாதாரண நூலகத்தை விஞ்சிய நூலகமாகக் காட்சி தரும். புத்தகங்களைப் பிஞ்சுக் குழந்தைகளை அரவணைத்துப் பராமரிப்பது போலவே பராமரிப்பார். தாள்களை மடிப்பது, எச்சில் தொட்டுப் பக்கங்களை புரட்டுவது, விரித்து வைத்திருப்பது, கீறுவது எதுவுமே இவருக்குப் பிடிக்காத செயல்கள். இரவல் கொடுப்பதாக இருந்தால் மிகவும் கண்டிப்பாக இத்தனை உத்தரவும் போடுவார்.

ஆனாலும் தாயகப் போர் நெருக்கடிகள் இவரது நூல்களுக்குச் சோதனைக் காலமாயிற்று. 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வின்போது அள்ளி எடுத்த துணிமணிகளுடன் நடந்து, நாவறண்டு நாவற்குழிப் பாலத்தில் பனிக்குளிரில் படுத்தெழும்பி வடமராட்சி சென்றடைந்த பின்னர் நூல்களை ஏற்றுவதற்கு ஆயத்தம் செய்தபோது மீண்டும் யாழ்ப்பாணம் போகமுடியாத சூழல்; அதனால் அவரது வாழ்நாட்ச் சொத்து அங்கேயே இருக்கும்படி ஆயிற்று.

மீண்டும் வந்து பார்த்தபோது வீட்டுக் கதவுகள் உட்பட உடைமைகள் யாவும் சிங்கள இராணுவத்தால் சூறையாடப்பட்டிருந்தன. நூல்கள் யாவும் அறையொன்றினுள் குவிக்கப்பட்டு அலுமாரிகளும் அபகரிக்கப்பட்டிருந்தன. அறையின் முகட்டு ஓடுகள் கழற்றப்பட்டிருந்தன. ஆறுமாதத்தின் பின் வீட்டிற்கு வந்து தன் நூல்கள் மழையால் நனைந்து சிதைந்திருந்த காட்சி கண்டு கலங்கி நின்றவர் மறுகணம் எதைப்பற்றியும் சிந்திக்காது ஓடி ஓடி அந்தப் புத்தகங்களைப் பொறுக்கியெடுத்துக் காயவைத்த காட்சி கண்ணீரை வரவழைக்கும்.

யாழ்ப்பாண இடப்பெயர்வின்போது வழியெல்லாம் நாம் பட்ட துன்பங்களையெல்லாம் எம்மோடு தள்ளாத வயதில் அப்பாச்சியும் அனுபவித்திருந்தார். மென்மேலும் துன்பமுறுவார் எனக் கருதி இளைய மகளிடம் வன்னிக்கு அனுப்பியிருந்தோம். பின்னர் தந்தை

கொழும்பு செல்லும் தேவையிருந்தது. எனவே சென்று வரும்பே-ாது அம்மாவை அழைத்து வருவேன் எனக் கூறிப்போனார். அச்சம் தரும் கிளாலிப் பாதை கடந்து சென்றவர், கொழும்பு செல்லுமுன் அம்மாவைப் பார்ப்போமென எண்ணித் தாயிடம் சென்றவர் திகைத்-துவிட்டார். மரணப்படுக்கையில் பெற்றதாய். கைபிடித்து "தம்பி" என அழுததாய் கொள்ளிவைக்க மைந்தன் வந்தான் என்ற திருப்தியில் மூன்றாம் நாள் கண்ணை மூடிக்கொண்டார். அவர் நினைவாக தன் அடுத்த ஆக்கத்கை அவருக்கே சமர்ப்பித்தார்.

1968 ஆம் ஆண்டு தமிழாராட்சி மாநாட்டுக்குத் தமிழ்நாடு சென்று வந்தவர் மீண்டும் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் போக முற்பட்டவேளை, அங்கு ஈழத்தமிழர் புறக்கணிக்கப்படுவது கேள்வ-யுற்றுத் தன்பயணத்தை நிறுத்திக்கொண்டார். ஆவரங்காலில் நடை-டபெற்ற தமிழரசுக் கட்சி மாநாட்டில் நடைபெற்ற கவியரங்கில் "கேட்டது தமிழீழம் கிடைத்தது ஜப்பான் ஜீப்" என இவர் கூற, இளைஞர் அணியொன்று தம் ஆதரவைக் கோசங்களாக்கி மேடை நோக்கி வந்தமை உணர்வு பெறும் சம்பவங்கள் ஆகும்.

தமிழரசுக் கட்சி உறுப்பினரான இவர் அக்கட்சிக் கூட்டங்களு-க்குச் சென்றுவரும் போது க. முருகேசு ஆசிரியருடன் நெருக்கமான உறவை வைத்திருந்தார். அவர் அப்போது புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வி-த்தியாலய அதிபராகக் கடமையாற்றிய வேளை எமது தந்தை பாட-சாலை அலுவலக வேலைகளுக்கு உதவிபுரிவது வழக்கம். பின்னர் கொழும்பு மருதானை சென் யோசப் கல்லூரி, கேகாலை கேமார-கம முஸ்லிம் மகாவித்தியாலயம், மாவனல்ல ஷாஹிரா கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியப் பணி புரிந்து வந்தார். எனினும் முருகேசு ஆசிரியருடன் நல்லதொரு நட்புறவைக் கொண்டிருந்தமையால் அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த தன் ஏக புதல்வி இந்திராவதியை 1964 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் திகதி திருமணம் செய்து வைத்தார்.

எம் தந்தைக்கு புகுந்த வீடும் பிறந்த வீடாயிற்று. சமூகசேவை-வயாளரும், சைவப்பெரியாருமாகிய மாமனாரிடத்தில் பெரும் மரிய-ாதை வைத்திருந்ததோடு மாமியார் கமலவேணியையும்

தன் தாயாகவே நினைத்தார். தன் மைத்துனர்களாகிய கந்தவரோதயன், இராஜவரோதயன், இந்திரோதயன் ஆகியோரிடத்திலும், அம்மாவின் உடன்பிறவாச் சகோதரர், மைத்துனரிடத்திலும் மிகவும் அன்பாகவிருந்தார்.

அன்பு மகள் கௌசல்யா (துளசி) 1965 ஆம் ஆண்டு இவர்களுக்கு மகளாக வந்து உதித்தாள். கவிஞனின் கவிதைகள் எல்லை புரண்டு ஆர்த்தன. பிஞ்சு மகளைக் கவிதைகளால் அலங்கரித்தார். அவற்றில் சில 'தேனாறு' கவிதைத் தொகுப்பிலும், பல கவிதைகள் அன்றைய பத்திரிகைகளிலும் வெளிவந்தன.

குடும்பம் என அமைந்ததனால் ஊரோடு வர எண்ணித் தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகி வந்தார். பிள்ளைகள் மாதவி(1968), பூங்குன்றன்(1969) பிறந்ததன் பின்னர் பிள்ளைகளின் கல்வியைக் கருத்திற்கொண்டு 1971 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் குடியிருக்க வந்தார். மனைவியின் தாயின் சொத்தாகக் கடற்கரை வீதியில் அமைந்த பரந்த காணியில் வீட்டை அமைத்துக்கொண்டது குடும்பம். அது அழகிய தோப்பு. பனைகளும், தென்னைகளும், வேப்பமரங்களும், புளியமரங்களும், கொய்யா, நெல்லி, அன்னமுன்னாவுடன் மூலிகைச் செடிகளும் சேர்ந்த ரம்மிய சூழல்; சுகம் தரும் கடற்காற்று; இரத்த உறவென வாழ்ந்த அயலவர்கள். அன்றிலிருந்து 1995 ஆம் ஆண்டு வரை அனுபவித்து அனுபவித்து மகிழ்ந்த வாழ்க்கை அது. அங்குதான் சின்னமகன் திருப்பரங்குன்றன்(1975) பிறந்தான். யழ்ப்பாணத்தில் வசித்து வந்தமையால் யாழ் ஒஸ்மோனியாக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி என்பனவற்றில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1976 ஆம் ஆண்டு நாடகத் துறையில் பயிற்சி பெறுவதற்காகக் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இரு வருடங்கள் பயின்று நாடகத்துறையில் டிப்ளோமா பெற்றதுடன், கல்வியியல் துறையிலும் டிப்ளோமா பெற்றிருந்தார்.

இத்தகைய தகைமைகளுடன் மீண்டும் யாழ்ப்பாணம் வந்தவர், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மறைந்த அமிர்தலிங்கம் அவர்களின் வேண்டுதலின்பேரில் தனது ஊர்ப் பாடசாலையான

காரைநகர் இந்துக் கல்லூரிக்கு அதிபராகப் பதவியேற்றார். மனம் நேசித்துத் தொழில் புரிந்த காலம் இது. தன்னூரில் தன் மக்களுக்குச் சேவை செய்வதில் பெருமை கொண்டார். தன் சக ஆசிரியர்களோடு அன்பான உறவு கொண்டு மாணவர்களோடு கண்டிப்போடு கூடிய பாசம் வைத்துப் பாடசாலை முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

தொடர்ந்து பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு விரிவுரையாளராகச் சென்று பின்னர் தலவாக்கலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அதிபரானார். மீண்டும் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு வந்தார். பின் அக்கலாசாலை அதிபராகி அங்கேயே 1998 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்றதனை மணிவிழாவாகவே கொண்டாடி அக்கலாசாலை இவரைப் பெருமைப்படுத்தி மகிழ்ந்ததுடன், கண்ணீர்மல்க விடை கொடுத்த நிகழ்வு எப்பொழுதும் பசுமையானவை.

ஓய்வுபெற்ற பின்னரும் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்கு நல்ல விரிவுரையாளர்களைப் பெறமுடியாதிருந்த காலத்தில் ஆங்கிலம் மூலம் கல்வியியல், உளவியல் ஆகிய பாடங்களைக் கற்பித்தார். கலாசாலையில் கடமையாற்றும்போதே திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தில் உளவியலையும், யாழ் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலையும், யாழ்ப்பாணக் கல்லூரியில் இந்துநாகரிகத்தையும் போதிக்கும் இடைவரவு விரிவுரையாளராக விளங்கினார்.

பின்னர் இந்தியாவிற்கு இருதடவைகள் சென்று சென்னைப் பல்கலைக்கழகம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை அமெரிக்கன் மிஷன் கல்லூரி, பாளையங்கோட்டை சென். சேவியர் கல்லூரி ஆகியவற்றில் கருத்தரங்குகளை மேற்கொண்டதுடன் நாட்டாரியல் பற்றிய ஆய்வுகளிலும் ஈடுபட்டார். அவற்றின் பயனாகவே இவரது இறுதி நூலான ‘ஈழத்து மலையகக் கூத்துக்கள்’ எனும் நூ ல் வெளிவரவுள்ளது.

ஆரம்ப காலங்களில் இவரது கவியாற்றல் கண்டு கன
க

செந்திநாதன் மேடைகளில் கவிபாடச் சந்தர்ப்பங்கள் அளித்தார். தொடர்ந்து அ. செ. முருகானந்தன், மதுரகவி நாகராசன் ஆகியோர் தோள்தட்டி ஊக்குவித்தனர். அன்று வடஈழத்தின் மூலை முடுக்கெல்லாம் இவர் தம் கவிதைகள் அரங்கேறின. கவிதைகளைப் பண்டிதர் முதல் பாமரர் வரை ரசித்துக் கேட்கும் கவியரங்க மேடையை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவராக இவரை ஈழத்து இலக்கியக்காரர் கூறுகின்றனர். இவை தவிர பட்டிமன்ற மேடைகள், சமயச் சொற்பொழிவுகள், ஆய்வரங்குகள் போன்றவற்றில் எல்லாம் பாராட்டுப்பெறும் பேச்சாளராக விளங்கினார். தைப்பொங்கல், புதுவருடப்பிறப்பு, நவராத்திரி காலங்களில் மாலைகளும் பொன்னாடைகளும் கைநிறையக்கொண்டு வீடு வருவார். அதனைக் கண்டு மகிழ்வதற்காய் நாம் விழித்திருப்போம்.

நாடக ஆய்வாளனாக தன்னை இவர் இனங்காட்டிக்கொள்வதற்கு குடும்பச் சூழலும், இயல்பாக அமைந்த நடிப்பாற்றலும் காரணமாகின. இரணிய சம்ஹாரம் (நாட்டுக்கூத்து), Merchant of venice (ஆங்கில நாடகம்), பராசக்தி (சமூகநாடகம்) என்பவற்றில் நடித்தும் இருக்கின்றார். பாடசாலை, பல்கலைக்கழகம் ஆகியவற்றில் நடிப்புப் பயிற்சியைப் பெற்றதுடன், பெரிய தகப்பன் அண்ணாவியார் ஆண்டிஐயா, ஆசிரியர் ஆ. முருகேசு, நடிகமணி வி. வி. வைரமுத்து ஆகியோருடன் நெருங்கிப் பழகி ஆட்ட நுணுக்கங்களையும், இசை நுணுக்கங்களையும் கற்றிருந்தார். ஆய்வுகளை மேற்கொள்ளுகின்றபோது தனக்கு ஆலோசனைகளை வழங்கி வழிநடத்திய பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் கா. சிவத்தம்பி இருவரிடத்திலும் வாழ்நாள் முழுதும் அன்பும், மதிப்பும், நன்றியும் கொண்டவராக இருந்தார். இவரினால் பின்வரும் நாடகங்கள் இயக்கப்பட்டிருந்தன. அவையாவன, சமூகநாடகங்களாவன: தரகர் தம்பர், தம்பி படிக்கிறான், வாழ்வும் தாழ்வும், சினிமா மோகம், சித்திரமே சித்திரமே. இதிகாச புராண நாடகங்களாவன: பக்தநந்தனார், கர்ணன், சகுந்தலை, தமயந்தி, வில்லொடித்த விதுரன், சிற்பியின் காதல். ஆட்டநாட்டுக்கூத்துக்கள்: பாஞ்சாலி சபதம், மூவிராசாக்கள், முத்தா மாணிக்கமா, காமன்கூத்து. சிறுவர் நாடகங்களாவன: மூத்தோர்சொல் வார்த்தையமுதம், பாவம் நரியார்.

விருதுகள் தான் கலைஞனை வாழவைக்கும் என்பதில்லை. ஆனால் கிடைத்த விருதுகள் பதிவிற்குள்ளாவது காலத்தின் தேவையாகும். அவ்வகையில் இவர் பெற்ற பரிசில்கள் பின்வருமாறு:

பதுளை பாரதிகல்லூரி 1968 இல் நடத்திய அகில இலங்கை ரீதியான கவிதைப் போட்டியில் முதற்பரிசு, தங்கப்பதக்கம்.

யாழ் மாநகரசபை 1969 இல் நடத்திய கவிதைப்போட்டியில் முதற்பரிசு.

அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி 1969 இல் நடத்திய கவிதைப்போட்டியில் முதற்பரிசாகத் தங்கப்பதக்கம்.

'சுதந்திரன்' நடத்திய கவிதைப்போட்டியில் முதற்பரிசு.

தமிழ் காங்கிரஸ் நடத்திய கவிதைப் போட்டியில் சிறப்புப் பரிசு.

யாழ் மாநகர சபை 1982 இல் நடத்திய மன்றக் கீதத்திற்கான போட்டியில் முதற்பரிசும், விருதும்.

ஈழநாடு தினசரிப் பத்திரிகை 1970 இல் நடத்திய அகில இலங்கைக் காவியப் போட்டியில் 'சங்கிலியம்' முதற்பரிசு.

யாழ் பல்கலைக்கழகக் கலாநிதிப் பட்டத்திற்கு 1990 இல் சமர்ப்பித்த ஆய்வேடு சிறந்த ஆய்வு எனக் கருதிக் கிடைத்த தம்பிமுத்து கனகசுந்தரம்பிள்ளை நினைவு விருது.

இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற நூல்கள்:

தேனாறு (1968), சங்கிலியம் (1970), ஈழத்து இசைநாடக வரலாறு (1990), இந்துநாகரிகத்திற் கலை (1994), நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் (1996).

வடக்குக் கிழக்கு மாகாண, சாகித்தியமண்டலப் பரிசுபெற்ற நூல்கள்:

இந்துநாகரிகத்திற் கலை (1994), நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் (1996).

யாழ்ப்பாண மாநகரசபை மன்றக்கீதத்தை எழுதியதற்காக இவருக்குப் கேடயமும், சான்றிதழும், பொற்கிழியும் வழங்கப்பட்டன. பொற்கிழியை எரிந்த யாழ் நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்தார். இது தவிர யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரிக் கீதமும் இவரால் ஆக்கப்பட்டதென்பதுவும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவரது ஆக்கமுயற்சிகள் எப்போதும் பெறுமதிமிக்கவையே. அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றோம்.

1. தேனாறு (1968)
2. சங்கிலியம் (1970)
3. தவம் (1971)
4. ஈழத்து இசைநாடக வரலாறு (1990)
5. பாதைமாறியபோது (1986)
6. காவேரி (1993)
7. இந்து நாகரிகத்திற் கலை (1994)
9. வி.வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் (1996)
10. சிங்களப் பாரம்பரிய அரங்கம் (1997)
11. பூதத்தம்பி இசை நாடகம் (2000)
12. வட இலங்கை நாட்டார் அரங்கு (2000)
13. விவேக சிந்தாமணி - உரைநடை
14. நாடகதீபம் - தொகுத்தது
15. உளவியல் - பதிப்பித்தது
16. கல்வியியல் - பதிப்பித்தது
17. புள்ளிவிபரவியல் - பதிப்பித்தது
18. ஈழத்து மலையகக் கூத்துக்கள் - வெளிவரவுள்ளது

தனது ஆக்கங்கள் யாவும் நூலுருப் பெறுவதற்கு உறுதுணை நின்ற நண்பர் இ. சங்கருக்கு (பாரதிப்பதிப்பக உரிமையாளர்) நான் கடமைப்பட்டவன் என்று கூறுவார். அவ்வாறே மலையகத்தில் கல்வி கற்பிக்கும் காலத்திலிருந்து நட்புக்கொண்டிருந்த வளலாய் ஆசிரியர் செ. சிவசம்பு அவர்களைத் தனது உடன்பிறவாச் சகோதரன் எனக் கூறுவதில் சந்தோசப்படுவார்.

சுதந்திர மனிதனாக, விடுதலை உணர்வு கொண்ட மனிதனாக, கட்டுப்பாடுகள் எவற்றிற்கும் அடங்காத மனிதனாகச் செயற்பட்ட காரணத்தினால், இவை எல்லாம் என் சுயமென்று தன் ஆக்க இலக்கியங்களையும், ஆய்வு நூல்களையும் இவரால் தரமுடிந்தது. தனது வாழ்வியற் காலத்தில் செய்த சாதனைகளால்தான் ஒருவன் மறைந்த பின்னும் உலகில் போற்றப்படுவான். அவ்வகையில் எம் தந்தை சாதனையாளனாக எப்போதும் உணரப்படுவார் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

முயற்சிகளும், ஆற்றல்களும் தக்கதொரு உயர்நிலையை இவருக்குத் தந்ததெனக் கொண்டால் அவற்றிற்கு மேலாக இல்லற வாழ்வின் துணையாக அமைந்த மனைவி இந்திராவதி இவருக்குக் கிடைத்த கொடைதான். மணம்செய்த காலம் முதல் மரணிக்கும் வரை கணவருக்குரிய பணிவிடைகள் சகலதையும் மனம் கோணாது செய்ததுடன் பொறுமை, நிலைகுலையாமை போன்ற குண இயல்புகளுடன் விளங்கியமையால் எம் தந்தையைக் குடும்ப அழுத்தங்கள் பாதிக்காவண்ணம் பாத்திருந்தார். அத்துடன் இவரின் கவிதைகள், கட்டுரைகள், ஆய்வுநூல்கள் அனைத்தையும் தன் சிந்தனை வேகத்திற்கேற்ப எழுதிவிட்டுச் சென்றிடுவார். அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து தெளிவாக எழுதுகின்ற பொறுப்பு எம் அன்னைக்கு மட்டுமே உரியதாக இருந்தது. எனவே இல்லற வாழ்விலும், இலக்கிய வாழ்விலும் இவர் பெற்ற வெற்றிக்கு எமது தாயும் பிரதான காரணமெனலாம்.

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியையான மகள் கௌசல்யா (துளசி) கலைமாணிப்பட்டம் பெறுவதற்கும், வயலினில் சங்கீதகலாவித்தகர் பட்டம் பெறுவதற்கும் எமது தந்தையே

ஊக்கமளித்தார். அத்துடன் அல்வை ஆசிரியர் துரைராசா - நாகேஸ்வரி தம்பதியனரின் சிரேஷ்ட புதல்வனான, மொரட்டுவைப் பல்கலைக்கழகப் பொறியியல் பட்டதாரி சத்தியலிங்கம் அவர்களைத் திருமணம் செய்துவைத்தார்.

முதுகலைமாணிப் பட்டம் பெற்ற இளையமகள் மாதவிக்கு (மாது), கம்பர்மலையைச் சேர்ந்த மார்க்ஸ்சிசக் கொள்கையும் இலக்கிய ஈடுபாடும் கொண்ட சிவநேசன் - சந்திரலீலா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வன் ஸ்கொட்லன்ட், அபேடின் பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரி சிவலீலன் அவர்களைத் திருமணம் செய்து கொடுத்தார்.

இவ்விரு குடும்பங்களும் லண்டனில் வசித்து வருகின்றன.

யாழ் பல்கலைக்கழகத்தில் கல்விகற்று, கொழும்பில் புள்ளிவிபர உத்தியோகத்தராகப் பணியாற்றும் சிரேஷ்ட புதல்வன் பூங்குன்றனுக்கு சங்கீதபூஷணம் பத்மலிங்கம் - வசந்தாதேவி அவர்களின் சிரேஷ்ட புதல்வி இசைக்கலைமாணி சங்கீதாவை திருமணம் செய்து வைத்தார்.

லண்டனில் கணக்கியற் துறையில் கல்வி பயிலும் கனிஷ்ட புதல்வன் திருப்பரங்குன்றனின் திருமணம் காண விரும்பியிருந்தார். ஆனால் காலம் வலியது. எனினும் தந்தையின் ஆசீர்வாதம் அம்மகனுக்கு என்றும் இருக்கும்.

தன்விருப்போடு செய்துவைத்த திருமணங்களால் நிறைவு கண்டவர், பேரப்பிள்ளைகளான ஷைந்தவன், சுருதி, லக்ஷமி, சேயோன், சாருகன் ஆகியோரிடத்தில் உயிரையே வைத்திருந்தமையால் இறுதிவரை அவர்கள் மத்தியில் அன்புப் பேரனாக வாழும் பாக்கியத்தை இறைவன் கொடுத்திருந்தார். நோய்வந்தபோதும் அவற்றை மறந்து பேரப்பிள்ளைகளோடு கதைபேசி, உலாவி, அன்பு முத்தங்கள் கொடுத்து, அரவணைத்து வாழ்ந்த வாழ்க்கை இப்பூமியில் அவருக்குக் கிடைத்த சொர்க்கம்தான். ஈழத்தில் வசித்த தன் சந்ததிப் பேரனைப் போய்ப் பார்ப்பேன் என நம்பியிருந்தார். முடியவில்லை. ஆனாலும் அவனிடத்தில் ஆசையோ கோடி கோடி.

தன் மூன்று மருமக்களையும் மகன், மகள் என்றே அழைத்ததனால் அவர்களுக்கு அன்பு மாமனாராக என்றுமிருந்தார். அவர்களும் அவரைப் பெற்ற தந்தைக்கு மேலாக அன்பு பாராட்டியதுடன், நோயுற்றவேளைகளிலும் அவரது சகல கடமைகளையும் தாமே பொறுப்பேற்றுச் செய்திருந்தனர். இது எம் தந்தை செய்த பயனே.

வாழுமட்டும் உயர்வாழ்வு வாழ்ந்த தந்தை இல்லற வாழ்விலும் இலக்கிய வாழ்விலும் 'எறித்த முழுநிலாத்தான்'. இவர் ஏற்றத்தாழ்வுகள் பார்த்து யாரோடும் உறவுகொண்டாடியதில்லை. அதுதான் அவரது பலம். உயர்ந்த சிந்தனைகளும், மேலும், மேலும் முன்னேறவேண்டுமென்ற ஆர்வ மிகுதியும், உயர் பண்புள்ள நண்பர்களும், உறவுகளும் இவரோடு இரண்டறக் கலந்திருந்தமையால் எல்லா வரமும் பெற்ற பூரண மனிதனாக வாழ்ந்து மறைந்தார்.

வைத்தியசாலையில் இருந்த காலத்திலும் எங்களுக்கு நம்பிக்கையூட்டினார். "எல்லாம் நன்மைக்கே", "முருகன் கைவிடான்" என்பன இவரது தாரக மந்திரங்களாகும். கண்கலங்கிய போதெல்லாம் "சந்தோசமாக உள்ளேன் போய்வாருங்கள்" என எம் சந்தோசத்தில் அக்கறை கொண்டார். இன்று எம்மை அழவைத்துவிட்டு ஆகுதியாகியதை எண்ணிக் கலங்குகின்றோம். அந்த இறுதித் தருணங்களை எண்ணிப்பார்க்கின்றோம். எல்லா நிகழ்வையும் சிறப்பாகச் செய்து முடிப்பவர் அன்றும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், மைத்துனன், நண்பர்கள் சுற்றி நின்ற வேளை ஒரு கனிவான பார்வையோடு விடைபெற்ற காட்சி . . . அப்பா நீங்கள் சகல நிறைவும் பெற்ற பூரண மனிதன். உங்கள் ஆத்ம சாந்திக்காக சந்நிதிமுருகனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

பாடும் குயிலோன் பார்புகழும் நல்லறிஞன்
மூடும் விழியென்றும் மூடாது எந்நாளும்
ஓடும் நதியாய் ஓசைதரும் நல்யாழாய்(க்)
கூடும் குலவும் குன்றின்மேல் ஒளிவீசும்

# காரைநகர் தந்த கற்பகதரு

**சிவத்திரு. க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள்**
காரைநகர் ஈழத்துச்சிதம்பரம்

ஆயிரம் வருடங்களுக்கு முன்னர்,

“இம்மென்னு முன்னே யெழுநூறு மெண்ணூறும்
அம்மென்றா லாயிரம்பாட் டாகாதோ ~ சும்மா
இருந்தா விருந்தே னெழுந்தேனே யாயின்
பெருங்காள மேகம் பிளாய்”

என்று பாடியிருந்தார் காளமேகப் புலவர். இந்த வகையில் வாழ்ந்து அறிஞர்கள் பலரின் பாராட்டைப் பெற்று விளங்கியவர் அண்மைக் காலத்தில் எம்மைவிட்டுப் பிரிந்த கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் என்பது ஒரு சிறிதும் மிகையாகாது.

பட்டிமண்டபங்களிற் கலந்துகொண்டு தருக்கரீதியாக உரையாடி மாற்றுக் கொள்கையுடையவர்களைத் திணறச் செய்த பெருமைக்குரியவர் கவிஞர் சுந்தரம்பிள்ளை அவர்கள்.

அவர் எழுதிய நூல்கள், இயற்றிய பாடல்கள், பெற்றுக்கொண்ட விருதுகள் என்பனவும் அன்னாரின் நடிப்புத் திறமையும் பிள்ளை அவர்களை எப்பொழுதும் ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கும்.

குடத்துள் விளக்குப்போலன்றிக் குன்றிலுள்ள தீபமென வாழ்ந்த இப்பெரியார் கல்வி உலகின் கற்பகதருவாகத் திகழ்ந்து வந்தார்.

இப்பேரறிஞரின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவது இலகுவான செயலன்று. கவிஞரின் ஆன்மா கூத்தப்பிரானின் குஞ்சித பாதத்தின் கீழிருந்து இன்புறுவதாக.

# தமிழ்த்தேன் பிளிற்றிய தானைத் தலைவன்

**கோ. சி. வேலாயுதம்**
முன்னாள் கல்விப்பணிப்பாளர்
190, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம

அடக்கமும், அன்பும், அறிவும், தெளிவும் ஒருசேரக் கண்ட தமிழன் காரை. மண்ணை நேசித்த பாங்கின் முத்திரை காரை சுந்தரம்பிள்ளை என்ற பெயரின் முன்னுள்ள காரை எனும் சொல். 'பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும்' என்ற பாரதியின் வாக்கிற்கு உயிர் தந்த உத்தமன்.

அக்கினி தோன்றும் ஆண்மை வலியுறும்
திக்கெலாம் வென்று ஜயக்கொடி நாட்டலாம்
கட்செவி தன்னைக் கையிலே எடுக்கலாம்
விடத்தையும் நோவையும் வெம்பகை யதனையும்
துச்சமென் றெண்ணித் துயரிலா திங்கு
நிச்சலும் வாழ்ந்து நிலைபெற் றோங்கலாம்

என்ற வரகவியின் வாக்கிற்கு வரைவிலக்கணமானவர். பன்முக ஆற்றலும் பார்வையும் பெற்ற சுந்தரனார் தமிழ்ப் பூங்காவில் சிறகடித்து ரீங்காரம் செய்த தேனீ. தமிழர்களின் முதுசொம் ஆன முத்தமிழை ஆழ அகல அளந்த கண்ணன்.

கவிதை வானிலே தோன்றிய விடிவெள்ளி. தேனாறு எங்கள் சிந்தை இனிக்கச் செய்த செந்தமிழ்ச் சிற்பி. ஆறுதல் அளிக்க ஆறு கவிதைநூல் தந்த ஆற்றலின் ஏறு.

ஆசிரியனாய், அதிபராய், விரிவுரையாளனாய், கல்விப்பணி செய்த புண்ணியப் பேராளன். கவியரங்குகள், பட்டிமன்றங்கள், மேடைப் பேச்சுக்கள் நண்பனை நற்றமிழ் வல்லாளன் என்ற உச்சிக்கு உயர்த்தியது.

சிறு வயது முதலே நாடக ஈடுபாடு மிக்கவராய் காலிற் சதங்கை கட்டி தென்மோடி நாடகங்களை அரங்கேற்றினார். நடிகனாக, இயக்குநராக, நாடக எழுத்தாளராக எல்லாம் பிரகாசித்த கலைமேதை. பிரகலாதன் வேடம் அமரருக்கு ஆளுமைத் தெறிப்பை - கலைக் காதலை

வெளிப்படுத்தி நின்றது. பாஞ்சாலிசபத ஆட்டக்கூத்தை அவர் நடித்து இயக்கி அரங்கேற்றியமை அழியா அழகாய் அகத்தை நிறைக்கும். இருபதுக்கும் மேற்பட்ட சமூக, புராண, வரலாற்று நாடகங்களை எழுதியும், இயக்கியும், சிலவற்றில் பாத்திரமேற்றும் அரங்கேற்றிய திறமைசாலி.

இரட்டை முதுகலைமாணி, வடஇலங்கை நாட்டார் அரங்கு என்ற பொருளில் அமைத்த ஆய்வு நூல் அன்னாருக்குக் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொடுத்தது. அன்னாரின் நுண்மாண் நுழைபுலத்து அறுவடைகளாக நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும், ஈழத்து இசைநாடக வரலாறு, இந்துநாகரிகத்திற் கலை, சிங்களப் பாரம்பரிய அரங்கம் என்பன விளங்குகின்றன.

சுந்தரத் தமிழில் நனைந்த சுந்தரம்பிள்ளை ஐந்து இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசில்களைப் பெற்றார்.

அகிம்சைவழி அரசியல்வாதி. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நெருங்கிய தொடர்பாளன். யாழ்ப்பாண மாநகரசபைக் கீதம் தந்த கவிக்குயில். அதற்கான பரிசைத் தட்டிக் கொண்ட கவிஞன்.

சிலப்பதிகார மாநாட்டில் கவிதைக்குப் பரிசுபெற்ற இருவரில் ஒருவர். புகழேணியின் உச்சிக்கே சென்ற மிச்சிடும் மேதை இன்றில்லை. பூதவுடலொடு, ஆயினும் புகழுடம்பொடு பொலிகுவாய் தமிழ் மண் நிலைக்குமட்டும். சான்றோர் போற்றும் சான்றோனே!

“வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு”

என்ற வள்ளுவர் வாக்கை எண்ணிப்பார்க்கிறேன். கடைசித் தமிழன் இருக்கும் வரை உன் நாமம் வாழும் என்ற ஆறுதலோடு விடைபெறுகிறேன்.

“ஆன்ற தமிழ்ப் புலைமை அரங்கதிரும் சொல்வன்மை
சான்றோன் எனக்கேட்ட சாத்வீகப் பேராண்மை
ஈன்றாள் நயங்கண்ட இரும்பிறவிப் பேராளன்
ஆன்றோர் வரிசையிலே அரசாட்சி செய்திட்டான்”

# யாரைக் கொண்டினி ஈடுசெய்குவம் . . .

பேராசிரியர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா
தலைவர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

காரை சுந்தரம் பிள்ளை லண்டனில்
காலமாகிய செய்தி காதினில்
'சாரை' புக்கது போலச் சென்றது
சாவு என்பது உன்னைச் சாருமோ?
ஆரைக் கூவி அழைத்திங் கழுவது
அருகிலே உன் குடும்பமும் இல்லையே
நீரைச் சிந்திஎன் கண்கள் வரண்டிட
நெட்டுயிர்ப் பினைக் காற்றி லனுப்பினேன்

ஆக்க லக்கிய ஆளுமையோடு நீ
ஆய்வுத் தேடலும் ஆற்றலும் பெற்றனை
'போக்கறுந்த' இப்பூமியை விட்டு நீ
போயிருந்தனை லண்டனில் நண்பனே!
நீக்கமற்ற நினைவுகளோ டந்த
நேரம் உந்தன் அருகிலிருந்திட
பாக்கியம் செய்தேனில்லை நண்பனே
பாவம் இப்படி ஆனதென் செய்குவன்!

பச்சை ஓலையைப் பாளையைப் பானையை
பனையினின்று பயன்தரு பண்டத்தை
மச்சுமாளிகை மண்டபம் தன்னில் வாழ்
மனிதர் செய்யும் குளறுபடிகளை(க்)
கச்சை கட்டிக் களவு, கரவுசெய்
கயவர் சேதிகள் பற்பல வற்றையும்
பொச்சம் தீரப் புனைந்த கவியெலாம்
பொழிந்து நின்றதைய் கவியரங்கங்களில்

வேறு

பாட்டும் கூத்தும் பயின்றவனே
    பற்பல ஆய்வுகள் செய்தவனே!
நீட்டும் கவிதைத் திறனாலே
    தீஞ்சுவை சொட்ட நல்லின்பம்
காட்டும்திறலோன் ‘காரை’ என
    கனிவாய் அழைத்து எமையெல்லாம்
வாட்டும் துயரில் தோயவிட்டு
    வழியில் பிரிந்தாய் வாழவோ சொல்?

கல கலப்பாகப் பேசி எங்கள்
    காதினில் தேனைப் பாய்ச்சுவை
சிலசில ‘பகிடிகள்’ இடைக்கிடையே
    சிந்திய முத்தெனத் தெளித்திடுவாய்
பல பல துறைகளில் பண்டிதனே
    பட்டங்கள் சூடிய மன்னவனே
வெலவெலத் தெம்மை ஏங்க வைத்து
    விரைவி லெங்கே சென்றாய் நீ

வேறு

காரை சுந்தரம்பிள்ளை யென்றொரு
    கவிஞன் எம்மிடை வாழ்ந்து போயினன்
ஊரை, நண்பரை, உறவைப் பேணியே
    உன்னதக் கவி சொன்ன நாயகன்!
யாரைக் கொண்டினி ஈடு செய்குவம்
    (ஆ)யாங்கள் செய்த தவக்குறைவாற் தமிழ்த்
தேரைத் தள்ளி விழுத்திய காலனைத்
    தெய்வமே நீ சபித்திடல் வேண்டுமே!

# கல்விமான் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை Ph.D. (Durham)
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

தமிழர் சமூகம் குறிப்பாக யாழ்பாணச் சமூகம் மிக அண்மைக் காலத்தில் அடுத்தடுத்துப் பல தமிழ் அறிஞர், கல்விமான்களை இழந்து, துயருற்று இருக்கும் வேளையில், கலாநிதி காரை சுந்தரம்பிள்ளையின் மறைவு பற்றிய செய்தி மேலும் கவலையளிப்பதாக உள்ளது.

யாழ்ப்பாணம், காரைநகரில் பிறந்து ஊர்ப்பற்றால் 'காரை' எனத் தன் ஊர்ப்பெயருடன் விளங்கும் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை இலண்டன் பல்கலைக்கழகக் கலைப்பட்டதாரி. கல்வியியலிலும், தத்துவஇயலிலும் இரு முதுகலைமாணிப் பட்டங்களைப் பெற்றவர். வடஇலங்கையின் 'பாரம்பரிய அரங்கு' என்னும் ஆய்வு மூலம் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர்.

சிறந்த கல்விமானாகிய அவர் ஆசிரியர், கல்வி நிர்வாகி எனப் பல மட்டங்களிலும் பணியாற்றியுள்ளார். யாழ் இந்துக் கல்லூரியில் நல்லாசிரியராக, காரைநகர் இந்துக் கல்லூரியில் சிறந்த அதிபராக, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராக, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் அதிபராக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வருகை விரிவுரையாளராகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மேடைப் பேச்சாளர், எழுத்தாளர், கவிஞர், கூத்து, நாடக நடிகர், நாடக இயக்குனர், ஆய்வாளர் எனப் பல நிலைகளில்

தன்னை மிகச் சிறப்பாக இனங்காட்டிய கலாநிதி காரை சுந்தரம்பிள்ளையின் கலை இலக்கியப் பணி விதந்து பாரட்டத்தக்கது. அவரின் ஆற்றல்களுக்கும், திறன்களுக்கும் அவரின் நூல்களே சான்று பகருகின்றன. இவ்வகையில் ‘சங்கிலியம்’, ‘தேனாறு’, ‘காவேரி’,‘பாதை மாறியபோது’ ஆகிய கவிதை நூல்களும் ‘ஈழத்து இசை நாடக வரலாறு’, ‘நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்’, ‘இந்துநாகரிகத்தில் கலை’, ‘சிங்களப் பாரம்பரிய அரங்கம்’, ‘ஈழத்து மலையகக் கூத்துக்கள்’ ஆகிய ஆய்வு நூல்களும் அவரின் ஆற்றலையும் கலையார்வத்தையும் பறைசாற்றி நிற்கின்றன.

அவர் இலங்கை சாகித்திய மண்டல இலக்கியப் பரிசுகள் பெற்றமை குறிப்பிடத்தக்கது. தமிழர் பாரம்பரியக் கலைகளில்மிக்க ஆர்வம் கொண்டு, அவற்றை எழுத்துருவிலும், நடிப்புருவிலும் வளர்ப்பதில் அவர் ஆற்றிய பணி பாராட்டுக்குரியது.

அவர் மனித நேயம் மிக்கவர். கால நேரமறிந்து பிறருக்கு உதவுவதில் முன்னிற்பவர். இத்தகைய சிறந்த அறிஞனை, பண்பாளனை இழந்து நிற்பது துயருக்குரியது. அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

## கலங்குதையா கழகங்கள்

காரை மண் பெற்றெடுத்த கவிஞனே
கண்ணீர் விட்டு கதறியழுகுதய்யா காரைத்தாய்
தன்னில் 'அ' எழுதினாயாம் அழுது புரண்டாயாம்
தாங்குதில்லை தன் இதயம் எனத் தவிக்கின்றாள்

பெற்றவர்கள் செல்லர் தங்கம்
பெருமையை தேடித் தந்தவர்கள் இன்றில்லை
காரைத்தாயாள் என்றும் இறக்க மாட்டாள்
காரைமகன் காவியமானகதை கற்சுவரில் பதித்திடுவாள்

பல்துறையில் வித்தகனாய் விளங்கினாய் பாரதியே
பாண்டித்தியம் கேட்டு பகன்றனர் காரைத்தாய்க்கு
படித்த இடம் சுட்டிக் காட்டி
பரந்தவெளியில் மூன்று பூவரசு நிழல்தனிலே தனிமையில்

அஞ்சலி கூட்டம் நடக்கின்ற போது
அந்தோ பூவரசு புலம்பியழுதது என்றால்
நாம் சும்மா இருப்போமா கவிஞனே சொல்லுமய்யா
நாதியற்று நம்கழகங்கள் கலங்குதய்யா காரைமகன் பிரிவு
கேட்டு

ஓம் சாந்தி. அன்னாரின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் தெரிவிக்கின்றோம்.

அம்பாள் சனசமூக நிலையம்
அம்பாள் விளையாட்டுக் கழகம்
பிட்டியொல்லை கிராம அபிவிருத்திச் சங்கம்
காரைநகர்

**Poobalasingham Book Depot**

Importers, Exporters, Sellers & Publishers of Books
Stationers and News Agents

202, 340, Sea Street, Colombo - 11. Tel : 00 94 (0)11 2422321, Fax : 00 94 (0)11 2337313 E-mail : pbdho@sltnet.lk

## சிறந்த கல்விமானை இழந்துவிட்டோம்

கல்விமானாகிய காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களின் இழப்புத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். சிறந்த ஒரு கல்விமானைத் தமிழ் பேசும் சமூகம் இழந்து தவிக்கின்றது. அவரது இடைவெளியை இலகுவில் ஈடுசெய்துவிட முடியாது. அவர் பல நூல்களை மாணவர்களுக்காக எழுதியுள்ளார். சிறந்த ஆய்வு நூல்களையும் சமுதாயத்திற்குத் தந்துள்ளார். அவர் நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது. நாம் வெளியிட்ட "சிங்களப் பாரம்பரிய அரங்கு" என்ற நூல் அவருக்கு மட்டுமல்ல எமக்கும் நற்பெயரைப் பெற்றுத்தந்தது. இலங்கையில் மிகச்சிறந்த கவிஞர்களுள் ஒருவராக மதிக்கப்பட்ட காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் பன்மொழிப் புலமையும், தொலைநோக்குப் பார்வையும் கொண்டவர். தான் எடுத்துக் கொண்ட பணியை மிகச்சிறப்பாகச் செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். என்றும் சிரித்த முகத்துடன் உலா வரும் அவர் நடமாடும் பல்கலைக்கழகமாகவே ஆசிரியர், மாணவர்கள் மத்தியில் தென்பட்டார்.

அவர் மீது அவரது மாணவர்கள் வைத்திருந்த அன்பை பத்திரிகைகளில் வந்த இரங்கல் செய்திகள் எமக்குப் பறைசாற்றுகின்றன. எனது தந்தை இறந்த போது அவரிடம் இரங்கல் செய்தி கேட்டிருந்தேன். எழுதியும் தந்தார். இன்று அவருக்கு நானும் இரங்கல் செய்தி எழுதவேண்டிய நிலை வந்துவிட்டதே என எண்ணும்போது இதயமே கனக்கிறது. மண்ணில் பிறந்த நாம் என்றோ ஒரு நாள் இறைவனடி சேரத்தான் வேண்டும் என எண்ணி ஆறுதல் அடைவோம். ஆனால் அவரது புகழ் அவர் எழுதிய நூல்களால் நிலைத்திருக்கும். அன்னாரை இழந்து தவிக்கும் அவரது மனைவி, பிள்ளைகள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

**ஆர். பீ. ஶ்ரீதர்சிங்**

# இணையற்ற இலக்கிய நண்பர்

**கவிஞர் வி. கந்தவனம்**
கனடா

"மச்சான்! சுயசரிதம் ஒன்று எழுதப்போறன். அதிலே உன்னைப்பற்றியும் நிறைய வரும்."

நண்பர் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தி கிடைத்தபோது, கடந்த ஏப்பிரல் மாதம் அவருடன் தொலைபேசி எடுத்துப் பேசுகையில் அவர் எனக்குத் தெரிவித்த மேலுள்ள சங்கதிதான் முதலிற் பளிச்சிட்டது. அதுவே கடைசியாக அவரது குரலைக் கேட்டதுமாகிவிட்டது.

மச்சான் என்றுதான் எப்பொழுதும் அழைப்பார். அந்த அளவுக்கு எமது நட்பு இரத்த உறவாகிவிட்டதொன்று.

உறவின் ஆரம்பம் 1966. அது யாழ் இலக்கியவட்டம் தொடங்கப் பெற்ற ஆண்டு அதற்கு முன்னரும் சில மேடைகளில் நாம் சந்தித்ததுண்டு என்றாலும் எமது நட்பு அகநகத் தொடங்கியது யாழ் இலக்கியவட்ட முயற்சிகளினாலேதான். தொடங்கப் பெற்று இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே எட்டு நூல்களை வெளியிட்டுச் சாதனை படைத்தது யாழ் இலக்கியவட்டம். சுந்தரம்பிள்ளையின் முதலாவது நூல் 'தேனாறு' அதன் 9ஆவது வெளியீடாக 1968 ஏப்பிரலில் வந்தது. அதில் அவரைப்பற்றி நான் எழுதிய அறிமுகவுரை இது:

> 'காரைநகர் தந்த திரு செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் கல்வி பயின்றவர். இருபது வயதிலேயே இலண்டன் பல்கலைக்கழக பீ. ஏ. பட்டம் பெற்றவர். தமிழ்த் தாத்தா கந்த முருகேசனாரிடமும், பண்டிதர் வித்துவான் க. கி . நடராசாவிடமும் பண்டைய இலக்கியங்களையும், இலக்கண நூல்களையும் நன்கு கற்றவர். சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளிலும்

தேர்ச்சிமிக்கவர். ஆங்கில, சமஸ்கிருத இலக்கியங்களில் நல்ல பாண்டித்தியமுடையவர். முன்னர் மலைநாட்டிற் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த சுந்தரம்பிள்ளை அவர்கள் இப்பொழுது வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் ஆசிரியப்பணி புரிந்து வருகிறார்.'

'திரு சுந்தரம்பிள்ளையின் கவிதைகளை எல்லாப் பத்திரிகைகளும் விரும்பி ஏற்கின்றன. சமூக சீர்திருத்தக் கருத்துக்களை இவரது கவிதைகள் பெரிதும் கொண்டிருக்கக் காணலாம். 1967ஆம் ஆண்டு பதுளை பாரதிக் கல்லூரி நடத்திய அகில இலங்கைக் கவிதைப் போட்டியில் முதற்பரிசாகத் தங்கப்பதக்கம் பெற்றவர். 'சுதந்திரன்' நடத்திய கவிதைப் போட்டியில் முதற்பரிசும் தமிழ்க் காங்கிரசு நடத்திய கவிதைப் போட்டியிற் சிறப்புப் பரிசும் பெற்றுத் தன்னை ஒரு நல்ல கவிஞராக நிலைநாட்டியவர்.'

'சமூக சீர்திருத்த இயக்கங்களில் நல்ல ஈடுபாடுகொண்ட திரு. சுந்தரம்பிள்ளை அவர்கள் ஒரு நகைச்சுவைப் பேச்சாளருமாவர். நல்ல தமிழ் அன்பர்; சிறந்த பண்பாளர்.'

கவிஞர்கள் பலரைக் காணலாம். ஆனால் பண்பு சான்ற கவிஞர்களைக் காண்பதரிது. நான் இலக்கியத் துறையில் நீண்ட காலம் பழகிய ஒரு நல்ல நண்பரை இழந்துவிட்டேன். தமிழ் உலகம் சிறந்த அறிஞரை இழந்துவிட்டது.

சுந்தரம்பிள்ளை, இ. நாகராசன், அரியாலையூர் வே. ஐயாத்துரை, கல்வயல் வே. குமாரசாமி ஆகியோரும் நானும் ஒரு குழுவாக அதிகமான கவியரங்குகளை நடத்தியிருக்கின்றோம். கவிதை இரசனையைப் பொதுமக்கள் மத்தியில் வளர்த்தெடுத்ததில் எமது பங்கு அளப்பரியது. கவியரங்குக்குப் பெரிதும் என்னைத்தான் தலைமைதாங்க விடுவார்கள். சுந்தரம்பிள்ளையை நான் அழைக்கும் கவிதையின் ஈற்றடிகள் இவை:

காரைசெ சுந்தரம் பிள்ளையைக் கேளாத
காது காதல்ல வென்றே
ஊரிலே பேசுவார் அத்தகைக் கவிஞரை
நேரிலே கேளும் இன்றே

இதனை ஒரு துள்ளல் நடையில் நான் கூறி முடிக்க, சுந்தரம்பிள்ளை எழுந்து ஒலிவாங்கியைப் பிடிக்க, கைதட்டல் ஓசை உற்சாகத்தைக் கொடுக்க, அவர் கவிதையைப் படிக்கக் கவியரங்கம் மக்களுக்கு விருந்தாக நடக்கும்.

சில அமைப்புகள் சுந்தரம்பிள்ளையையும் என்னையும் அழைத்து உள்ளூர்க் கவிஞர்கள் இருவர் அல்லது மூவரைச் சேர்த்துக் கவியரங்கங்களை நடத்துவதுமுண்டு. அவற்றையும் சேர்த்து நாம் இருவரும் 300இற்கும் அதிகமான கவியரங்கங்களில் சந்தித்த சாதனையாளராகின்றோம். அதுமட்டுமன்றி, பட்டிமன்றங்களிலும் ஒரு கலக்குக் கலக்கியிருக்கிறோம். இலக்கிய அமைப்புகள் ஆசிரிய சங்கங்கள் நடத்திய கருத்தரங்குகளிலும் பங்கு பற்றியிருக்கின்றோம்.

ஆசிரிய ஆலோசகர் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ், நாடக - அரங்கக் கல்வித் தகைமைச் சான்றிதழ் ஆகிய மூன்று தேர்வுகளுக்கும் ஒன்றாகச் சேர்ந்து படித்துச் சித்தி பெற்ற ஒருமைப்பாடும் எமக்குண்டு. நாடகக் கல்வி கற்ற காலத்தில் இருவரும் தெகிவளையில் 22, எபனேசர் பிளேஸ் என்ற முகவரியில் இரண்டு வருடங்கள் ஒன்றாகவே தங்கியிருந்த அனுபவமும் எமது நட்பை உச்சத்துக்குக் கொண்டு சென்றது.

நண்பர் சாந்துணையும் கற்றுக்கொண்டேயிருந்த கல்விமான். தொடர்ந்து படித்து M.Ed., M.Phil. ஆகிய பட்டங்களைக் கொழும்பிலும், Ph.D. பட்டத்தை யாழ்ப்பாணத்திலும் பெற்றுக் கொண்டவர்.

கலாநிதி சுந்தரம்பிள்ளை கல்வி வளர்ச்சிக்கும் தமிழ் வளத்துக்கும் அயராது உழைத்தவர். நம்பிக்கையோடு உழைத்தவர். ஊக்கம் இவரது உடன் பிறப்பு.

> 'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
> ஊக்கம் உடையான் உழை'

என்பது வள்ளுவர் பெருமான் வாக்கு. இவரது ஊக்கத்தால் தாமாக வந்து சேர்ந்த பதவியுயர்வுகள் பல. 1960இல் ஆசிரிய சேவையிற் சேர்ந்தவர், காரைநகர் இந்துக் கல்லூரி அதிபராகவும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராகவும், தலவாக்கலை

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றின் அதிபராகவும், திறந்தவெளிப் பல்கலைக்கழகம், யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின் இடைவரவு விரிவுரையாளராகவும் 37 வருடங்கள் கல்வித் துறைக்குச் சேவை செய்தவர்.

இலக்கிய ஆக்கங்களாகத் தேனாறு, சங்கிலியம், தவம், உறவும் துறவும், பாதைமாறியபோது, காவேரி ஆகியவற்றைத் தமிழுக்குத் தந்திருக்கிறார்.

சுந்தரம்பிள்ளை அவர்கள் சிறந்த கவிஞர் மட்டுமல்லாது. நல்லவொரு ஆட்ட நாட்டுக்கூத்து நடிகருமாவர். பல நாடகங்களில் நடித்த அனுபவமுடையவர். ஈழத்துக் கூத்து மரபை நன்கு அறிந்தவர். நாடகக் கலையைப் பல்கலைக்கழக மட்டத்திற் படித்தவர். அதனால் மிகுந்த தகைமையோடு நாடகத் துறையிலும் தனது கைவண்ணத்தைக் காட்டியிருக்கின்றார். சமூக சமய நாடகங்கள், ஆட்டக் கூத்துகள், சிறுவர் நாடகங்கள் எனப் பலவகையான நாடகங்களை மேடையேற்றியிருக்கின்றார்.

ஈழத்து இசைநாடக வரலறு, இந்துநாகரிகத்திற் கலை, நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும், சிங்களப் பாரம்பரிய அரங்கம், வடஇலங்கை நாட்டார் அரங்கு, ஈழத்து மலையகக் கூத்துக்கள் முதலிய ஆய்வு நூல்களால் நாடகத் தமிழுக்குப் புதுவாழ்வு தந்தவர். கலாநிதி சு. வித்தியானந்தன் வழியில் பேராசிரியர் மௌனகுருவையடுத்து ஈழத்து மரபு நாடகத்தை வளர்த்த பெருமை கலாநிதி சுந்தரம்பிள்ளை அவர்களுக்கே உரியது.

இவரது ஆக்கங்களில் தேனாறு, சங்கிலியம், ஈழத்து இசைநாடக வரலாறு, நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும், இந்துநாகரிகத்திற் கலை ஆகியன இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசுகள் பெற்றவை. இவற்றுள் சங்கிலியம் ஈழநாடு நாளிதழ் அதன் 10ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தையொட்டி 1970இல் நடத்திய காவியப் போட்டியில் முதற்பரிசைப் பெற்றதுமாகும்.

இந்து நாகரிகத்திற் கலை, நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் ஆகிய இரண்டுக்கும் வடகிழக்கு மாகாண சாகித்தியப் பரிசுகளும் கிடைத்துள்ளன. யாழ் மாநகர சபை 1982இல்

நடத்திய சபைக்குரிய கீதத்தை எழுதும் போட்டியில் சுந்தரம்பிள்ளையின் கீதமே தெரிவு செய்யப்பட்டது. அதற்கான முதற் பரிசும் அவருக்கு வழங்கப் பெற்றது.

இவ்விதம் விருதுகள் பல பெற்ற வித்தகக் கவிஞரும் அறிஞருமாகிய அரிய நண்பர் 21.09.2005இல் வீடு பேறு அடைந்துவிட்டார்.

செய்தி கிடைத்ததும் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் செயலாளர் திரு. த. சிவபாலு அவர்களுக்கும் தலைவர் திரு. நா. லோகேந்திரலிங்கம் அவர்களுக்கும் தெரிவித்தேன். அவர்கள் அனுதாபச் செய்திகளை ஊடகங்களுக்கு அனுப்பியுதவினர். நானும் 22.09.2005 வியாழக்கிழமை கலைஞர் இளையபாரதி அவர்களின் அழைப்பின்பேரில் அவரது கனடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலியிலும் எனது நண்பரின் பெருமைகள் பற்றிப் பேசினேன். 29.09.2005 வியாழக்கிழமை கீதவாணியில் 'அமரர் கலாநிதி செ. சுந்தரம்பிள்ளை' என்ற பொருளில் அஞ்சலிக் கவியரங்கம் ஒன்றும் நடத்தினோம்.

'எல்லாம் எப்பொழுதோ முடிந்த காரியம்' என்னும் யோகர் சுவாமிகளது மகா வாக்கியத்தை நினைவுபடுத்தி அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்பு மனைவியும் கல்லூரி அதிபரும் நாடக நெறியாளரும் சமூகத் தொண்டருமாயிருந்த சைவப் பெரியார் அமரர் க. முருகேசனார் அவர்களின் மகளுமாகிய இந்திராவதிக்கும் அரிய பிள்ளைகள் கௌசல்யா, மாதவி, பூங்குன்றன், திருப்பரங்குன்றன் ஆகியோருக்கும், மருமக்களுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் ஆறுதலைக் கூறிக்கொள்கிறேன்.

எனது அன்புக்குரிய இணையற்ற இலக்கிய நண்பரின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல சிவபுரத்தரசை இறைஞ்சுகிறேன்.

கவிவாணன் காரைசெ சுந்தரம்பிள்ளை
புவிவாழ்வுச் சாதனைகள் போற்றி – சிவபெருமான்
தன்னுலகந் தன்னில் தமிழ்வளர்க்க வென்றழைத்து
மன்னுபதம் ஈந்தான் மகிழ்ந்து.

# சிறந்த சொற்பொழிவாளனாய் எங்கள் ஆசான்

**தமிழருவி த. சிவகுமாரன்**

எனது ஆசிரியர் காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றேன். காரைநகர் தந்த பெருமகனாகத் தோன்றி தமிழ் கூறும் ஈழத்து நல்லுலகிற்குப் பெருமை சேர்த்த பேரறிஞனாய் விளங்கியவர். காரை என்ற அடைமொழியைக் கடைசிவரை தன்பெயருடன் இணைத்து வாழ்ந்த பேராசான். என்னை ஆரம்ப காலம் முதல் வாழ்த்தி, வளர்த்தெடுத்த குருநாதர். எனக்குத் 'தமிழருவி' என்ற பட்டம் வழங்கிய அன்று உடனிருந்து வாழ்த்தி வழங்கிய என் குருநாதர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அவர் கற்பித்த காலத்திலும் சரி, வெளி மேடைகளில் நாங்கள் ஏறத் தொடங்கிய நேரத்திலும் சரி எங்களை ஆசீர்வதித்து, நல்ல புத்திமதிகள் கூறி நெறிப்படுத்திய பெருந்தகை இவர். நறுக்கு மீசை, வகிடு பிரித்துப் படிய வாரிவிட்ட தலைக்கேசம், இடுப்பில் கட்டிய பெல்ற், நளினமாக நடக்கும் நடை, நடுவிரல்கள் இரண்டையும் மடித்துக் கதைக்கும் கதை, "தம்பி சிவா" என்று உரிமையுடன் அழைக்கும் குரல் என்றுமே மறக்க முடியாதவை.

நல்லாசிரியனாய், தனது காலத்தில் கவிதை உலகில் முடிசூடா மன்னனாய், நல்ல அதிபராய், நல்ல கணவனாய், பாசமிகு தந்தையாய், சிறந்த சொற்பொழிவாளனாய் விளங்கிய அறிஞர், அவ்வத்துறைக்கு அழகுசேர்க்கும் சுந்தரம்பிள்ளையாய் நிறைந்து நின்றார்.

அவரது நூல்கள் காலத்தில் அழியாதவை. கடைசியாக நான் அவரைச் சென்ற ஆண்டு லண்டனில் அவரது வீட்டில் சென்று பார்த்தபொழுது ஆசீர்வதித்து அணைத்துக் கண்ணீர் விட்டு "இனி உன்னை எப்பொழுது பார்ப்பேனோ" என்று கூறிய அந்த வார்த்தைகள் என் கண்களில் நீரை வரவழைக்கின்றன. ஆசிரியப் பெருந்தகையின் ஆத்மா தில்லைக்கூத்தனின் திருவடிகளில் சாந்தி பெறுவதாக.

# இரங்கற்பா

ம. செ. அலெக்சாந்தர்
(முன்னாள் விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை)
ரொறன்ரோ, கனடா

நிலை மண்டில ஆசிரியற்பா

காரை நகரின் கனிந்த கவிஞன்
காரைசெ சுந்தரம் பிள்ளை ஓர்மன்
ஆரமாம் பரிசு அனைத்தும் தங்கம்
தீரமாய்ப் பெற்ற பல்துறை வித்துவம்
பாரச் சுமைகளை மனிதத்தில் ஏற்றும்
சீரல் நோய்கள் அகற்றும் அமுதம்
கவியில் நயப்பும் சமநீதி காண்கும்
புவியோர் போற்றும் கவிஞனே காரையே!

காரை ‘சேரொடு’ கல்வியைப் பலாலியில்
சாரக் கற்பித்த வேளையிற் கண்டேன்
ஆரும் மதிக்க உதவும் உன்றன்
ஓரும் உயர்ந்த கல்விப் பண்பின்
பேராய் விளங்கி உழைத்தநீர் சுந்தரன்
தானும் வாழ்ந்து பிறரும் வாழ்வின்
காணும் அடைவிற் குழைக்கும் சீலநின்
தேனாம் இலட்சியக் கூர்மையும் செயலின்
பேணுகைக் குடமையும் உரியவன் காரைநீ!

செய்ந்நன்றி மறவாச் செம்மலே காரை
எந்நன்றி எவரும் ஆற்றில் பதிவை
உந்தன் நெஞ்சக் கல்மேல் எழுத்தாய்
சந்ததம் உதவும் நாகரட் ணம்சேர்

எங்கள் இருவரின் ஏற்ற குருவாய்
சங்கத மொழியை ஊட்டிய வழியை
எண்ணி அவரை என்றும் மதித்தமை
நண்ணும் காரைசேர் நன்றி நயப்பே!

வீட்டில் காரைசேர் காண்கும் போதில்
நாட்டினார் தமிழில் இலட்சியத் தாகம்
பிள்ளைபூங் குன்றன் திருப்பரங் குன்றன்
நள்ளும் துளசி மாதவி பேர்கள்
கொள்ளும் இந்திரா வதித்துணை உடனே
தெள்ளத் தெளிந்த கவிதை ஆக்கம்
வெள்ளம் போற்றமிழ் வேத விளக்கம்
கேட்ட வுடன்கவி எழுதும் காரைசேர்
நீத்தது தமிழுக்கு நிகரில் இழப்பே!

நல்ல அறிஞன் காரைசேர் கவிஞன்
வல்ல கலைஞன் ஆசார்க் காசான்
தொல்லை வினைகள் நீங்கி நீக்கியே
எங்கும் உளதாம் ஒளியில் சேரவே
தங்கும் இறையின் கருணை வேண்டும்
அலெக்சின் குடும்பம் அலகில் சோதியாம்
நிலையாம் மறையோன் வகுத்ததும் என்றுமே!

நேரிசை வெண்பா

தேற்றம்

இறைவனே எங்களுக்கு எல்லாமே என்ற
நிறையாம் கருத்தறிந்து நித்தம் - மறையோனாம்
காக்கும் சிவன்றாளைக் காரைசேர்க்காய் வேண்டுவதே
ஆக்கும் செபத்தியானம் ஓம்

## அன்பான மனிதன்

**கந்தையாபிள்ளை தங்கராசா**
காரைநகர் - இலண்டன்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்ற வானில் நலி சிறந்தனவே"

என்னும் முது மொழிக்கு ஏற்றவாறு தான் பிறந்த மண்ணை மறவாது தனது பெயருடன் சேர்த்துக் காரைநகருக்குப் பெருமை சேர்த்தவர் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள்.

காரை மண்ணில் பிறந்தவர்கள் விஞ்ஞானிகளாகவும், டாக்டர்களாகவும், உயர்நீதிமன்ற நீதியரசர்களாகவும், சட்டத்தரணிகளாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், பிரபல வர்த்தகர்களாகவும் விளங்கிய போதிலும் தனது எழுத்தாற்றல் மூலம் ஈழத்திருநாட்டிலும், இந்தியா, கனடா, ஐரோப்பிய நாடுகளிலும் தனக்கெனத் தனி முத்திரை பதித்தவர்.

கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை அவர்களிடம் கல்வி கற்காவிடினும், அவருடைய கல்விப் பணியை நன்கு அறிந்த வகையில் 2001 ஆம் ஆண்டு அவரது மகளின் இல்லத்தில் சந்தித்து அவரது சமயச் சொற்பொழிவை லண்டன் வாழ் சைவ அன்பர்கள் அறியும் வண்ணம் ஏற்பாடு செய்த பாக்கியம் கிடைத்ததையிட்டுப் பெருமை அடைகின்றேன்.

தமிழீழத்திலும், மலையகத்திலும் பல கல்விமான்களையும், முன்னணிப் பேச்சாளர்களையும் உருவாக்கிய மகான் என்னைத் தனது குடும்பத்தில் ஒருவர் போல் மதித்துத் "தம்பி தங்கராசா" என்று

அழைத்துச் சுக துக்கம் விசாரிப்பார். அவர் அம்மா என்று அழைக்கும் அவரது அன்புப் பாரியாரும், பிள்ளைகளும், மருமக்களும் அவரைப்போல் அன்பும் பாசமும் வைத்து என்னுடன் பழகுவார்கள்.

அவர் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் அவரது நண்பர் வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களை நினைவு கூறுவார். நான் ஈழத்துச்சிதம்பரத்துத் தில்லைக்கூத்தனின் பங்குனி உத்திரத் திருக்கல்யாண வைபவத் திருவிழா நடத்தச் சென்றபோது, அவரைப் படம் எடுத்துவந்து காட்டியபோது மகிழ்ந்து கண்கலங்கினார். அவர் இறுதியாக எழுதிய நூலில் அந்தச் சிவத்தலத்தை ஆண்டிகேணி ஐயன் நட்டகல் என்று குறிப்பிட்டிருந்தார்.

பண்பிலே தெய்வமாகவும், பாசமிகு தந்தைபோல் எல்லோரிடமும் பழகிய மகானை நாம் எப்பிறப்பில் காண்போம். அவர் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தி அடையும் வண்ணம் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

உ
# JAFFNA HINDU COLLEGE
## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம் (இலங்கை) Jaffna (Sri Lanka)

Tel.No.: 021-222-2431, Fax No.: 021-222-2553, E.mail: admin@jhc.lk, Web page: www.jhc.lk

| Principal | Deputy Principal | Deputy Principal |
|---|---|---|
| **A.Srikumaran.** | **L.Ongaramoorthy.** | **P.Maheswaran.** |
| B.A.Dip.in.Ed.SLPS I | B.A.Dip.in.Ed.SLPS I | B.Sc(Hons).Dip.in.Ed. |


## யாழ் இந்து நினைவிடை அமரர் காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இலங்கையில் புகழ் பூத்த கல்லூரியாக மட்டுமன்றி உலகில் இருக்கும் இலங்கையர் எவர்க்கும் நமது சொத்து எனப் பெருமை கொள்ள வைத்த கல்லூரியுமாகும்.

இக்கல்லூரி பெருமை மிக்க கல்விமான்களையும், ஞான சீலர்களையும் தன்னகத்தே அரவணைத்து ஆதரித்துப் பெருமை கொண்டது.

அந்த வகையில் இக்கல்லூரி ஆசான்கள் குழாத்தில் 1974 ஆம் ஆண்டு அமரர் காரை. செ. சுந்தரம்பிள்ளை அவர்களும் இணைந்துகொண்டார்கள்.அதனால் அமரர் காரை சுந்தரம்பிள்ளை அவர்களும், அவரினால் எமது கல்லூரியும் பெறற்கரிய பேறு பெற்றது.

தனது பணிக்காலத்தில் தன்னகத்தே வைத்திருந்த வித்தைகள் அனைத்தினையும் எமது கல்லூரி மாணவர்களுக்குப் பழுதின்றி அள்ளி வழங்கியதனால் ஆளுமையும், அறிவும் பெற்ற பலர் உருவாகுவதற்குக் காரணமானவர் ஆவார்.

பேச்சு, கவிதை நாடகம் எனப் பல துறைகளிலும் மாணவர்களை வழி நடத்திக் கல்லூரி மாணவர்களை முதன்மை நிலைக்கு இட்டுச் சென்ற பெருமையும் கொண்டார்.

பாடசாலையில் கற்பித்த காலத்து நல்லாசனாக மட்டுமன்றி நல்ல நண்பராக, சிறந்த ஆலோசகராக, வழிகாட்டியாக, நல்ல பண்பாளராக, உதாரண புருஷராக வாழ்ந்தவர் அமரர் காரை சுந்தரம்பிள்ளையாவார்கள்.

இந்துவின் நினைவுகளில் என்றும் அவர் நிலைத்திருப்பார்.

**இ. ஓங்காரமூர்த்தி** B.A., Dip.in.Ed.,SLPS-I
பிரதி அதிபர் – யாழ்பாணம் இந்துக் கல்லூரி

# அறிஞனாய் விளங்கிய எங்கள் பழைய அதிபர்

**மு. சு. வேலாயுதபிள்ளை**
(முன்னாள் அதிபர், தலைவர் – பழைய மாணவர் சங்கம்)
யா/கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வித்தியாலயம்,
(காரைநகர் இந்துக் கல்லூரி), காரைநகர்

'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு' என்பது குறள்

நேற்று இருந்தவர் இன்று இல்லை என்று கூறுகின்ற பெருமையுடையது இந்த உலகம். இதற்கேற்ப இருவாரங்களுக்கு முன் எமது கல்லூரி வெளியிடும் 'சயம்பு' மலருக்கு வாழ்த்தும் செய்தியும், 'புலம்பெயர்ந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்' என்னும் தலைப்பில் கட்டுரையும் அனுப்பியவர். மலர் வெளிவரும் முன் அமரராகிவிட்ட செய்தி கேட்ட அதிர்ச்சியும் தாளாத கவலையும் அடைகின்றோம்.

எமது கல்லூரியில் (1980) அதிபராக விளங்கியவர். கல்லூ ரியின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். தமது பெயருக்கு முன் எம் ஊர்ப் பெயரையும் சேர்த்து வைத்துள்ளதால் எமது ஊரையும் பெருமையடையச் செய்துள்ளார். நாடறிந்த கவிஞராக விளங்கிய இவர் சாகித்திய மண்டலப் பரிசுகளைப் பெற்றுக் கொண்டார். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபராகவும், பல்கலைக்கழகங்களில் பகுதி நேர விரிவுரையாளராகவும் விளங்கியவர். யாழ் இலக்கிய வட்டத்தில் பல வருடங்கள் செயலாளராகக் கடமையாற்றியுமுள்ளார். 'கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்ற கூற்றுக்கு இணங்க இந்தியா, ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற வேளையில் பல கருத்தரங்குகளில் கலந்து ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபட்டவர் ஆவார்.

கவிஞராக, நாடகக் கலைஞராக, பேச்சாளராக, கருத்துக்கள் வழங்கும் அறிஞராக விளங்கிய பெரியாரைப் பிரிந்து வருந்தும் தமிழ் கூறும் நல்லுலகிற்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பரக்கூத்தனை இறைஞ்சுகின்றோம்.

# ஆதர்ஸ புருஷர்

ப. சிவானந்த சர்மா B.A.(Hons.)
(கோப்பாய் சிவம்), சர்வானந்தமய பீடம், இணுவில

கவிஞர் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் பலவிதங்களில் எனக்கு ஆதர்ஸ புருஷராகத் திகழ்ந்தவர். முதலில் என்னால் எட்டப்படவே முடியாதவர் என நான் அண்ணாந்து பார்த்த அவர் பின்னர் எனது மிக நெருங்கிய நண்பர் என்று கூறக்கூடிய அளவுக்கு மிகவும் எளிமையும், அன்பும், பண்பும் வாய்ந்தவராக என்னோடு பழகியபோது நான் அடைந்த வியப்பும், பெருமையும், மகிழ்ச்சியும் இங்கு வார்த்தைகளில் அடக்கிவிட முடியாதவை.

கவிதைகளைப் படித்து இரசிக்கத் தொடங்கிய நானும், கவிதை எழுதிப்பார்க்கத் தொடங்கிய காலத்தில் கவிஞர் சுந்தரம்பிள்ளை அவர்களின் கவிதைகள் எனது உள்ளத்தை ஈர்க்கத்தொடங்கின. சிறுவர்களுக்காகவே நடத்தப்பெற்ற வெற்றிமணிப் பத்திரிகையில் கவிஞர் அவர்களின் கட்டுரைகளும், கவிதைகளும் இடம் பெற்றன. எனது ஆக்கங்களும் அப்பத்திரிகையில் வெளியாகத் தொடங்கின. அதனால் ஆர்வத்தோடு அவரது ஆக்கங்களை விரும்பிப் படிக்கலானேன்.

அக்காலத்தில் அறுபதுகளின் நடுப்பகுதியில் கவியரங்குகள் வெகு பிரபலமாக நடைபெற்றன. கவிஞர்கள் வி. கந்தவனம், அரியாலையூர் கவிஞர் வே. ஐயாத்துரை, சில்லையூர் செல்வராஜன், மதுரகவி இ. நாகராஜன் ஆகியோருடன் நமது கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களும் அரங்குகளில் கவி படித்து நம்மை மகிழ்விப்பார். பெண்மை கலந்த நளினமான குரலில் அழுத்தமான உச்சரிப்புடனும், மிகவும் கவர்ச்சியான மெய்ப்பாடுகள், முகபாவங்களுடன் அவர் கவிதை வாசிப்பது ஒரு தனிச்சிறப்பான விடயம். அவர் ஒரு சிறந்த நாடகக் கலைஞரும்கூட என்பது எனக்குப் பல காலங்களுக்குப் பிறகுதான் தெரியும். ஆனால் கவியரங்க மேடையிலேயே அவரை ஒரு நாடகப் பாத்திரமாக நான் கண்டதுண்டு.

சங்கிலியம், தேனாறு இரு நூல்களும் எனது உள்ளத்தில் நீங்காத இடம் பிடித்தவை. அவை சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றபோது அவர்மீது கொண்ட மதிப்புப் பல்மடங்கு பெருகியது. அதுவரை நான்

எழுதிப் பத்திரிகைகளில் வெளிவந்த கவிதைகளை ஒரு சிறிய கொப்பியில் கவிதைத் தொகுதிபோல் எழுதி அதன் அட்டையில் அதன்பேராக 'தேனோடை' என எழுதி மகிழ்ந்தேன். தேனாறு காட்டிய வழியில் எனது தொகுதி தேனோடையாகவாவது இருக்கும் என்ற நம்பிக்கை. இத்தனைக்கும் அப்போது எனக்கு வயது பதினாறு அளவில்தான் இருக்கும் என்பதும் அதுவரை நான் ஒருதடவையாவது சுந்தரம்பிள்ளை அவர்களுடன் உரையாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஏதோ ஒரு மேடையில் அவரிடம் "ஓட்டோகிராப்" வாங்கியது மட்டும் நினைவிருக்கிறது.

நான் உயர்தர வகுப்புகளில் இந்துநாகரிகம் கற்பித்தபொழுது கலை சம்பந்தமான பகுதிகளுக்கு அவரது 'இந்துநாகரிகத்தில் கலை' என்ற நூல்தான் பெரிதும் உதவியது. படிப்படியாக அவரது மற்ற முகங்களையும் நான் தெரிந்துகொள்ளவும், கூட்டங்களில் அவருடன் உரையாடவும் வாய்ப்புக்கள் கிட்டின. பல்கலை வேந்தர் என்ற பட்டம் சில்லையூர் செல்வராஜனுக்குரியது. இவருக்கும் அது பொருந்தும் என நான் நினைத்ததுண்டு.

ஆவரங்காலில் சிலகாலம் நான் வாழ்ந்தபோது எனது அயலவராக இருந்த மதிப்புக்குரிய ஆசிரியர் முருகேசு வாத்தியார் அவர்களின் மகளே கவிஞர் அவர்களின் மனைவியார் என அறிந்தபோது வியப்பும், நெருக்கமான உணர்வும் ஏற்பட்டன. அண்மையில்தான் அந்தப் பெருமகனை (முருகேசு வாத்தியார்) இழந்து அவர்பற்றிய நினைவுகளைப் பதிவு செய்திருந்தேன். அந்த மை காயுமுன் அவரது மருகர் கவிஞர் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை அவர்களும் நம்மைப் பிரிந்த செய்தி அதிர்ச்சியும், வேதனையும் தருவதாக அமைகிறது.

அவர் மிகக் கடுமையான நோயின் தாக்கத்திலிருந்து சிறிது விடுபட்டு மீண்டும் வழமை நிலைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் வேளையில் கடந்தவருடம் (2004) லண்டன் மாநகரிலே அவர் தமது பிள்ளைகளுடன் தங்கியிருக்கும் இல்லத்தில் அவரைச் சந்தித்து அவருடனும், அவர் மனைவியுடனும், இரு பெண்பிள்ளைகளுடனும் எனது மாணவனும், தந்தைபோலவே மிகச்சிறந்த கவிஞனுமாகிய அவரது மகன் திருப்பரங்குன்றனுடனும் உரையாடி மகிழ்ந்த நினைவு இன்றும் பசுமையாக என் உள்ளத்தில் உள்ளது.

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருடன் நானும் இணைந்துகொள்வதோடு அவரது ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கிறேன்.

# சுடரு மொளியெனச் சேர்ந்தனன் சொக்கனை!

பவானி தர்மகுலசிங்கம்
கனடா

காரைசுந் தரம்பிள்ளை கனிவான கவிஞன்
கற்றவை கணக்கில காவியம் படைத்தோன்
ஊரை உலகை உளம்நிறை இல்லகத்தியை
உன்னத மக்களை உடன் பிறந்தாரைப்
பேரை விளங்கவைக்கும் பெயரன் பெயர்த்தியரை
பேரன்புடை உறவினர் நண்பரைப் பிரிந்து
பாரதிர வைத்துமே நீள்பயணம் தொடர்ந்தனன்
பண்புசால் பாவலனைத் தமிழுலகம் இழந்ததே!

யாழ்இலக்கிய வட்டத்தின் யாப்பாக நின்றுமே
யதார்த்த செயலராய் முன்னின் றுழைத்து
ஆழ்கடலில் மூழ்கி அழகுமுத்துக் குளித்தல்போல்
அளவிலா நூல்களில் அரும்பொரு ளகழ்ந்து
ஏழுலகும் அறிந்திடும் ஏற்றமிகு ஆசானாய்
ஈடிலாப் புகழுடன் இம்மண்ணில் வாழ்ந்து
சூழ்ந்தநற் பேரறிஞர் சுற்றத்தார் போற்றச்
சுடரு மொளியெனச் சேர்ந்தனன் சொக்கனை!

இருபது வயதினில் இலண்டன் பட்டமேற்று
இணையிலாக் கல்வியில் எஞ்ஞான்றும் திளைத்து
கரும்பெனச் சுவைத்துக் கவிதைகள் படித்து
கண்ணென நூல்கள் கட்டாகப் பேணி
விரும்பிய பாதையெனத் தமிழரசில் இணைந்து
வெற்றிமிகு விடுதலை வேண்டியே விரும்பி
அரும்பணி யாற்றி ஆன்றோனாய் இலங்கியே
அனைத்து நெஞ்சிலும் நிலைத்து நின்றனன்!

கவிஞனாய் கலைஞனாய் கவின்மிகு ஆய்வாளனாய்
கல்லூரி அதிபராய் விரிவுரை யாளனாய்ப்
புவியெங்கும் போற்றிடும் முனைவராய் ஆசிரிய
பயிற்சிக் கலாசாலைப் பாங்கான முதல்வனாய்
நவில்தற் கரியநானி லமறியெழுத் தாளனாய்
நற்சிந்தனை மிக்கவுயர் நாட்டுப் பற்றாளனாய்
பவித்திரமாய்ப் பிறந்தபதி பேருடன் தானிணைந்து
பார்புகழ் காரைசுந்தரம் பிள்ளையாய்த் திகழ்ந்தனன்!

சாகித்திய மண்டலப் பரிசுகள் தாம்பெற்றுத்
தனக்குவமை யில்லாத் தகைசார் பாவலனாய்
பாகென இனிக்கும் பல்சுவைப் பேச்சாளனாய்
பசித்தோர்க்கு விருந்தோம்பும் வள்ளலாய் அறிவுத்
தாகம் தீர்க்கும் சான்றுடைத் தந்தையாய்
சத்திய சீலனாய்ச் சாலவும் விளங்கி
ஏகினன் இறைவன்தாள் இத்தரை நீக்கியே
ஈடிலாப் பெருமையி லெய்தினன் புகழுடல்!

தேனாறு சங்கிலியம் தெவிட்டாத காவேரி
தித்திக்கும் தவம் சீர்மையுறு காவியங்கள்
பேனாவில் மைதோய்த்துப் பெரிதாக வடித்தனன்
பெய்திடும் மழையெனக் கவிபல புனைந்தனன்
மேனாட்டுக் கவிஞரும் மெச்சிடும் புலவனாய்
மேதாவி யெனவே மேதினியிற் றுலங்கி
போனார் புண்ணியன் பாதங்கள் பற்றியே
பூமழை பொழிந்து வாழ்த்தினர் தேவரே!

இந்துநா கரிகத்தில் கலையொடு உயர்
ஈழத்து மலையகக் கூத்தகங்கள் இயற்றி
சிந்தனைக் குரியசிங்களப் பாரம்பரிய அரங்குடன்
சீர்மிகு ஈழநாடக வரலாறு யாத்துமே
வந்தனைபுரி வடஇலங்கை நாட்டார் அரங்குடன்
வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் வெளியிட்டு
முந்தித் திகழ்ந்தனன் முதன்மை ஆய்வாளனாய்
முடிசூட்டி நின்றனன் முத்தமிழ் வித்தகனாய்!

# மனிதனை, மாண்பினை, மண்ணை நேசித்த மாமனிதன் எங்கள் காரை

வே யுகபாலசிங்கம் (ஆசிரியர்)
B.A.(Hons), M.A., Dip.in.Ed.

"காரை என்ற புனைபெயர் தாங்கியே
கவிதை வானில் எறித்த முழுநிலா
ஊரைத் தன்னெழுத் தூழியத் தால்தமிழ்
உலகெலாம் நிலை நாட்டிய உத்தமன்
ஆர வாரமற்(று) ஆய்வுகள் செய்தவன்
அநுப வஸ்த்தன் ஆசிரியர் நடுவன்ஓர்
தாரகை எனப் போற்றிடத் தக்கவன்
தமிழ ரானவர் முதுசொம்நம் சுந்தரம்"

என்ற சோ. பத்மநாதனின் கவிதை வரிகள் மிகைப் படுத்திய கூற்றுகளன்று. கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை என விழிப்பதில் அவருக்கு விருப்பமில்லை. கவிஞர் காரை எனத் தன் பெயரைப் பொறிப்பதில்தான் இஷ்டம். மாணவர்கள் நண்பர்கள் மத்தியில் எப்போதும் உற்சாகத்தோடுதான் பழகுவார். அவரின் உற்சாகம் "டேய் தம்பி . . .", "டேய் மோனை . . .", "எடி புள்ளை . . ." என்ற வார்த்தைகளினூடாக வெளிப்படும். காரை சேர், என்றுதான் நாங்கள் அழைப்போம். வாஞ்சையோடு முதுகைத் தட்டிக் கொடுப்பார். ஆசிரியத்திற்கு இலக்கணமாக வாழ்ந்தவர். மாணவர்களின் தேவையை உய்த்தறிந்து உதவும் பண்பாளர். இந்து நாகரிகத்தைப் பல்கலைக் கழகப் புகுமுகவகுப்பு மாணவர்களுக்கும், வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் கற்பித்த நாட்களில், தமிழ் இலக்கியம், இலக்கணம், நாடகமும் அரங்கும், உளவியல் என அவரிடம் கேட்டறிந்து பயன் பெற்றவர்களே அதிகம். இலைமறை காயாக அவர் ஆற்றிய தொண்டுகள், சேவைகள் எழுத்திலடங்கா. கவிஞர் சோ. ப. கூறுவதுபோல்,

"ஆர வாரங் கடந்தவன் தன்முதுகு
ஆரும் ஏற அனுமதிக் காதவன்
ஈர அன்பினன் உதவிகள் செய்வதில்
ஈடில் லாதவன் நட்புக் கிலக்கணம்"

என எம்மோடு வாழ்ந்தவர்.

காரை சேர், இந்த மண்ணை, மானிடத்தை நேசித்தவர். நேசித்ததால் பல நெருக்கீடுகளுக்கும் ஆட்பட்டவர், நாம் எம்மவர்கள் பட்ட இன்ப துன்பங்களோடு இரண்டறக் கலந்தவர். இடப்பெயர்வுகள் இடந்தேடுதல், இரைதேடுதல், ஓடுதல், பதுங்குதல் என எல்லா வாழ்விலும் எங்கள் பெருமூச்சோடு இணைந்திருந்தவர். நட்புக்கு இனியவர். நட்புக் கொண்டோரிடம் தன்பலத்தையும் பலவீனத்தையும் கண்ணியமாகப் பகிர்ந்து கொண்டவர். நல்ல ஆசான், நயந்தேடும் சுவைஞர். பிழையெனின் பொறுத்திடாக் கட்டிளைஞர்.

1970 இல் கவியரங்கொன்றில் தொடங்கிய நட்பு அவர் லண்டன் மாநகர் செல்லும் வரை நீண்டது. அவரோடு சேர்ந்து பட்டப்படிப்பு விரிவுரைக்காக யாழ்ப்பாணத்திலிருந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குத் துவிச்சக்கரவண்டியில் பயணிப்போம். கிழமையில் இரண்டு நாட்கள், மாலை 2.30 மணியளவில் புறப்பட்டு, பொம்மைவெளி - காக்கைதீவு - அராலியூடாக வட்டு சென்று மாலை 7.00 மணியளவில் இல்லம் மீள்வோம். அந்த இனிமையான மாலைப் பொழுதில் கதிரவன் கடலில் மூள்கும் காட்சி, வயல்வெளி, நீரோடை, வரப்புகளில் மோனத்தவமிருக்கும் வெண்கொக்கு, இளந்தென்றல் என இயற்கையை நுகர்ந்தபடி மாங்குயிலின் சோகம் போல் அவருடைய கடந்த கால இறுவங்களை நுகரும் பெரும் பேறு பெற்றிருந்தேன். “வாழ்க்கையே ஒரு போராட்டந்தானே” என்பர். ஆனால் போராட்டமே வாழ்வாகச் சிலருக்கு அமைந்துவிடுகிறது. காரை, கவிஞர் என அழைத்தால் போதும் எனப் பல தடவைகள் கூறுவதன் அர்த்தம் அதுதான் போலும். சாகித்திய மண்டலம், ஆய்வு நூல்கள், கூத்தரங்கு, கவியரங்கு, பட்டிமண்டபம், நடிகர், எழுத்தாளர், இயக்குநர், ஆய்வாளர், விமர்சகர், சிந்தனையாளர், ஆசிரியர், அதிபர், விரிவுரையாளர், தலைவர். ஆலோசகர், அறிஞர் என அவர் வாழ்வில் எத்தனை நீர்க்குமிழிகள். இன்றைய தலைமுறை நம்புமா. இதில் ஒன்று போதுமே, மகா மகா மேதை எனப் பட்டம் சூட்ட. நுண்மான் நுழைபுலம் கொண்ட காரை ஐயாவின் நட்புணர்வு, தடித்தனமில்லாத சொல்லாடல், ஆழ்ந்தகன்ற பார்வை. பழகியவர்கள், நுகர்ந்தவர்களுக்கே புரியும். அவர் எம்மிடையே விதைத்துச் சென்ற அத்தனை விழுமியங்களும் தமிழ் உலகு உள்ளவரை நிலைத்திருக்கும். அவர் ஆன்மா சாந்தியடைய இறையருள் வேண்டுகின்றோம்.

## பன்முக ஆற்றலும் பார்வையும் பெற்ற சிந்தனையாளர்

**இ. சங்கர்**
'பாரதி பதிப்பகம்'

பன்முகப் பார்வையும், பன்முக ஆற்றலும் பெற்ற சிந்தனையாளர், கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள். 1938 ஆம் ஆண்டு காரைநகர், களபூமியில், கலை ஈடுபாடும், கொட்டகைக் கூத்துப் பயிற்சியும், அறிவும் மிக்க குடும்பத்தில் காரை சுந்தரம்பிள்ளை பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிற் பெற்றார்.

கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் உயர்தரதராதரப் பரீட்சைக்கான கல்வியை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் பெற்றார்.

இலண்டன் பல்கலைக்கழக இடைநிலைப் பட்டப் பரீட்சைக்கு யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பெற்றுத் தேறினார்.

இலண்டன் பல்கலைக்கழக கலைமாணிப் பரீட்சைக்கு அக்குவேனஸ் பல்கலைக் கழகக் கல்லூரியில் கல்வி கற்று முதற்தடவையிலேயே சித்தியடைந்தார்.

அக்குவேனஸ் பல்கலைக்கழகக் கல்லூரி மாணவனாக இருக்கும் காலத்திலேயே காரை இலக்கியப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

இலண்டன் பல்கலைக்கழகக் கலையியல் பட்டதாரியான காரை இலங்கையின் மத்திய பகுதியில் பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். சில ஆண்டுகளின் பின்னர் அவரது கல்விப் பணி யாழ் இந்துக் கல்லூரிக்குக் கிட்டியது.

யாழ் இந்து ஆசிரியராகப் பணியாற்றும் காலம் அவரது பணி பன்முகத் தன்மை பெற்றது.

ஆசிரியர், கவிஞர், மேடைப்பேச்சாளர் என்பதுடன் கல்வியியல் எழுத்தாளர் என்ற நிலையையும் எய்தினார். 1977 ஆம் ஆண்டின் பின்னர் சுமார் நாலு ஆண்டுகள் காரை செ. சு. காரைநகர் இந்துக் கல்லூரி அதிபராகப் பணியாற்றினார்.

பின்னர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராக நியமனம் பெற்றுக் கல்லூரிக் கல்வி வைப்பு முறையில் இருந்து விடுபட்ட காரை சிறிது காலத்தில் தலவாக்கலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபராக நியமனம் பெற்றார்.

தலவாக்கலையில் இருந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்த இவர் சில காலத்தில் அப்பயிற்சிக் கல்லூ ரி அதிபராக நியமனம் பெற்றுப் பின்னர் ஓய்வுபெற்றார்.

கல்வியியலிலும், தத்துவவியலிலும் இரு முதுகலைமாணிப் பட்டங்களைக் காரை பெற்றிருந்தார். நிறைவாக வட இலங்கையின் பாரம்பரிய அரங்கு என்ற பொருளில் அமைந்த அவரது ஆய்வு அவருக்குக் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொடுத்தது.

நாடகத்துறையில் ஈடுபாடு மிக்க குடும்பத்தில் பிறந்த காரை சிறுவயது முதலே நாடக ஈடுபாடு மிக்கவராகத் திகழ்ந்தார். காலில் சலங்கை கட்டித் தென்மோடி நாடகங்களை அவரே நடித்து அரங்கேற்றினார்.

நடிகனாக, இயக்குநராக, நாடக எழுத்தாளராக எல்லாம் நாடகத்துறையில் அவர் பிரகாசித்தார். 'இரணிய சம்ஹாரம்' என்ற ஆட்டக்கூத்தில் பிரகலாதன் வேடம் ஏற்று அவர் சலங்கைகட்டி அன்று ஆடியதுபற்றிப் பலகாலம் அத்துறை சார்ந்தோர் பிரஸ்தாபித்தமை குறிப்பிடத்தக்கது. கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பணியாற்றிய காலத்தில் பாஞ்சாலி சபதம் நாட்டுக்கூத்தை அவர் நடித்து, இயக்கி அரங்கேற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

சுமார் இருபதிற்கும் மேற்பட்ட சமூக, புராண, வரலாற்று நாடகங்களை எழுதியும், இயக்கியும் சிலவற்றில் பாத்திரம் ஏற்றும் அவர் அரங்கேற்றியுள்ளார்.

கவிஞர் என்ற நிலையில் சுமார் ஆறு நூல்களை வெளியிட்டுள்ளார். காவியங்கள் தனிப் பாடல்கள் என்றவகையில் நிறைய எழுதிய பொழுதும் அவை எல்லாம் நூல் வடிவம் பெறவில்லை.

நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும், ஈழத்து இசைநாடக வரலாறு, இந்துநாகரிகத்திற் கலை, சிங்களப் பாரம்பரிய அரங்கம் ஆகியவை அவரது ஆய்வுப் பணியின் அறுவடையாகும்.

இவரது ஐந்து நூல்கள் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவை.

கவியரங்கு, பட்டிமண்டபம் ஆகிய இரு துறைகளையும் யாழ்ப்பாணத்தில் ஜனரஞ்சகப்படுத்திய பெருமை காரை அவர்களையே சாரும். அவர்கூட இவ்வடிவங்களில் பங்குகொண்ட பலர் இன்று அமரர் ஆகிவிட்டனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி அரசியலில் நிறைந்த ஈடுபாடு கொண்ட கலாநிதி காரை அவர்களை கூட்டணி வேட்பாளராகக் கோப்பாய்த் தொகுதியில் 1977 ஆம் ஆண்டு நிறுத்துவதற்குப் பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. அந்தக் கோரிக்கையை ஏற்கக் காரை மறுத்துவிட்டார்.

சிறந்த சிந்தனையாளராக, பல்துறை அறிஞராக 67 அகவை வரை வாழ்ந்த கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழ் மக்களால் மறக்க முடியாதவர்.

## நினைத்துப் பார்க்கிறேன் அன்றைய நினைவுகளை . . .

முல்லை அமுதன் (ஈழம்)

எனது கிராமத்துச்சனசமூகநிலைய விழாக்களின் கவியரங்கங்களில் திரு சொக்கன், திரு. புதுவை இரத்தினதுரை, கவிஞர் வே. ஐயாத்துரை அவர்களுடன் அமரர் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை ஐயாவுடன் கவிதா நிகழ்வினை நிகழ்த்தியது . . .

பாரிய அரசமரங்களிடையே அவை வீசும் காற்றுடன் ஞானபாஸ்கரோதய சங்கத்தின் மண்டபத்தில் கவிச்சமர் ஆடுவோம் . . . அவரின் வீச்சமான கவிதைவரிகளை நண்பர்களுடன் சம்பாசித்து மகிழும் சுகானுபவங்களைப் பல வருடங்கள் கழிந்து பிரித்தானிய மண்ணில் சந்தித்த போது அந்நினைவுகள் சுமந்த கனவுகளைப் பரிமாறிய நேரங்களை, ஜின்னாவின் பண்டார வன்னியன் காவியம் நூலுக்கு வழங்கவெனப் பண்டாரவன்னியனின் தகவல்கள் வழங்கியபோது . . . வியப்பு அதிகம் ஏற்பட்டது.

வாழ்வில் பலதை, பலரை இழந்துவிட்ட சோகம் . . . இன்னும் . . . இன்னும் எழுதிட நினைத்திருந்த அவரின் உணர்வுகள் எனக்குத் தெரிந்திருந்தது. அமரரான அவரின் நூல்கள் மறுபதிப்புக் காணவேண்டும். பிரதிகளாய் உள்ளவற்றை அச்சில் தரவேண்டும் அதுவே நாம் அவருக்கு அல்லது அவர் எமக்காய் விட்டுச்சென்ற பணிகள். அவரின் குடும்பத்தாரின் இலக்கிய முயற்சிகட்கும் தோள் கொடுப்போம் . . . நம் தேசத்திற்கும் செய்கின்ற நல்ல பணியுமாகும்.

நன்றி.

34, Redriffe Road, Plaistow,
London E13 0JX

# கலைத் தாயின் தலைமகன்

வே. செல்வயோகன்
சுவிற்சலாந்து

கலைத்தாயின் தலை மகனே - தமிழ்
நிலை உயர்த்தி நீங்கா நினைவுகளாய்
சிலை உருவில் உனைக் காணவோ
வலை விரித்தான் செங்கோட் கடவுள்

கன்னலின் சாறும் கனியமுதும் கலந்து
பண்ணொடு பாக்கள் படைத்து - தமிழர்
கண்ணின்ற நாயகனாம் சுந்தரண்ணா நீவிர்
விண்சென்று நீடுபுகழ் கொண்டீரே ஐய

நாடகத்திற்குப் பாட்டுக் கேட்டு வந்தவர்க்கெல்லாம்
நயமுடனே அறுசுவை விருந்து கொடுத்துக் கையுடனே
ஆசு மதுர சுந்தர வித்தாரத்துடன் பாட்டுங்கொடுத்து
முத்தமிழ் தவழ்ந்துவரும் செஞ்சொற்கவியாய்த் திகழ்ந்தாயைய

மண்ணொளி பெற்றதையா உன் மணிக்குரல் கேட்டு
பண்ணெழில் பெற்றதையா உன் பாங்கான பாட்டில்
கண்ணொளி கெட்டதையா உனைக் காலன் கவர்ந்ததனால்
விண்ணொளி பெற்றதையா உன் புகழுடல் கண்டதனால் ஐய

பட்டங்கள் பல பெற்றுத் தெம்பாங்குத்
திட்டங்கள் தீட்டித் திடமான நூல்களாக்கி
எட்டிசையும் எழிலோடு ஏற்றிவிட்டு பூவுலகு
விட்ட வான்புகழ்ப் பகலவனாய் ஆனாயைய

இலக்கியங்கள் இயற்றுகின்ற இனியவனே
இசைக் கலைகள் ஏற்றம் பெறஏட்டில் வடித்தாய்
இல்லத்தாள் இந்துவை அழவைத்து - தமிழர்கள்
இதயத்தில் புகழ்நாட்டி நினைவில் நின்றாயைய

ஆசிரிய கலாசாலையில் அதிபராகி ஆறுதல் கண்டாய்
ஆசிரியகலாசாலைச் சமூகத்தால் மணிவிழாக் கண்டாய்
ஆறாததுயரில் தமிழ் உலகை ஆழ்த்திவிட்டுச் சாந்திபெற
ஆனைமுகன் அடிகண்டாய் புகழ் முடிகொண்டாயைய

உன்னோடு தமிழ் உலக நிகரிலாச் சகாப்தம் ஒன்று
பொன்னோடு பதித்ததையா - கலைவாணி கழல் நாடி
விண்ணோடு விரைந்த உன் புகழ் மணம் வானோடும்
மண்ணோடும் வளியோடும் ஒன்றாகி வாழ்வாய் ஐய

# கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை சில நினைவுகள்

கலாபூஷணம்
முல்லைமணி வே. சுப்பிரமணியம் J. P.

கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை அவர்களை நேரடியாகச் சந்தித்துப் பழகுவதற்குச் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பே அவரது கவிதைகளால் ஈர்க்கப்பட்டவன் நான். சில கவியரங்குகளில் அவர் வாசித்த கவிதைகள், அவரது கவிதை ஆற்றலையும் மிக லாவகமாக, சுவையாக அவற்றை அரங்கில் சமர்ப்பித்த பாங்கினையும் வெளிப்படுத்தின.

சுந்தரம் பிள்ளை அரங்குகளில்
சொல்லும் கவியிற் சுழன்றுவரும்
சந்தம் கருத்து சபைகவரும்
தக்கோர் தலைகள் அசைந்தாடும்

என கவிஞர் இ. நாகராசன் கூறியவை உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை என்பதை அவரைக் கவியரங்கில் கண்டோர் ஒப்புக்கொள்கின்றனர்.

ஒட்டுசுட்டானில் இடம்பெற்ற பாரதி விழாக் கவியரங்கிற்கு அவரை அழைத்திருந்தேன். கற்றோர் மாத்திரமன்றிச் சாதாரண மக்களும் அவரது கவிதைப் பாணியினால் ஈர்க்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

இவரது சங்கிலியம் காவியம் 1970 இல் வெளிவந்தது. இந்தக் காவியமே இவரது ஆக்கங்களில் நான் முதலில் பார்த்தது. இதே ஆண்டில்தான் எனது பண்டாரவன்னியன் வரலாற்று நாடகமும் நூலுருப் பெற்றது. காவியத்தைக் கருத்தூன்றிப் படித்தபோது நம்பிக்கை குலைந்து தளர்ந்து போயிருக்கும் ஈழத்தமிழர் யாவருக்கும். நம்பிக்கையும், தேசப்பற்றும், உரிமைக் குரலும் ஓங்க நாமிருவரும் முயன்றிருக்கின்றோம் என்று எண்ணினேன்.

ஈழத்தில் மரபுக்கவிஞர்களில் ஒரு சிலர் மட்டுமே யாப்பிலக்கணம் கற்றவர்கள். இவர்களில் முக்கியமானவர் கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை. தமிழ்ப் பேரறிஞர் கந்தமுருகேசனாரிடம் பல ஆண்டுகளாக இலக்கண, இலக்கியங்களைத் துறைபோகக் கற்றவர். காரிகை கற்றவர்கள் எல்லாம் கவிபாட முடியாது. இயல்பாகவே கவிதையாக்கும் இவருக்குக் காரிகை அறிவு துணைசெய்திருக்கிறது. வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம் என்னும் பாவகைகளையும் சிந்து, கண்ணி முதலான சந்தப்பாவினங்களையும் மிக அநாயாசமாகக் கையாளும் ஆற்றல் இவரிடம் இருக்கிறது. மோனை, எதுகைக்காகச் சொற்களைத் தேடிப்போகும் வழக்கம் இவருக்கு இல்லை. சொற்கள் இவரிடம் கைகட்டிச் சேவகஞ் செய்கின்றன.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களின் "சங்கிலி" நாடகத்தையொட்டி *(1956)* இந்தக் காவியம் புனையப்பட்டதாகக் கூறுகின்றார். இதனை வாசித்தபோது கவிச்சக்கரவர்த்தி கம்பன் கூறியிருப்பது நினைவிற்கு வருகின்றது.

தேவ பாடையில் இக்கதை செய்தவர்
மூவரானவர் தம்முளும் முந்திய
நாவினார் உரையின்படி நான் தமிழ்ப்
பாவினா லிது உணர்த்திய பண்பரோ

வால்மீகி இயற்றிய இராமாயணத்தைத் தான் தமிழ்ப்பாவில் யார்த்துள்ளேன் எனச் சத்தியம் செய்கிறான் கம்பன். ஆனால் வால்மீகி இராமாயணத்தையும், கம்பராமாயணத்தையும் ஒப்புநோக்கிப் பார்க்கும் போது பல முக்கியமான இடங்களில் வால்மீகி கிழக்கே சென்றால், கம்பன் மேற்கே செல்கிறான் என்பது புலனாகும்.

இதேபோல்தான் பேராசிரியரின் நாடகத்திலிருந்து காரை சுந்தரம்பிள்ளை விலகித் தனது தனித்துவத்தை நிலைநாட்டியுள்ளார். தேசிய ஒருமைப்பாடு சங்கிலி காலத்தில் இருந்தது என்பதனைக் காட்டுவதற்குச் சங்கிலி மன்னனுக்கும், சிங்கள மன்னன் மாயாதுன்னைக்கும் இடையே நட்புறவு இருந்தது, பரஸ்பரம் படையுதவி செய்துள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார். தனது சொந்த வரலாற்று ஆய்வின் பேறாகக் கிடைத்த புதிய தகவல்களைக்

காவியத்திற்குப் பயன்படுத்தியுள்ளார்.

பேராசிரியரின் நாடகம் ஒருசில மேடையேற்றத்தின் பின்னர் மறக்கப்பட்டுவிட்டது. அது மேடைக்கேற்ற வகையில் அமையவில்லை என்பது ஆய்வாளர் கருத்தாகும். 'சங்கிலியம்' காவியம் என்றும் தமிழ் மக்கள் நெஞ்சில் நிலைத்து வாழும்.

சங்கிலி மன்னனைக் காக்கைவன்னியன் காட்டிக்கொடுத்தான் என்று தனது நாடகத்தில் குறித்துள்ளார். "வன்னியான்களை நம்பக்கூடாது" என்னும் ஒரு வசனமும் நாடகத்தில் இடம்பெறுகின்றது.

காக்கைவன்னியன் என ஒருவன் இருந்ததற்கு வரலாற்றுச் சான்றில்லை. மயில்வாகனப்புலவரின் சிருஷ்டியே இந்தப் பாத்திரம். இப்பெயர் அண்மைக்காலம் வரை அரசியல் மேடைகளில் கேட்கப்பட்ட ஒன்று. நம்பிக்கைத் துரோகம் செய்த ஒருவனைக் காக்கைவன்னியன் எனக் கூறுவது மரபாகிவிட்டது. காக்கைவன்னியனை ஊர்காவற்றுறைத் தலைவன் எனக் கூறுகிறார் பேராசிரியர். வன்னியன் ஒருவன் யாழ்ப்பாண இராச்சியத்திலுள்ள ஊர்காவற்றுறைக்கு எப்படி அதிபதியாக முடியும்?

காரை சுந்தரம்பிள்ளையின் காவியத்திலும் காக்கைவன்னியன் இடம்பெற்றபோதும் அவன்காட்டிக் கொடுத்தவனாகச் சித்திரிக்கப்படவில்லை. அப்பா முதலியே சங்கிலியனைக் காட்டிக் கொடுத்தான் எனத் தெளிவாகச் சொல்கிறார். அப்பா முதலியின் மகள் கூற்றாக இங்கு செய்தி இடம்பெறுகிறது.

காட்டிக் கொடுக்கவென் தந்தையும் – இங்கு
காலா யிருக்கிறார் என்பதை – நானும்
கேட்டும் உயிரோடிருக்கிறேன் – என்ன
கேவலமான பிறப்படி

இவரது சந்தக் கவிதைகள் மஹாகவி பாரதியின் கவிதைகளை சில இடங்களில் விஞ்சி நிற்கின்றன.

தூதுவர் சொன்னதைக் கேட்டதும் – மன்னன்
துள்ளிக் குதித்து மெழுந்தனன் – அட
பேதைகள் என்றெமை எண்ணியா – நாடு
பிடித்தனர் அந்தப் பறங்கியர் – வந்த

பாதையைக் காட்டி உதைத்துமே - அந்தப்
பரதேசிக் கூட்டத்தை ஒட்டிட - தமிழ்ச்
சாதியின் வீரம் மறைந்த தா - இல்லைத்
தன்மான மற்றுத் தொலந்ததா

என்னும் பாடல் சங்கிலியின் தமிழ்ப் பற்றையும் நாட்டுப்பற்றையும் வீராவேசத்தையும் நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றது.

இவர் தனிக்கவிதை, நெடும்பாட்டு, காவியம் என்றெல்லாம் கவிதை இலக்கியம் படைத்துள்ளார். சொல்வளமும், ஓசை நயமும், கற்பனை வளமும் உடைய சிறந்த கவிஞர் இவர். இவரது தே-னாறு கவிதைத் தொகுதி, சங்கிலியம் காவியம், ஈழத்து இசைந-ாடக வரலாறு என்பன இலங்கைத் தேசிய சாகித்திய விருதினைத் தட்டிக் கொண்டன. பாதைமாறியபோது, காவேரி என்பன சமகாலப் பிரச்சினைகளைப் பொருளாகக் கொண்ட இவரது காவியங்கள்.

கவிதை உலகில் தனது முத்திரையை மிக ஆழமாகப் பதித்த கவிஞர் கல்வியுலகிலும் அளப்பரிய சாதனைகளைப் புரிந்துள்ளார். ஆசிரியராக, கல்லூரி அதிபராக, ஆசிரியர் கலாசாலை விரிவுரையா-ளராக, அதிபராக இவர் மகத்தான சாதனை ஆற்றியுள்ளார். நான் கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளரா-கப் பணியாற்றிய போது (1977 - 1986) சுந்தரம்பிள்ளை அவர்கள் விரிவுரையாளராகக் கோப்பாய்க்கு வந்தார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்தரமான கலை இலக்கியகாரர்கள் சங்கமிக்கும் கலைக்கூடமாகத் திகழ்ந்தது. கவிஞர் முருகையன், சொக்கன், பெனடிக்ற்பாலன், வீரமணிஐயர், குறமகள், வேல்ஆனந்தன், சிற்பக் கலைஞர் சின்னத்துரை என்று எல்லோரும் குழுமி இருந்து இலக்கிய சர்ச்சையில் ஈடுபடுவோம். நடைமுறை அரசியல் பேசுவோம். விழா எடுப்போம், நூல்கள் வெளியிட்டு வைப்போம். கவிஞர் சுந்தரம்ப-ிள்ளை அவர்கள் இலக்கிய சர்ச்சையில் தனது பங்களிப்பைச் செய்வார். பல நகைச்சுவைத் துணுக்குகளைச் சொல்வார். பயனுள்ள ஆலோசனைகளைச் சொல்வார். கலை இலக்கிய அநுபவங்களைப் பகிர்ந்து கொள்வோம்.

ஆக்க இலக்கியக்காரர்கள் பொதுவாக ஆய்வுத்துறையில் ஈடுபடுவதில்லை. செங்கையாழியானும், சொக்கனும் இதற்குப் புறநடை.

இதேபோல இலக்கியத்திறனாய்வாளர் என்று முத்திரை குத்திக் கொள்வோருக்கு ஆக்க இலக்கியம் வராது. கனகசெந்திநாதன் இதற்குப் புறநடை. இரண்டு துறைகளிலும் தனது ஆற்றலையும், ஆளுமையையும் வெளிப்படுத்தியுள்ளார் காரை சுந்தரம்பிள்ளை.

நான் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலிருந்து மாற்றம் பெற்று முல்லைத்தீவுக்குப் போய்விட்டபின்பும், என்னுடன் கவிஞர் பலமுறை தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டார். கோப்பாயில் இருக்கும்போது என்னைத் தனது இல்லத்துக்கு அழைத்து விருந்துபசாரம் செய்ததை மறக்கமுடியாது.

திடீரென்று ஒரு நாள் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திற்கு என்னைத் தேடி வந்தார். கலாநிதிப் பட்டத்திற்கு ஆராய்ச்சி மேற்கொண்டிருப்பதாகவும், முல்லைத்தீவுப் பகுதியில் நிலவும் மகுடிக் கூத்தினைப் பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்காக வந்ததாகவும் கூறினார். நான் எனக்குத் தெரிந்த தகவல்களைக் கூறினேன். அத்துடன் அவர் திருப்தியடையவில்லை. மகுடிக்கூத்தில் நேரடியாக ஈடுபட்ட கூத்தர்கள் சிலரைச் சந்தித்தேயாகவேண்டும் என்று அடம்பிடித்தார். எனவே முள்ளியவளை, தனியூற்றுக் கிராமங்களுக்கு அவரை அழைத்துச் சென்றேன். கூத்தர்கள் சிலருடன் கலந்துரையாடி நேரடியாகத் தகவல்களைப் பெற்றார். தமிழ் மக்கள் மாத்திரமன்றி முஸ்லிம் மக்களும் மகுடிக்கூத்து ஆடுவதை எப்படியோ கேள்விப்பட்டு விட்டார். எனக்குச் சொல்லாமலே தனியூற்று மிஸ்கின் புலவரைச் சந்தித்ததை அவர் மருதநிலா (வடக்குக் கிழக்கு மாகாண இலக்கிய விழா மலர் - 1996) சஞ்சிகையில் எழுதிய ஆய்வுக் கட்டுரை மூலம் தெரியவந்தது.

காரை சுந்தரம்பிள்ளையின் கவிதையாற்றல் ஆய்வுத்துறைச் சாதனை, அவரின்ஆளுமை, பழகுதற்கு இனிய பண்புபற்றி எவ்வளவோ சொல்லலாம். எனது எழுபத்தியிரண்டு வயதில் மறந்தவை போக எஞ்சியவற்றையே இங்கு பதிவு செய்துள்ளேன்.

## மாமா ஒரு கலங்கரை விளக்கு

**மணிகலாதன் பத்மாவதி**
பிட்டியொல்லை
காரைநகர்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத் திவ்வுலகு"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க நேற்றிருந்த மாமா இன்றில்லை. இது நியதி; இதனை எவராலும் மாற்றியமைக்க முடியாது. சின்ன மாமா காரை மண்ணிற்கு மட்டுமல்ல தம் இனத்திற்கும், காரை வாழ் அனைத்து மக்கட்குமே பெருமை தேடித் தந்தவர். உயிருடன் இருக்கும் வரை ஒருவரின் பெறுமதி பேணப்படுவதில்லை. மாமா மறைந்த பின்பு பத்திரிகையைப் படித்து வாயில் கை வைத்தவர்கள் உண்டு.

சின்னமாமா ஆசிரியர்கள் மட்டத்தில் மதிக்கப்பட்டவர். இன்று அதிபராக, நாடறிந்த கவிஞனாக, நாடகக் கலைஞனாக, பேச்சாளனாக, நல்ல கருத்துக்கள் கூறும் அறிஞனாக, பல பரிசில்கள் வென்றெடுத்த தீரனாக, பன்மொழிப் பண்டிதனாக எடுத்துக்கூறும் வல்லமைபடைத்த சின்னமாமாவின் மறைவினை எப்படிச் சகிப்போம். தாங்க முடியவில்லை. மாமா உங்கள் பிரிவால் உங்கள் வாழ்நாள் தான் குறுகிவிட்டது; உங்கள் பெருமைகளும் திறமைகளும் நீண்டு விட்டது. ஒருபுறம் வேதனை மறுபுறம் ஆறுதல். இருளில் வழிகாட்டும் கலங்கரை விளக்காக என்றும் ஒளி வீசுவார். மாமா என்னை மார்மேலும், தோள்மேலும் தூக்கி முத்தமிட்டதை மறப்பேனோ.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கண்ணகை அம்மன் அருள்வழங்கப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி.

# தமிழ்க் கல்வி, கலை, இலக்கிய உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு

இலங்கையன்
இ.வே.செல்வரத்னம்
கனடா

நான் யாழ்ப்பாணக் கல்லூரியிற் படித்து யாழ் சம்பத்தரிசியார் கல்லூரியில் ஆசிரியராய்ப் பணியாற்றிய காலத்தில், அதாவது ஐம்ப–துகளின் பிற்பகுதியில் காரைநகரைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை எனும் மாணவர் ஒருவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் கலைப்பட்டதாரி வகு–ப்பில் படிக்கின்றார் என்பதை அமரர் செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் பற்றி முதன் முதல் அறிந்தேன். பின்னர் தாயகத்தில் எழுத்துலகில் பிரபல்ய எழுத்தாளராக அறிந்தேன். இவரது எழுத்துக்களைப் பெ–ாறுத்தவரையில் கவிதைகள் மிகப் பிரபல்யமடைந்தன. அந்த வகை–கயில் அவர் கவிஞரானார். எழுத்துலகில் கவிஞர் காரை செ. சுந்–தரம்பிள்ளை என அழைக்கப்பட்டு வந்தார். கவிஞர் காரை என்றால் கவிஞர் சுந்தரம்பிள்ளை என்ற அளவிற்கு எழுத்துலகில் உயர்ந்து நின்றார். அவர் தாயகத்தில் தமிழ்க் கலை இலக்கிய மேம்பாட்டிற்கு ஆற்றிய பணி அளப்பரியது.

அவர் நாடகத்துறையில் ஆய்வுகளை மேற்கொண்டு ஆய்வு நூல்களை எழுதியதுமல்லாமல் நாடகங்களை எழுதியும், நடித்–தும் இயக்கியும், மேடையேற்றியுமுள்ளார். அவர் எழுதிய கலை இலக்கிய ஆக்கங்களான தேனாறு, சங்கிலியம், தவம், உறவும்–துறவும், பாதைமாறியபோது, காவேரி ஆகிய நூல்களும், ஈழத்து இசைநாடக வரலாறு, இந்துநாகரிகத்திற்கலை, நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும், சிங்களப் பாரம்பரிய அரங்கம், வடஇலங்கை

நாட்டார் அரங்கு, ஈழத்து மலையகக் கூத்துக்கள் ஆகிய ஆய்வு நூல்களும் அவரை என்றென்றும் எழுத்துலகில் வாழச் செய்யும்.

"ஆயிரத்தில் ஒரு கவிஞர்" என்று மறைந்த பேராசிர–யர் வி. செல்வநாயகம் அவர்களும், "காவியத்துக்கொரு காரை" என்று செந்தமிழ்மணி பொன். கிருஷ்ணபிள்ளை அவர்களும் அமரர் செ. சுந்தரம்பிள்ளை அவர்களைப் பாராட்டியுள்ளார்கள். அமரர் சுந்தரம்பிள்ளை அவர்களின் 'சங்கிலியம்' எனும் காவிய நூலுக்கு அணிந்துரை வழங்கிய யாழ் பல்கலைக் கழக மறைந்த துணைவேந்தர் வித்தியானந்தன் அவர்கள் பாரதிக்குப் பின்னர் சிறந்த காவியம் படைத்தவர்களுள் இவரும் ஒருவர் என்றும், இக்காவ–யத்தின் மூலம் ஈழத்துக் கவிஞர் வரிசையில் மிகவும் சிறப்பிடம் பெறுகின்றார் என்றும் பாராட்டியுள்ளார்.

இவர் வாழ்க்கையில் தன் சுயமுயற்சியாலேயே உயர்ந்தார். பதவிகளும் தாமாகவே அவரை வந்தடைந்தன. அவரது கல்வித் தகமைகளைப் பொறுத்தவரையில், 'வாழுந்தோறும் கல்வி' என்ற–தற்கமைய B.A., M.A., M.Phil., Ph.D. ஆகிய கல்வித் தராதரங்களை தன் சுய முயற்சியால் பெற்றுப் பாடசாலை ஆசிரியராகவும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராகவும், அதிபராகவும், இறுதியா–கப் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் பதவி உயர்வு பெற்றுப் பணியாற்றினார்.

இவரது நாடகத்துறை ஆய்வுகளை அறியவந்ததும், எம் முன்னோர்கள் ஆடிய பூதத்தம்பி, மீகாமன், அபிமன்னன் போன்ற துள்ளுக்கூத்துக்கள் அதாவது வடமோடி நாடகங்களுக்கான அழிந்து போகும் நிலையிலுள்ள ஏடுகளைப் பெற்று அவை அழிந்து போகா வகையில் அவற்றைப் பேணுவதற்கான வழி வகைகளைத் தேடும்படி கேட்டு நான் கனடாவிலிருந்து, அவர் யாழ்ப்பாணத்திலிருந்த பெ–ாழுது

கடிதம் ஒன்று எழுதினேன். அதைச் செய்வதற்கு ஆர்வம் இருந்–தும் நோய் காரணமாக அக்கருமத்தை அவரால் செய்யமுடியாமற் போய்விட்டது.

அவர் நோய்வாய்ப்பட்டு லண்டனுக்கு வந்து மகளுடன் வாழ்ந்த பொழுது ஒருமுறை அவரைச் சந்தித்தேன். அப்பொழுதே அவரது உடல் நிலை அவ்வளவு திருப்தியாக இருக்கவில்லை. தமிழ் எழு–த்துலகத்திற்கு எவ்வளவோ செய்தவர் எவ்வளவோ செய்யக்கூடியவர் இந்நிலையை அடைந்து விட்டாரே என்று மனதிற்குள் மிக வே–தனைப்பட்டேன்.

இன்று ஒரு கல்விமானை, ஒரு தமிழ் அறிஞரை, ஒரு தம–ிழ்க் கவிஞரை இழந்து நிற்கின்றோம். தமிழ்கூறும் உலகிற்கும், குறிப்பாக ஈழத்தமிழ்த் தேசத்திற்கும் இது ஈடு செய்யமுடியாத ஒரு பேரிழப்பாகும். இறப்பெல்லாம் அகச்சூழல், புறச்சூழல் ஆகியவற்றின் தாக்கத்தாற்தான் சம்பவிக்கின்றன என்பதை விளங்காமல், காலம் விதி என்று கூறி மனிதன் தான் விடும் தவறுகளுக்குப் பரிகாரம் தேடும் அதேநேரத்தில் மனத் தேற்றமும், சாந்தியும் அடைகின்றான். இவரின் மறைவால் துயருறும் மனைவி, மக்கள் மற்றும் உறவினர்களின் துயரத்தில் பங்குகொள்வதோடு ஆழ்ந்த அனுதாபத்தையும் என் சார்பிலும் என் குடும்பத்தின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# உன் பாட்டிற்கு ஓய்வேது!!

**நாகதர்மா**

முகவுரைக்கு முடிவுரை - நன்று
முடிவுரைக்கு முகவுரை - புதிது
காரை செ. சு. காலத்தின் - வரவு

மாலை மங்கலான நேரம் 7.45
மாலை கொண்ட மன்னவனின் கடைசி நேரம்
மௌனம், ஈரவிழிகள், ஏக்கம்

என் கண் இமைக்கு ஓய்வு - திறந்த கதவுபோல்
இடையறு நிலையில் இதயத்தின் ஒருபகுதி
ஆண்டவனை ஆராதிப்பதா! வஞ்சிப்பதா!

செவ்வாயில் பசுமையாம், சந்திரனில் குடிமனையாம்
இல்வாழ்வில் இவர்வீட்டில் மீண்டும் வராதா
என் இதயத்தில் மௌனம்

காவியத் தலைவனின் ஓவியக்கண்களில் வீச்சு
நெற்றியில் நிமிர்ந்த கோடு - மீண்டும்
ஆராய்ச்சி மன்றில் களமேறிய தோற்றம்

என் இதயத்தில் ஆங்காங்கே பேராசைகள்
வசந்தம் வாராதா!
வசந்தகாலத்தின் முற்பதிவு
அத்தியாயம் 68 இன்
இருபத்தெட்டாம் பாகம் - 1964
என் உறவுக்கு மாமன்
வடக்கில் புதிய தென்றல்

அரசியல் அரங்கில் புதிய கவிப்புயல்
காரை செ. சு.

கல்விக் கூடங்களின் கனிப்பொருள்
கலைக் கூடத்தில் கலைப்பொருள்
கன்னிக் காதலர்க்கு கவிப்பொருள்
கல்வி மான்களுக்கோ துணைப்பொருள்
பயிற்சிக் கல்லூரிக்கு முதற்பொருள்
பல்கலைக் கல்லூரிக்கோ புதைபொருள்
அரசியல் அரங்கத்தில் தமிழ்ப் பொருள்
தமிழாராய்ச்சி மன்றத்தின் தலைப்பொருள்
தமிழர் மத்தியில் தவப்பொருள்
இலங்கைக்கோர் தேசியப் பொருள்

ஆயிரம் பொருள்படும் காரை செ. சு. வோ
அடக்கத்தின் அதிபதி, அன்பினில் தலைவன்
பண்பின் இருப்பிடம் நல் மனதின் மலையவன்
அறிவில்லார்க்கு அறிவிடம்
இல்லாதார்க்கு உறைவிடம்
மொத்தத்தில் இவர் ஓர் நிறைகுடம்

பள்ளிப் பருவத்தில் சின்ன சயிக்கிளில் - இவர்
வீடடைந்தால் என் கண்களில் தேடல் - சின்னக்
கவிஞனின் கிறுக்காத கவிகளும் சிறுக்கா பட்டங்களும்

ஆயிரம் சட்டங்கள் அரசு வைத்தும்
காகிதம் கொண்டு காடு மேடு அலைந்து
தேடுதல் தேடி மலையகம் கிழக்கு

மதுரை மற்றும் அயல் நாடுகள் நாடி
பாடுகள் பட்டு பல ஆராய்ச்சி கண்ட
காரை செ. சு. வே!

தமிழன்பால் தமிழின்பால் காதல் கொண்டவனே!
அதிசயம் அதிசயித்த தமிழன் நீ!
ஆச்சரியம் ஆச்சரித்த தமிழன் நீ!

ஆர்டிக் விழிகளில் செந்நீராம்
ஐம்பது வருடத்தில் இழவாம்
நியதியது
உன்பாட்டுக்கு ஓய்வெடுத்ததற்கு
ஊரெல்லாம் அஞ்சலியாம், அழுகையாம்
இதுவும் நியதியா?
உன் பாட்டிற்கு ஓய்வேது!!

வாழ்வியல் இலக்கணம் செய்தவனே
வாழ்க்கையுடன் என்ன விவாகரத்தா

பாசமுடன் உன்னைப் பாதுகாத்த மனைவியும்
நேசமுடன் உன் மடியில் உறங்கிய பிள்ளைகளும்
நட்புடன் பழகிய நண்பர்களும்
பெருமையுடன் உறவென்ற உறவுகளும்

உன் பிறப்பால் பெருமையும்
உன் உறக்கத்தால் . . .

## சிறந்த சமூகசேவையாளரை ஈழத்தமிழினம் இழந்து நிற்கிறது.

**மகாலிங்கம் சுதாகரன்**
விழா அமைப்பாளர் – 'பூபாளராகங்கள்'
சர்வதேச ஒருங்கிணைப்பாளர்,
பழைய மாணவர் சங்கம்,
கம்பர்மலை வித்தியாலயம், கொம்மந்தறை ஐக்கியராச்சியம்

"உலகெலாம் ஒரு பெருங்கனவு – ஆஃதுளே
உண்டு உறங்கி இடம்செய்து செத்துடும்
கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கையோர்
கனவிலும் கனவாகும்"

என்றார் பலர் போற்றும் பாரதக் கவி பாரதி. 'மனித வாழ்வு நிலையற்றது' என்ற உண்மையைப் பல பாவலர்கள் பாடி விட்டுச் சென்றுள்ளனர். மானுட வாழ்வு நிலையில்லாதது என்பதை நாம் அறிந்திருந்தாலும் கூடச் சிலரின் மரணங்கள் பலரைப் பாதிக்கத்–தான் செய்கின்றன. அவ்வாறு பலரைப் பாதிப்பதாக ஏன், ஈழத்தமிழர் இலக்கியத்தின்பால் ஈர்க்கப்பட்ட அனைவரையுமே பாதிப்பதாக அமரர் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளையின் மறைவு அமைந்துள்ளது.

நல்ல ஆசிரியராய், கண்டிப்பான அதிபராய், கருத்தாழமுள்ள கவிஞராய், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபராய், வீரியமான விரி–வுரையாளராய், பேச்சாளராய் விளங்கிய சிறந்த சமூகசேவையாளரை ஈழத்தமிழினம் இன்று இழந்து தவிக்கிறது. இவரது இழப்பு தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

லண்டனில் 'புதினம்' பத்திரிகையின் ஏற்பாட்டில் நடைபெற்ற மா–த்தளை சோமுவின் 'லண்டன் முதல் கனடா வரை' என்ற பயண நூலின் வெளியீட்டு விழாவில் முதன் முதலாய் இவரைச் சந்தித்தேன். அடக்கமான இந்த மனிதர் அறிவு பூர்வமாக அங்கு நிகழ்த்திய உரை என்னை மிகவும் கவர்ந்தது. தேவையானவற்றைத் தேவையான இடத்தில் கொடுப்பதுதான் ஆளுமை மிக்க அறிவியலாளனின் அழகு.

அந்த அறிவியலழகை இவரிடம் கண்டேன். இளையோரின் முயற்சி-களைப் பாராட்டுவதற்கும் இவர் பின் நின்றதில்லை. அந்த வகையி-ல்தான் இளைய தலைமுறையினரால் நடாத்தப்படும் நமது 'பூபாளரா-கங்கள்' கலைவிழாவிற்கும் தன்னாலான பங்களிப்பை வழங்கினார்.

அவரது பங்களிப்பு அவர் சார்ந்த கவிதைத் துறையூட-ாக எங்களின் 'பூபாளராகங்கள்' வருடாந்த ஆண்டு மலருக்குக் கிடைத்தது. 'முறைப்படி கற்போமாக', 'தேடற்கரிய சொத்து', 'ஒரு தாயின் ஆதங்கம்' என்ற மூன்று தலைப்புக்களில் முறையே 2001, 2002, 2003 ஆகிய ஆண்டுகளில் வெளியான விழா மலர்களை இவரது கவிதைகள் அலங்கரித்தன. அத்துடன் பல பத்திரிகைக-ளாலும் பாராட்டப்பட்டன. 'பூபாளராகங்கள் – 2002' கலை விழாவி-லும் கலந்துகொண்டு வாழ்த்தியதை என்னால் என்றுமே மறக்க முடியாது.

மனிதன் உண்மையாகவும், நேர்மையாகவும் இருந்தால் உலகில் யாருக்கும் பயப்படவேண்டியதில்லை. அவ்வகையில்தான் உண்மையான ஒரு சமூகசேவையாளரின் வாழ்க்கை அமைகிறது. பெருமதிப்புக்குரிய கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களை மனிதநேயமுள்ள ஒரு மனிதராகவும், உண்மையான ஒரு சமூக-சேவையாளராகவுமே நான் பார்க்கிறேன். எனவேதான் இவர் என் மனதிலும், எல்லோர் மனதிலும் என்றுமே வாழ்வார்.

அன்னார் விட்டுச் சென்ற பணிகளை அவரது அன்புச் செல்வங்கள் அடியொற்றிச் செல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கிறது. பன்முக ஆளுமை கொண்ட திருமதி மா-தவி சிவலீலன் ஏற்கனவே பிரகாசித்து வருகிறார். 'பூபாளராகங்கள்' நிகழ்வின் பட்டிமன்ற நிகழ்வில் அவரை அறிமுகம் செய்த அன்பு அறிவிப்பாளர் B. H. அப்துல் ஹமீத் அப்பாவுக்குத் தப்பாமல் பி-றந்த பிள்ளை என்றார். அவ்வண்ணம் மாதவியின் சகோதரங்களும் பிரகாசிக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாகும்.

கம்பர்மலை வித்தியாலயம் பழைய மாணவர் சங்க ஐக்க-ியஇராச்சியக் கிளையின் சார்பாக அன்னாரின் இறப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொ-ள்வதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரா-ர்த்திக்கிறேன்.

## காலாத்தால் அழியாத கவிஞன்

அல்வையூர் கே. ஆர். திருத்துவராஜா

கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களின் மறைவு நாடக உலகிற்கும் எம்மவர்க்கும் பேரிழப்பாகும். அவருடைய கவிதை நூல்களாகிய சங்கிலியம், தேனாறு, பாதைமாறியபோது, காவேரி என்பனவற்றை எழுத்துப் பதிவுகளாக நாம் பார்க்கிறோம். இலண்டன் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற அவர் உயிர், அவ்விடத்திலேயே பிரிந்தது மட்டுமன்றி அவருடலும் அம்மண்ணோடு சங்கமிப்பது அமரருக்குப் புகழ் சேர்க்கும் சேதியாகும்.

காரை சேயான எம்சுந்தரம் பிள்ளையவர்
  காலமானார் எனும்சேதி கண்கலங்க வைத்தது
நீரை பருகுவதாய் கல்விநீரில் தாகம்கொண்டு
  நாவினில் வாணியவள் நயம் பெற்று
பாரது வாழ்ந்த பேறுபெற்ற கலாநிதி
  பட்டமொடு முதுமாணி நாடகவியல் டிப்புளோமா
ஊரையும் புகுந்த ஊரினையும் பதியவைத்த
  அற்புதக் கவிஞன் சாகித்திய சாதனையாளன்

அமரர் அவர்களுடைய சிந்தனைச் சொத்தான பல்லாயிரக் கணக்கான நூல்கள் ஆவரங்கால் ஆனந்தகானத்தை நூலகமாகக் காட்சி தருவது காலத்தின் சிறப்பாகும். அமரர் அல்வாயூர் க. முருகேசனாரை இழந்த ‘ஆனந்தகானம்’, மேலுமொரு அறிஞனை இழந்து நிற்கின்றது. அன்னாரை இழந்து நிற்கும் குடும்பத்தாருக்கு எனது இதய அஞ்சலிகள்.

# உலகிலினிக் காண்பதெப்போ

சந்தக் கவி பாடிச்
சாதனைகள் தான் படைத்த
செந்தமிழ்ப் பாவலனே - எம்
சுந்தரம் பிள்ளை ஐயா
நெஞ்சம் வெடிக்கிறதே
நீர் பிரிந்த செய்தி கேட்டு
இச் செகத்தில் நின் வதனம்
இனியெப்போ நாம் காண்போம் . . .
சோதியாய் நீ தோன்றி
சுந்தரக் கவி படைக்க
ஓடியே வந்திடுவாய்
தாயகம் மீதினுக்கே . . .
நேரியவுன் பார்வையும்
நிமிர்ந்த நல் நடையும்
கூரியவுன் அறிவொளியும்
குவலயத்தே மறைந்த தேனோ . . .
சேதியது வந்ததையா
தேம்பியே நாமழுதோம்
காவியம் பல படைத்தவுன்னை
காலனவன் கவர்ந்த தேனோ . . .
தேனாறு பாய்ந்த வுந்தன்
தேகமது நீறானதோ . . .
சங்கிலியம் பாடியவுன்
சரீரமின்று அடங்கியதோ
அரங்கமதில் நீயேறி
ஆவேசக் கவியுரைக்க
பெருங் கர கோச மன்று
பேரிடியாய் கேட்டதையா
உரங்கொண்டு உறுதியுடன்
உன்னதக் கவி படைக்கும்
உத்தமனே உம்மை
உலகிலினிக் காண்பதெப்போ . . .

ஐயாத்துரை குமாரதாசன்
(கவிஞர் வே. ஐயாத்துரை, ஆசிரியர் த. துரைராஜா குடும்பம்)

# கூத்துவகை ஆய்வாளன் காரை சுந்தரம்பிள்ளை

**வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்)**
விரிவுரையாளர்
கனடா - காங்கேசன்துறை

அமரர் காரை அவர்கள் எப்போது எமக்கு அறிமுகம் ஆனார் என்பது நினைவில் இல்லை. ஆனால் முளையின் தரமறிந்து ஊக்குவிக்கும் ரசிகமணி கனகசெந்திநாதனின் கவனம் எப்போது இவர்பால் ஈர்க்கப்பட்டதோ அக்காலத்திலேயே அறிமுகமானவர்.

இலக்கியம், சமூகம் சம்பந்தமான பொதுக் கூட்டங்களின் அமைப்பாளர்கள் கனகசெந்தியைத் தொடர்பு கொள்வார்கள். அவர்களின் விருப்பிற்கேற்பச் சொற்பொழிவா, பட்டிமன்றமா, கவியரங்கமா யார்யாரை அழைக்கலாம் என்பதை அவரிடம் பெற்றுக் கொண்டு எங்களைச் சந்தித்து ஒழுங்கு செய்வார்கள். அத்தகைய கூட்டங்களில் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. "அம்மா எப்படி இருக்கிறீர்கள்" என்று கேட்கிற அளவோடு கௌரவமும் மரியாதையும் கலந்த உரையாடல் மட்டுமே அக்காலத்தில் நிகழ்ந்தது.

இரசிகமணி பற்றிய அவரது எண்ணக் கருத்தைத் தமது 1990 இல் வெளிவந்த 'ஈழத்து இசைநாடக வரலாறு' எனும் நூலில்

> "என்னைக் கவிஞனாக உலகுக்கு அறிமுகம் செய்தவர்,
> என் எழுத்துலகத் தந்தை இரசிகமணி கனகசெந்திநாதன்
> அவர்களே. அவர் நிறுவிய யாழ் இலக்கியவட்டம் இந்நூலை
> மனமுவந்து வெளியிடுகிறது"

என எழுதியிருக்கிறார்.

உண்மையான கூற்று எங்களை ஓய்ந்துபோக விடாமல் அடிக்கடி சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி ஊக்குவித்தமையால்தான் இன்றும் எமது பெயர்கூட நிலைத்து நிற்கிறது.

காரையும், கந்தவனமும், நானும் யாழ் இலக்கியவட்டத்தில் மற்றய எழுத்தாளர்களுள் ஆர்வலராயும், பங்காளிகளாகவும் பதவிகள் வகித்தும், மேடைகளில் சந்தித்தும் நமது பழக்கமும் நீண்டது. பின்னர் ஒரு மூத்த அக்கா மாதிரியே பழகுவார். காரை ஒரு இடத்தில் தரித்து நின்று பேசமாட்டார். துள்ளித் துடித்துக்கொண்டு சிரித்துச் சிரித்தே ஆள்மாறி ஆளாகப் பேசிக்கொள்வார். அவர் முகத்தைத் தீவிரமாக நான் கண்டதில்லை. பரீட்சை என்றால் அவருடைய நண்பர்கள் தீவிரமாகப் படித்துக்கொண்டும், முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டும் திரிவார்கள். காரையோ அந்த நினைவே இல்லாதவர் மாதிரிச் சிரிப்பும் உல்லாசமுமாகத் திரிவார். பிறரைப்பற்றி அவதூறுகள் கதைக்கமாட்டார்.

எந்தப் பெரியவர்களையும் தன்னுடன் பரிச்சயம் ஆக்கிக் கொள்ளப் பின் நிற்கமாட்டார். அவர்களுடன் பேசிவிட்டு எம்மிடம் "அமைச்சரிடம் கேட்டன் ஒரு கேள்வி அப்படியே வெலவெலத்துப் போனார்" என்பார். பழக்கம் இல்லாத சிங்களப் பேராசிரியர்களையும் இப்படிச் சொல்வார். "புழுகாதையும்" என்றால் "அம்மாவாணை" என்பார். சரி என்ன கேட்டீர் என வற்புறுத்தினால், முன்பின் தெரியாதவரிடம் போய் "இப்ப எப்படி சுகமாக இருக்கிறீர்களோ என்று கேட்டன் அவர் எப்ப நான் நோய்வாய்ப்பட்டிருந்தேன் என்று யோசித்திருப்பார்" என்பார். 'சப்' என்று போய்விடும்.

பட்டப்பின் கல்வி டிப்புளோமா பயிற்சி, பட்டப்பின் நாடக டிப்ளோமா பயிற்சி போன்றவற்றிற்கு ஒன்றாகவே தெரிவு செய்யப்பட்டிருந்தோம். எனவே ஒரு சாலை மாணாக்கர் போல எங்கள் கல்வியும் இடம் பெற்றது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களிடம் பாடம் கேட்போர் எவருக்கும் ஆய்வு சம்பந்தமான ஈர்ப்பு வந்துவிடும். அதுவரை தனிக்கவிதை தொடர்கவிதை, காவியம் எனப் புகழ் சேர்த்து சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்ற சுந்தாவுக்கு ஆய்வு செய்யும் ஆர்வம் வந்துவிட்டதால் ஈழத்து இசைநாடகவரலாறு, வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும், சிங்களப் பாரம்பரிய அரங்கம், மலையகக் கூத்துக்கள், வடஇலங்கை கூத்துக்கள் போன்ற ஆய்வுக் கட்டுரைகள் தோன்றிவிட்டன.

நாடக டிப்ளோமா செய்யும்போது 'அரிச்சந்திர மயானகாண்டத்தைத்' தலைநகருக்குக் கொண்டுவந்து 40 பயிற்சியாளர்கள் உட்படத் தமிழ், சிங்களப் பேராசிரியர்கள், நாடக ஆர்வலர்கள் எனக் கல்வி மட்டத்திலும், நுண்கலை மட்டத்திலும் உயர்ந்தவர்களைப் பார்க்க வைத்தார் சுந்தரம்பிள்ளை. அதேபோல தென்னக மாணவரின் 'நூர்த்தி' எனும் சிங்கள இசைநாடகம் ஒன்றை எமக்குக் காட்டினார். மேலும் சிங்களப் பாரம்பரியக் கிராமியக் கூத்துக்களான 'சொக்கறி' கண்டிப் பகுதிக் கிராமமொன்றில் வட்டக்களரியிலும் 'தொவில்' என்பதை அம்பலாங்கொடையிலும், காமன்கூத்து மலையகத்திலும் பயிற்சியாளருக்குக் காண்பிக்கப்பட்டன. இவையெல்லாம் கல்வி, கவிதை, நாடகப் பரம்பரையில் வந்த காரை சுந்தரம்பிள்ளைக்கு நல்ல விளைநிலத்தில் தூவிய சிறு விதை போன்றமைந்து, மேலும் தேடிச் சென்று ஆழமுகர்ந்து ஆய்வுக் கட்டுரைகள் எழுதும் ஊக்கத்தை அளித்தன என்றே சொல்ல வேண்டும். நுண்கலையில் பல்துறைவிற்பன்னர்களான சிங்கள, தமிழ்ப் பேராசிரியர்களிடம் முக்கியமாகப் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் கா. சிவத்தம்பி, வீரமணிஐயர், சொலமன் பொன்சேகா, தம்யாகொட ஆகியோரின் பயிற்சிகள் பெரும் வரமாயமைந்தும், அதனை ஏதோ ஒருவகையில் பயன்படுத்தியவர்கள் குழந்தை சண்முகலிங்கமும், காரை சுந்தரம்பிள்ளை அவர்களுமே.

நடிகமணி வி. வி. வைரமுத்து எமது ஊரவர் நன்கு அறியப்பட்டவர். அவரிடம் வரும்போதெல்லாம் உந்துருளியில் இருந்தபடியேயாயினும் ஒரு "ஹலோ" சொல்லியே போவார். ஊர் நடிகமணியைப் பற்றி என்ன அபிப்பிராயம் வைத்திருக்கிறது எனக் கேட்பார். அநாவசியக் கதைகள் பேசமாட்டார். நகைச்சுவையான உரையாடல் நிகழும். தமக்கேதும் தேவையெனில் அஞ்சலகத்தில் என் கணவரைக் கண்டு உரையாடுவார்.

அவரின் இறப்பின்போது அனுபவித்துத் துடிக்கும் அவரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரக்குழந்தைகளுக்கு நாம் என்ன ஆறுதல் சொல்ல முடியும். அழியாச் செல்வங்களை அவர்களுக்கு வைத்துச் சென்றுள்ளாரே. இன்னாரின் உறவினர் எனும் பெருமையும், கௌரவமும் மற்றும் நூல்களும் அவரின் பிரதிபலிப்பாக உங்கள்முன் நிற்கின்றனவே. அவற்றைக் கொண்டு ஆறுதல் அடையுங்கள்.

சாந்தி சாந்தி சாந்தி.

## தமிழுக்கு வாய்த்த பெரும் சொத்து

முதுகலைஞன் - கலாபூஷணம்
நவாலியூர் நா. செல்லத்துரை
"தென்றலகம்" - யாழ்ப்பாணம்

காரைஎன நாமழைக்கும்
  காரைநகர் பெற்றெடுத்த
காளைஅந்தக் கலாநிதி
  சுந்தரம் பிள்ளையைநாம்
காரைக்கவி வாணன்என்போம்
  கண்மகிழ்ந்த தான்பிறந்த
ஊரைச்சொல்லிப் பெருமைகொள்ளும்
  ஒருசிலருள் ஒருவரென்போம்

வித்தகருள் ஒருவராகி
  விடிவெள்ளி ஆகித்தமிழ்
கற்பவருள் பலர்க்குக்கலங்
  கரைவிளக்காய் ஒளிர்ந்துபெரும்
மேதையாய் விளங்கிஇந்த
  மேதினியின் மதிப்புப்பெற்று
யானையின் தந்தமென
  விலையிலே உயர்ந்தஅவர்

முதுமையை அடையுங்காலம்
  இன்னமும் இருந்துமவரின்
திறமையை அறிந்தாதெய்வம்
  திடீரென எடுத்திட்டது
நடைப்பிண மானோர்களை
  எடுக்காமல் இடைவயதை
உறைமனங் கொண்டாதெய்வம்
  எடுக்குது புரியவில்லை

என்னைத்தன் பேனாவிலே
வைத்தெந்தன் புகழையிந்த
மண்ணுக்குள் முளைக்கச்செய்த
என்னுடைய ஆசைஅருமைச்
சொத்தைநான் இழந்துவிட்டேன்
பாரிய இழப்புஎன்று
விந்தைகாண் செந்தமிழாள்
வீறிட்டுக் கதறுகிறாள்

சுந்தரம் பிள்ளையெந்தன்
சொத்திலே ஒன்றுஅந்தச்
சித்திரச் சொத்து ஏனோ
எனைவிட்டு மறையஅந்த
இறையவன் ஒருவிதியைச்
சடுதியாய்ச் செய்தான்என்று
குறையுடன் மேலுஞ்சொன்னாள்
புலிவாழும் தமிழ்க்கனியாள்

அவளது அழுகையதை
ஆய்ந்திடில் நியாயம்அதால்
மனமது வெடித்துஅவள்
கதறாது இருப்பதெங்கே
சுந்தரம் பிள்ளைஎன்ன
சாதா ரணஉயிரா?
நல்வரம் கருவில்ப்பெற்ற
படைப்பாளி தானேஅவர்

எத்தனை நூல்கள்அவர்
கைவண்ணம் கண்டிட்டது
எத்தனை பேரைஅவர்
எழுத்துக்கள் கவர்ந்திட்டன
காரையின் நாடகங்கள்
எனக்கூறிப் பார்த்தோர்பலர்
காரையின் 'பூதத்தம்பி'
கூத்தினைப் புகழ்ந்தோர்பலர்

அத்தகை சிறப்புடைய
எழுத்தாற்றல் சிற்பிஅவர்
இத்தரை பதிந்ததனால்ப்
புவிஅவரைப் போற்றியது
'தேனாறு' தந்தகாரை
சுந்தரம் பிள்ளையென்றால்
வாயூறும் அவரைநன்கு
வாசிக்கும் வாசகர்க்கு

சிந்தனை சிறக்கப்பெற்று
செயலிலே உறுதிகொண்டு
கந்தனைத் தொழுதுஅந்தக்
கடவுளின் அருளும்பெற்று
என்றைக்குஞ் சாகாவரத்
தமிழ்எழுத் தாளனாகி
தித்திக்குந் தன்எழுத்தை
நூல்வடி வாக்கி நின்றார்

சுந்தரம் பிள்ளையிங்கு
மறுப்புக்கு இடமில்லாத
நற்தவம் பெற்றுப்பூத்த
கல்விமான் என்பதுண்மை
முயற்சியைத் தனதுநெஞ்சில்
வேரோட வைத்துக்கல்விப்
பயிற்சியை இடைவிடாது
பயின்றிட்ட காரணத்தால்

ஊர்மெச்சப் பட்டதாரி
ஆனது மட்டுமின்றி
பேர்உச்சம் அடையவென்று
கலாநிதிப் பேறும்பெற்றார்
பூக்களாய்ப் பூப்பவற்றுள்
சிறப்பன ஒருசிலவாம்
பாக்களாய் வருபவற்றுள்
சிறப்புப்பா ஒருசிலவாம்

முத்துக்கள் வரிசையிலே
சிறப்பன ஆணிமுத்தாம்
வித்துக்கள் என்றெடுத்தால்
நல்விதை ஒருசிலவாம்
அதுபோன்றே கற்றோருள்ளும்
சிலரேநற் கல்விமான்கள்
அதிலொன்றே காரைநகர்ச்
சுந்தரம் பிள்ளைஎன்பர்

காற்றிலே தென்றலென்று
கற்றவர் சொல்லிடுவர்
ஆற்றிலே ‘அமேசன்’என்று
அறிஞர்கள் கூறிநிற்பர்
சுடரிலே கதிரோன்காரை
சுந்தரம் பிள்ளைஎன்பர்
கடலிலே முத்துச்சங்கு
போன்றவர் என்றுஞ்சொல்வர்

ஊற்றிலே தெளிந்தஊற்றுப்
போலிங்கு வாழ்ந்தஇவர்
நாட்டிலே கற்பகம்போல்
பயன்தந்த ஆசான்என்பர்
சந்ததம் எழுதியிங்கு
சிறப்பான நூல்கள்தந்த
சுந்தரம் பிள்ளையாலே
செந்தமிழ் சிறப்புற்றது

ஆகையால் எந்தவித
மறுப்புக்கும் இடமில்லாமல்
ஆசையாய் சொல்லிடலாம்
சுந்தரம் பிள்ளைபல
விருதுக்கு என்றுகாரை
நகரிலே பிறந்திட்டாலும்
தமிழுக்கு வாய்த்தபெரும்
சொத்தாவர் வித்துமாவர்

# பலமுகங்களில் பணியாற்றியவர்

**த.சிவபாலு**
பொதுச் செயலாளர், கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்

ஈழத்து எழுத்தாளர் மத்தியில் மாத்திரமன்றிக் கல்வியுலகிலும் மிகவும் பிரபலம் பெற்றுத் திகழ்ந்தவர் காரை செ. சுந்தரம்பிள்ளை. தனது எழுத்தாற்றலால் பலரதும் மனங்களை இருப்பாக்கிக் கொண்டவர்.

இலக்கியத்திற்காக அவர் பலமுகங்களில் பணியாற்றியுள்ளார். யாழ் இலக்கிய வட்டத்தின் செயலாளராக இருந்து யாழ்ப்பாணத்துத் தமிழ் இலக்கியத்தை மேம்பாடு காணவைக்க அரும்பாடுபட்டவர். நாடகத்-துறையில் ஆய்வினை மேற்கொண்டதோடு நாடகங்களை எழுதியும் தயாரித்தும் மேடையேற்றியும் உள்ளார்.

'இந்து நாகரிகத்திற் கலை' என்ற தனது ஆய்வு நூலை 1994 இல் வெளியிட்டு இந்துநாகரிகம் கற்கைநெறிக்குப் பயன்படத்தக்க அருமைமிக்கதொரு படையலாக ஆக்கித் தந்துள்ளார். 'சங்கிலியம்', 'தேனாறு','பாதைமாறியபோது' ஆகிய கவிதை நூல்களையும், 'ஈழத்து இசை நாடக வரலாறு', 'நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்', 'சிங்களப் பாரம்பரிய அரங்கு', 'வடஇலங்கை நாட்டார் அரங்கு', 'ஈழத்து மலையகத்து கூத்துக்கள்', போன்ற படைப்புக்களைத் தமிழன்னைக்குப் படைத்தவர் காரை செ. சுந்தரம்பிள்ளை.

தாயகத்தில் சிறிதுகாலம் நோய்வாய்ப்பட்டிருந்த காரை செ. சுந்-தரம்பிள்ளை அவர்கள் இங்கிலாந்திற்கு வைத்தியத்திற்காகச் சென்ற-ிருந்தவேளை அங்கு 21.09.2005 அன்று இயற்கை எய்தியுள்ளமையைக் கேள்வியுற்று கனடா எழுத்தாளர் இணையம் தனது ஆழ்ந்த அனுதாப-த்தை அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரியத் தருகின்றது. எமது எழு-த்தாளர் இணையத்தின் மூத்த உறுப்பினரும் முன்னைத் தலைவருமான விநாயகர் கந்தவனத்துடன் நூற்றுக் கணக்கான கவியரங்குகளிலும், பட்டிமன்றங்களிலும் பங்குகொண்டவர் என்பதும் நினைவுகூரத்தக்கது.

மறைந்த இலக்கியவாதிக்குக் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அஞ்சலி செலுத்துகின்றது

# காலங்கடந்தும் வாழும் கலைஞன்

**யோ. யோண்சன் ராஜ்குமார்**
பிரதி இயக்குனர், திருமறைக் காலாமன்றம்

ஈழத்தின் கலை இலக்கியப் புலத்தில் கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கும் அதிகமாகப் பணிசெய்த கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை என்ற ஆளுமைமிக்க மனிதன் மறைந்தான் என்ற செய்தி மனதினை வருத்துகின்றது. 'காரை' என்ற சொல்லுக்குள் காரைநகரையும், கலையையும் அடையாளப்படுத்திநின்ற இந்தக் கலை இலக்கிய வாதியின் மறைவு இலையுதிர் காலம் போல் இவ்வருட 'கலையுதிர்' இழப்புக்களின் கனதியை மேலும் அதிகரித்துவிட்டது.

கவிஞனாய், பேச்சாளனாய், நடிகனாய், நெறியாளனாய், ஆய்வாளனாய், ஆசிரியனாய், நிர்வாகியாய்ப் பல பாத்திரங்களை வாழ்வியலில் தாங்கி, தன் பன்முக ஆளுமைவீச்சை ஈழத்திற்குப் பயன்தரு வகையில் வழங்கிச் சென்ற அமரர் காரை சுந்தரம்பிள்ளை வரலாற்றில் படைப்புக்களாலும், பணியாலும் காலங்கடந்தும் வாழப்பே-ாகின்றவர்.

குறிப்பாக நாட்டார் இலக்கியத்திற்கும், கூத்துக்கலைக்கும் அவர் ஆற்றிய பணி அளவிடற்கரியது. 'வடஇலங்கை நாட்டார் அரங்கு', 'ஈழத்து இசைநாடக வரலாறு', 'நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்' போன்ற அவரது ஆய்வு நூல்களும், நூற்று-க்கணக்கான கட்டுரைகளும் எமது பாரம்பரிய அரங்க வடிவங்களின் வேர்களை அடையாளப்படுத்தியது மட்டுமன்றி, எமது தொன்மைகளுக்-குச் சான்று கூறிநிற்கின்ற ஆதாரங்களாகவும் திகழ்கின்றன. இவற்றின் நீட்சியாக அவர் எழுதிய 'சிங்களப் பாரம்பரிய அரங்கு', 'ஈழத்து மலையகக் கூத்துக்கள்' போன்றதான நூல்களும் தமிழ் அரங்கிற்கு வளஞ்சேர்த்து நிற்கின்றன.

இவை மட்டுமன்றி கூத்துக்கலையை வளர்த்தெடுப்பதற்கும், அதன் வடிவ சாஸ்திரியத்தை மீள் கண்டுபிடிப்புச் செய்வதற்கும் அவர் எடு-த்த முயற்சிகள், ஒரு பரந்த செயற்களங்களின் தொடக்கங்களாக நிற்கின்றன.

இவற்றுக்கப்பால் ஈழத்தின் கவியரங்கப் பாரம்பரியத்தில்

மரபுக்கவிஞனாய், மேடைகளை அலங்கரித்து ஆர்வலர்களை வசீகரித்துக்கொண்ட இவரின் கவிதைகளும், ‘சங்கிலியம்’, ‘காவேரி’ போன்ற காவியங்களும் எமது மரபுவழிக் கவிதை இலக்கியத்தில் பெறுமதிமிக்கனவாகத் திகழ்கின்றன. கல்லூரிகளிலும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும், பல்கலைக்கழகத்திலும் இவரிடம் பயின்ற பலர் இன்று ஆளுமை நிறைந்தவர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். இந்துசமயத் தத்துவங்களை ஆழக்கற்று அதனை அவர் அடுத்த சந்ததிக்கு அளித்த வகை மறக்கக்கூடியதல்ல. இந்தச் செயல் வெளிப்பாடுகளின் ஓர் அங்கமாக அவர் எமது திருமறைக் கலாமன்றத்திற்கு ஆற்றிய பணிகளும் அமைகின்றன.

1989 இற்குப் பின் திருமறைக் கலாமன்றம் தன்னை ஒரு பண்பாட்டு நிறுவனமாக மாற்றிக்கொண்டு செயற்பட்டகாலம் முதல், அவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த இறுதிக்காலம் வரை மன்றத்தின் செயற்பாடுகளுக்கு அர்ப்பணிப்புடன் ஊக்கமளித்து வந்தார். குறிப்பாகப் பாரம்பரியக் கலைவடிவங்களான நாட்டுக்கூத்து, இசைநாடகம், கிராமிய நடனங்கள் போன்றவற்றைப் பேணவும், புத்தாக்கம் செய்யவும் நாம் முற்பட்டபோது எமக்குத் தனது முழுமையான ஆதரவையும், ஆலோசனைகளையும் தந்துநின்றார்.

நாம் நடத்திய கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், பயிலரங்குகள் போன்ற பலவற்றிற்கும் வந்து கருத்துக்ககளை வழங்கியதுடன், நாம் நடத்திய முத்தமிழ் விழாக்கள், நாட்டுக்கூத்து விழாக்கள், இசைநாடக விழாக்கள், நாட்டுக்கூத்துப் போட்டிகள் போன்ற பலவற்றிற்கும் தனது பங்களிப்புக்களை வழங்கினார். அவரது ‘பாஞ்சாலி சபதம்’ நாட்டுக்கூத்து எமது கூத்துவிழாவொன்றில் மேடையேற்றப்பட்டுப் பலரின் பாராட்டுக்களைப்பெற்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாகக் கத்தோலிக்கக் கூத்துமரபின் ஆடல்களை மீள்கண்டுபிடிப்புச் செய்வதற்கு எமது மன்றம் முயன்றவேளை, அவர் அளித்த ஆலோசனைகளும், அதற்காக அவர் வழங்கிய வளமூலங்களும் பெறுமதிமிக்கவை. மொத்தத்தில் திருமறைக் கலாமன்றத்தின் இரசிகனாய், ஆதரவாளனாய், வளஆளுனனாய் பலதளங்களில் பின்னணியில் நின்ற அமரர் காரை சுந்தரம்பிள்ளை ஈழத்தின்கலை இலக்கியப் புலத்திலும் மன்ற வரலாற்றிலும் மறக்கப்படமுடியாத ஒருவர்.

அவரது இழப்பால் துயருற்றுநிற்கும் அவரின் குடும்பத்தவர்க்கு, திருமறைக் கலாமன்றம் தனது கண்ணீர் அஞ்சலிகளை தெரிவித்துக்கொள்கிறது.

# காலத்தை வென்று வாழும் கலைஞர் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை

**க. நவம்**
கனடாவிலிருந்து

கற்பனை அறிவிலும் மேலானது. அது அறிவைவிட சக்தி வாய்ந்தது. அறிவுக்குக் கட்டுப்பாடுகள் உண்டு. எல்லைகள் உண்டு. கற்பனைக்கோ தளைகளும், தடைகளும் கிடையா. இதற்கு எல்லை எதுவும் இல்லை. அறிவின் உடமையாளன், அறிஞன். கற்கை வழியாக அவன் பெறும் அறிவுக்கு எப்போதும் ஓர் எல்லையுண்டு. கற்பனையின் சொந்தக்காரன், கலைஞன். கலைஞனின் சஞ்சாரபுலம் வானத்திற்கும், பிரபஞ்சத்திற்கும் அப்பாலுக்கும், அப்பாற்பட்டது. அறிஞனின் பேசுமொழி அவனது மூளையிலிருந்து பிறக்கிறது. கலைஞனின் பாடுமொழி அவனது இதயத்திலிருந்து உதிக்கிறது. கலைஞனின் கற்பனைகளும் கனவுகளும் யதார்த்தம் ஆகின்றபோது சாதனைகளும் விந்தைகளும் வந்து பிறக்கின்றன. அவை பெரிதும் வியக்கப்படுகின்றன. இதனால் தான் கல்வியாளனான அறிஞனை விட, கற்பனையாளனான கலைஞனுக்கு எப்போதும் தனித்துவமான மகத்துவம் உண்டு!

காரை செ. சுந்தம்பிள்ளை அவர்கள் கல்வித் தகைமைகளின் உச்சம் எனப் பலராலும் கருதி மயங்கப்படும் ‘கலாநிதி’ என்ற எல்லையைத் தொட்டவர். பல்வேறு திக்குத் திசைகளிலும் நிரம்பக் கல்வியறிவு பெற்றவர். அவரது மறைவு, அறிவுசார் துறைக்கு ஏற்பட்ட ஓர் அளப்பரிய இழப்பு. அதில் மறுப்பு ஏதும் இல்லை. ஆனாலும் அது ஈடுசெய்யப்படக்கூடியது. கலைத்துவம் நிரம்பப் பெற்ற கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களது இழப்போ, அதனின்றும் மாறுபட்டது. ஈடுசெய்யப்பட முடியாதது. இவர் விட்டுச் சென்ற இடைவெளி இன்னொரு கலைஞனால் இலகுவில் நிரப்பப்பட முடியாதது. அதனால் தானோ என்னவோ, தமிழ் அன்னைக்கு அழகு செய்த, அந்த மகத்தான கலைஞனின் மரணத்தை நினைக்குந் தோறும், மனம் அல்லல் படுகின்றது!

காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் முத்தமிழின்பால் ஈர்ப்பும், இடையறாத நேயமும் கொண்டவர். இவற்றுள் இயற் தமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் இவர் நிகழ்த்திய விதைப்புக்களும் அவற்றால் விளைந்த விளைச்சல்களும் வெகுவாக விதந்துரைக்கப்படுகின்றன. நாடகம், நாட்டுக் கூத்து என்பன குறித்த ஞானம் இவருக்குப் பரம்பரைச் சொத்தாகக் கிடைத்தது. கவிதை வளமோ இவரது குருதியில் இயல்பாய்க் கலந்து, அருவியாய்க் களைகட்டித் துள்ளிக் குதித்துப் பாய்ந்து வந்தது. ‘ஈழத்து இசை நாடக வரலாறு’, ‘இந்து நாடகத்தில் கலை’, ‘[illegible]

வி.வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்', 'சிங்களப் பாரம்பரிய அரங்கம்', 'மலையகக் கூத்து மரபு' என்பன கலை, நாடகம் ஆகியன தொடர்பான இவரது பயன்மிக்க ஆய்வு நூல்கள். கால, தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப இந்த ஆய்வுகள் ஒருகால் மறக்கப்பட்டாலோ, மறுக்கப்பட்டாலோ அல்லது மறைக்கப்பட்டாலோ ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் செழிப்பான இலக்கியங்களுக்கு இவ்வாறான இடர்கள் இடம்பெற்றதாக வரலாறு இல்லை. 'தேனாறு', 'சங்கிலியம்', 'தவம்', 'உறவும் துறவும்', 'பாதை மாறிய போது', 'காவேரி' என்பன கவிஞரின் கவித்துவச் சிறப்புக்களுக்கான கனதியான சான்றுகள். அழகியலையே பெரும்பாலும் முதன்மைப்படுத்திக் கவிஞரால் படைக்கப்பட்ட போதிலும், இந்த ஆக்க இலக்கியங்கள் காலத்தால் அழியாதவை. சாகா வரம் பெற்றவை!

"சிரித்த முகம் அழகு விரித்த முகம்" என்பதற்கமைய, முகத்தில் என்றும் சிந்திய சிரிப்பே இவரது நிலையான சுந்தரத்தின் உண்மைச் சூத்திரம். வற்றாத நகைச்சுவை உணர்வுடன் கடைசிக் காலம் வரை கலகலப்பாக வாழ்ந்தவர். சிற்றெறும்புக்குச் சுறுசுறுப்பைச் சொல்லிக் கொடுத்தவர். ஆசிரியத்துவத்தைத் தொழிலாகக் கொள்ளாதவர். பதிலாக அதனைத் தம் கடமையாகக் கொண்டவர். ஆசிரியராகவும், அதிபராகவும், ஆய்வாளராகவும், விரிவுரையாளராகவும், விடய ஞானம் உடையவராகவும் விளங்கி, சந்தன மரம்போல மணம் பரப்பிச் சென்றவர். தம்மைச் சார்ந்தோரையும், தம்மீது சாய்ந்தோரையும் மணம் கமழச் செய்தவர். தன்னலம் கருதாத ஆசிரியப் பணியினால் தமிழினத்துக்குச் சேவை செய்தவர்.

வாழ்க்கை மின்னி மின்னி ஒளிவிடும் மெழுகுவர்த்தியல்ல என்பதனைத் தெரிந்து வைத்தவர், கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை. பதிலாக பல் திசையும் ஒளிபரப்பவல்ல தீப்பந்தம் வாழ்க்கையென்று நன்கு தெரிந்து வைத்தவர். அந்திம காலம் வரை அந்தத் தீப்பந்தத்தின் பிரவாகத்தைத் தம்மைச் சுற்றி ஒளிர விட்டவர். மரணத்தின் பின்னரும் அவர் தமது சாதனைகள் ஊடாக உலகுக்கு ஒளியேற்றிச் சென்றவர். தேமதுரத் தமிழ்க் கவிஞனாகவும் தெவிட்டாத நாடகக் கலைஞனாகவும் தமிழுக்கு அழகு சேர்த்தவர். தமிழினத்துக்கு மெருகு சேர்த்தவர். கன்னல் தமிழ்க் கலைப் படைப்புக்கள் வழியாகத் தம்மையே தமிழுக்கு வழங்கி, எம்மிடையே நிரந்தரமாக வாழும் அவர் என்றும் அழிவதில்லை. எந்த நிலையிலும் அவருக்கு மரணமில்லை!

"So long as men can breathe or eyes can see
So long lives this and this gives life to thee!"

ஷேக்ஸ்பியர் கூறிய பொருள் பொதிந்த இந்தக் கவிதை வரி, கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களுக்கும் சாலப் பொருந்தும்.

# ஆற்றல் மிக்க சிந்தனையாளன்

சி. சிவனேசன்
கம்பர்மலை

யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் இரண்டு தலைமுறைக்கு மேலாகச் சமூக அமைப்பு முறைகள் கொடூரமாக இருந்த காலங்களில்தான் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் கல்வி கற்றார். பள்ளிக்கூடம் தொடங்கிப் பல்கலைக்கழகம் வரை, பல இடர்களுக்கு மத்தியிலும், தளரா மனதுடன் கல்விப் பட்டங்கள் பல பெற்று. நல்லாசிரியனாய் சமூகம் போற்றும் சிறந்த கல்விமானாய் விளங்கினார். நாட்டுக் கூத்துக்கலையில் சிறந்து விளங்கினார் என்பதற்குச் சான்றாகப் பலராலும் போற்றிப் புகழப்பட்ட நடிகமணி வி. வி. வைரமுத்து பற்றிய 'வி. வி. வைரமுத்துவின் வாழ்வும்அரங்கும்', சிங்கள நாடக மரபு பற்றிய 'சிங்களப் பாரம்பரிய அரங்கு' ஆகிய நூல்கள் சான்றுபகர்கின்றன.

இவர் சுமார் பதினைந்திற்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியும், வெளியிட்டுமுள்ளார். கலாநிதி சுந்தரம்பிள்ளை அவர்களின் அரங்கு சார்ந்த ஆய்வு நூல்கள் இன்று ஓர் இனத்தின் மொழியை, அதன் வரலாற்றைத் தாங்கி நிற்கின்றது.

அவர் கடைசியாக எழுதிய ஈழத்து மலையகக் கூத்துக்கள் என்ற ஆய்வு நூலின்மூலம், இலங்கையில் பெரிதும் கவனிப்பாரற்று இருக்கும் ஒரு சமூகத்தின் கலைவரலாறு ஆவணமாக்கப்படுகின்றது.

தமிழ் படைப்பிலக்கிய வரலாற்றில் கலாநிதி செ. சுந்தரம்பிள்ளை தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளார். இவர் பணி ஆய்வு செய்யப்படவேண்டிய ஒன்று. இறுதிநேரம்வரை ஆற்றல்மிக்க சிந்தனையாளனாக நாட்டிற்குத் தேவையான நல்லாசிரியனாக வாழ்ந்த கலாநிதி அவர்களின் நினைவுகள் என்றும் பசுமையானவை.

## எங்கள் அண்ணா

முருகையா வள்ளியம்மை (கிளி)
"தமிழகம்"
பிட்டியொல்லை, காரைநகர்

அண்ணாவின் பிரிவுத்துயரம் கேட்டு சகிக்க முடியாத வேதனையடைந்தேன். கடந்த கால நினைவுகள் படம்போலக் காட்சியளித்தன. அண்ணா பரந்த வெளியில் கடற்கரையருகில் உள்ள மூன்று பூவரச மரம் நடுவினிலே இருந்து படித்த நினைவு வந்தது. மரத்தினை உற்று நோக்கினேன். அந்தோ மரம் அழுவதுபோல் காட்சியளித்தது. குனிந்து நிலத்தைப் பார்த்தேன் அண்ணா 'அ' எழுதிய மண், அழுதுபுரண்டமண், ஓடி விளையாடிய மண் ஓலமிட்டழுதது. சேர்ந்து நானும் அழுதேன்.

"தோன்றிற் புகளொடு தோன்றுக அஃதிலார்
தோன்றிற் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கணமாய்ப் பிறந்த ஒருவர். வீட்டிற்கு மட்டுமல்ல, பிறந்த பொன்நாட்டிற்கும் பெருமை தேடி இவ்வுலக வாழ்வை நீத்தவர். எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு கல்விக் களஞ்சியம் இன்னும் சில காலம் வாழ வேண்டிய ஒருவர். விதியின் வழிப் பயணம் எம்மால் தடுத்திட முடியாத ஒன்று. பிறந்தவர் யாவரும் இறப்பது திண்ணம். அதில் அண்ணா விதிவிலக்கானவர் அல்ல. அண்ணாவின் பூதவுடல் அழிந்தாலும் அவர் சம்பாதித்து வைத்த புகழ் அழியாது; என்றென்றும் ஒளி வீசும் என எண்ணி ஆறுதல் அடைகின்றேன். அண்ணாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கலியங்கண்டி கண்ணகையம்பாளை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி.

# அபூர்வ மனிதர்

திரு. கு. சதாசிவமூர்த்தி
(B.A., M.Ed., PDQE, Dip.Ag.Sp.Trd., S.L.E.A.S.)
அதிபர், யா/பலாலி ஆசிரயர் கலாசாலை

அறிஞர் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அமரத்துவமெய்திய செய்தியை, சோ. ப. அவர்கள் தொலைபேசி மூலம் அறிவித்த பொழுது, எமது கலாசாலையில் அவரை நான் முதன் முதலில் விரிவுரையாளராகச் சந்தித்தது முதல், பல சந்தர்ப்பங்கள் நினைவிற்கு வந்தன. நல்லதோர் அறிஞரை, பண்பாளரை இழந்து நிற்கும் உணர்வு மனவேதனையைத் தந்தது. அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்தேன்.

மூதறிஞர், கவிஞர், கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை எமது கலாசாலையின் விரிவுரையாளராகவும் பின்பு தலவாக்கலை, கோப்பாய் ஆசிரியர் கலாசாலைகளின் அதிபராகவும் கடமையாற்றிய காலங்களில் மட்டுமன்றி ஓய்வுபெற்ற பின்பும் அவரை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியதையிட்டு மனநிறைவடைகின்றேன். மூதறிஞர் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை என்று கூறுவதைவிட, துணிச்சல் மிக்க, நற்பண்புடைய சிறந்த அறிஞர், நிர்வாகி, சமூக வழிகாட்டியெனப் பலவாறு நிதழ்ந்த, உயர்ந்த மனிதர் என்ற வகையில் அவரைப் பார்க்கின்றேன்.

அவர் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதுகளில் பலாலி ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார். ஆனால், அவரது இறுதி மூச்சுவரை பலாலி ஆசிரிய கலாசாலையில் அக்கறை கொண்டு வாழ்ந்து வந்தவர். அவரது ஆற்றலினாலும், நற்பண்பினாலும் அவரது குடும்பமே மிக உயர்வான நிலைவெய்திய போதும் தன் நிலை மாறாது அமைதியான சாந்தமான வாழ்வினைக் கடைப்பிடித்ததுடன், சமூக மேம்பாட்டிற்காக நிறைவான நூல்களை எழுதியிருப்பது யாவரும் அறிந்த விடயமே.

எமது கலாசாலை இடம்பெயர்ந்து, நல்ல விரிவுரையாளர்களை இழந்து அல்லலுற்ற வேளை கல்வியல், உளவியல் ஆகிய பாடங்கள்

ஆங்கில மொழியில் கற்பிப்பதற்கு விரிவுரையாளர்களைப் பெறமுடியாதிருந்த காலத்தில், சேவை நோக்குடன் எமது கலாசாலையில் அக்கறை கொண்டு கற்பித்தல் பணியில் ஈடுபட்டு உதவியதைப் பலாலி ஆசிரிய கலாசாலைச் சமூகம் என்றும் மறக்க மாட்டாது.

அவர் ஓர் சிறந்த நிர்வாகி, துணிச்சல் மிக்கவர், இரக்க சுபாவமுடையவர் என்பவற்றையெல்லாம் வெளிப்படுத்தும் வகையில் ஒரு சம்பவத்தினை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

ஆசிரிய கலாசாலைகள் தனித்துவம் மிக்கவை. அதிகாரிகள் அக்கலாசாலைகளின் தனித்துவத்தை விளங்காது தலையிட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. அமரர் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபராக இருந்த காலத்தில் அப்போதைய கவ்விப்பணிப்பாளர் தலையிட்டு அக்கலாசாலையின் தொழிலாளிக்கு நியாயமற்ற மாற்றம் ஒன்றினை வழங்கினார். தனது நிர்வாகத்தில் அத்துமீறிப் பிரவேசித்த அக்கல்வி-ிப் பணிப்பாளரின் தவறை உணரச் செய்தார். அதற்காக வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த தொழிலாளிக்கு ஒரு சில மாதங்கள் தனது பணத்தில் சம்பளம் வழங்கி உதவினார். அவரது செயல் ஆசிரிய கலாசாலைகளின் அந்தஸ்தைக் காப்பாற்ற உதவியது.

சிக்கனமான, எளிமையான வாழ்வைக் கடைப்பிடித்த போதிலும், பெருமனதுடன் வேண்டியவர்க்கெல்லாம் உதவி செய்வதன் மூலம் பெரும் தனவந்தர்களிலும் பார்க்க உயர்ந்த செல்வந்தனாக வாழ்ந்து காட்டியுள்ளார்.

பலரது பட்டங்கள், பதவிகளைப் பெறவே உதவுகின்றன. ஓய்வு பெற்றதும் ஓய்வூதியத்துடன் ஒதுங்கிவாழும் நிலை காணப்படுகிறது. ஆனால் அமரர் காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் ஓய்வுபெற்ற பின்பு மேலும் பன்மடங்கு சமூகம் பயன்பெறும் வகையில் பணியாற்றி வந்துள்ளார்.

தர்மத்தின் வழி நின்ற அவரது வாழ்வு சிறப்புற்றுள்ளது. என்பதற்கப்பால் அவரது குடும்பமே மேலோங்கி வளர்ச்சி பெற வைத்துள்ளது. அவரது ஆத்ம சாந்தியடைய நானும், எனது குடும்ப அங்கத்தவர்கள் மட்டுமன்றி எமது ஆசிரியர் கலாசாலைச் சமூகமே இறைவனை வேண்டி நிற்கின்றது.

# எப்படி நீ மறப்பாய்

நண்பனே, தோழனே, மகனே சுந்தரம்!

என்னை எப்படி மறக்க முடிந்தது, ஞாபகம் இருக்கா? அன்ரனிசில் படித்தது, புளியின்கீழ் விளையாடியது ஞாபகமில்லையா? கல்லூரியின் திறமையான மாணவர்கள் எனச் சுவாமியால் பாராட்டப்பட்டது ஞாபகமில்லையா? பொய், நான் நம்பமாட்டேன். ஒருநாள் மாணவர் மன்றத்தில் தமாசு பேசியது மறக்கமுடியுமா? நான் மறக்கவில்லையே. நித்திரையில் பேய் என அலறியது ஞாபகமில்லையா? நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது. சுந்தரம் எப்படியப்பா நான் மறப்பேன். பராசக்தியில் நீங்கள் கல்யாணியாக நான் குணசேகரனாக நடித்ததை மறக்கமுடியுமா? உங்களது நெறியாள்கையில் எங்களை நடிக்கவைக்கவில்லையா? நாகரத்தினம் மாஸ்ரரிடம் சமஸ்கிருதம் கற்றது, விக்ரோறியாவில் எச்.எஸ்.சீ. கற்றது நீ மறந்தாய் தானோ? எங்களையே மறந்த நீங்கள் இது எம்மாத்திரம். எனக்கு ஆசிரியத் தொழில் கிடைத்ததும், சந்தர்ப்பத்தை விடக்கூடாதென்று ஆறுதல் கூறி அனுப்பவில்லையா? பீ. ஏ. பரீட்சை முடிவு கிடைத்ததும் நான் ஓடிவந்து கட்டிப்பிடித்தது கூட ஞாபகமில்லையா?

சுந்தர் அப்போ என்னைத்தவிர யார் உங்களுக்கு? சுந்தர் நான் அழுகிறேனப்பா. உனது முதல் உறவு நான்தானேயப்பா. நீங்கள் செய்தது பெருங்கொடுமை. காத்தவராயன் கூத்துப் பார்க்கப் போனோமே, அன்று நீங்கள் கல்லுக் கிடங்கில் விழுந்து கையை முறிக்கவில்லையா, வீட்டுக்குப் போகப் பயந்து சண்முகத்திடம் மருந்து கட்டியது, பின்பு அம்மாவிடம் வாங்கிக்கட்டியது, உடுக்கைச் செய்து காத்தவராயன் பாட்டுப்பாடி நடித்தது ஞாபகமில்லையா? உங்கள் உதிரத்தில் ஊறியிருப்பது நாட்டார் இலக்கியம் தானே.

நாட்டுக்கூத்து என்றால் உங்கள் நாடி நரம்பு துடிக்குமே. சந்நிதி கோவிலில் சிறுபராயத்தில் உடுக்கை உடைத்துவிட்டு அழுதாயே! இசையே உங்கள் உயிர் என்பதை மறக்க முடியுமா? நல்லூர் கந்தன் மணிமண்டபத்தில் நான் தந்தையாக நின்று தங்கள் திருமணத்தை நிறைவேற்றி வைத்தேனே. சுந்தர் நீ எங்கு சென்றாலும் என்னை உங்கள் குடும்பத்தை தங்கள் ஆத்மா ஆசீர்வதிக்கட்டும்.

**மு. கிருஷ்ணபிள்ளை**
ஓய்வுபெற்ற அதிபர்
பாலாவோடை, காரைநகர்

தொலைபேசி
Telephone: } 060 - 2213053

பாக்ஸ்:
Fax: } 060 - 2213053

எனது இல:
My No: }

உனது இல:
Your No: }

# அரசினர் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்
# GOVERNMENT TEACHERS' COLLEGE, KOPAY.

*Principal:*
A.Sriskanthamoorthy

*Deputy Principal*
S.Senthilmani

திகதி:
Date: } 06.10.2005

மதிப்பார்ந்த திருமதி காரை சுந்தரம்பிள்ளை, பிள்ளைகள் , மற்றும் குடும்பத்தவர்கள் யாபேர்க்கும்.

தங்கள் குடும்பத்தலைவனும், எங்கள் கலாசாலையில் உயரிய கல்விப் பணியாற்றிச் சிறப்பாக அதிபர் பதவியை அலங்கரித்த பெருமகன், அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய கலாநிதி கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை அவர்களின் மறைவுச் செய்தியறிந்து இக்கலாசாலைலக்குடும்பம் சொல்லி அடங்காத் துயரில் மூழ்கியதுடன், ஆசிரியமாணவர்கள், விரிவுரையாளர்கள் மத்தியில் அமரர் ஆத்ம சாந்தி வேண்டி ஓர் இரங்கல் நிகழ்வை நடாத்தி அத்தோடு 'உதயன்' பத்திரிகைவாயிலாகத் தங்கள் யாபேருடைய துயரங்களிலும் பங்குபற்றி ஆத்ம சாந்திக்காக இறையருளை வேண்டி நின்றோம். அவருடைய பிரிவு எமக்குமட்டுமல்ல இந்த நாட்டுக்கே பேரிழப்பாகும். நாங்கள் என்றும் அவர் நினைவோடு எம்பணி செய்து நிற்கின்றோம்.

இவ்வண்ணம்

கலாசாலை குடும்பத்தின் சார்பில்
ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
அதிபர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்

## நண்பா, நட்புக்கு இலக்கணம் நீ

குழந்தை ம. சண்முகலிங்கம்
யாழ்ப்பாணம்

"காரை" இப்படித்தான் பலரும் உன்னை அழைத்தார்கள். நானும் அந்தவாறே உன்னை விழித்தேன். உன்னோடு ஏற்பட்ட உறவு உன்னோடு மட்டும் நின்றுவிடவில்லை; உனது மனையாள், மக்கள்-வரை விரிந்து குடும்ப உறவாக மலர்ந்தது. இந்த உறவு என்னால் விளைந்த ஒன்றல்ல; உன் இயல்பால், சுபாவத்தால் விளைந்தது. நீ என்னோடு மட்டும் நட்பைக் கொண்டாடி நிற்கவில்லை. என் மனைவி, பிள்ளைகளோடும் நட்பை வளர்த்து எனக்கு வழி காட்டினாய். உன்னைப் பின்பற்றித்தான் நானும் மிக முயன்று உன் குடும்பத்தோடு என் உறவை வளர்த்துக் கொண்டேன். உறவைப் பேணுவதும் வளர்ப்பதும், நிலை நிறுத்திக் கொள்வதும் என் சுபாவத்தில் இல்லாத ஒன்று. என்னை நீ உன் உறவால், உள்ளத்தூய்மையால், கள்ளமில்லாக் குணத்தால், நேர்மையால், நட்பால் மாற்றினாய் நீ இல்லாத வேளையில் இந்த நினைப்பு என்னைக் கொல்கிறது ஐயா!

நீ எனக்குத் தந்த நட்புரிமையால், நான் திமிர்கொண்டு எத்தனை தடவைகள் உன்னைக் குறை கூறியிருப்பேன். உன்னில் குற்றம் கண்டிருப்பேன். அவற்றை நீ பொருட்படுத்தவில்லை, பெரிது படுத்தவுமில்லை. சிறிதேனும் பொருட்படுத்தியிருந்தாலல்லவோ, பெரிதுபடுத்துவது பற்றிச் சிந்தித்திருப்பாய். நட்பையே நீ பெரிதாகக் கொண்டாய். சில்லறைச் சிறு நிறங்களைப் பொருட்படுத்த முற்பட்டால் உறவு, சுற்றம், நட்பு அத்தனையும் சிதறிப்போகும் என்பதை நீ அறிந்திருந்தாய். உன்னால் எங்கள் நட்பு நிலைத்ததய்யா!

1976 ஆம் ஆண்டுதான் உனக்கு நான் அறிமுகமானேன். ஒரு கவிஞனாக உன்னை நான் முன்னமே அறிந்திருந்தேன். என்னை நீ அறிந்திருக்க நியாயம் இல்லை. கொழும்பில்தான் எங்கள் சந்திப்பு நிகழ்ந்தது. முதற்சந்திப்பிலேயே நீ என்னை நட்போடு ஏற்றுக்கொண்டாய். என்னிடம் இருக்கும் தாழ்வுச் சிக்கல் உன்னிடம் இருந்ததில்லை. உன்னிடம் தற்பெருமையும் இருக்கவில்லை. இதனால் நீ எங்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எவர் மத்தியிலும் மிகவும் இயல்பாக நடந்து கொள்வாய். உன் சிறப்புக்களை நீ அறிந்திருந்தாய், ஆயினும் அவை பற்றிய நினைப்புந்தலோடு நீ இருக்கவில்லை. அதனால், நீ எல்லோருடனும் மிகவும் இயல்பாக நடந்து கொண்டாய். உன் மானுடத்தின் சிறப்பு இதுதான். அங்குதான் உன் மானிடம் வென்றதையா. நான் வென்றிலன்; உனக்கு நிகராக நின்றிலன். இருப்பினும் நீ என்னை நிமிர்த்தி நிறுத்தினாய். உன்னருகே எனக்குச் சரியாசனம் தந்தாய். இன்று, நீ இருந்த ஆசனம் வெறுமையாகக் கிடக்கிறதேயையா!

அன்று அந்த நாடக நெறியில் பதினொரு தமிழர்கள் இருந்தோம். பத்து ஆண்கள், ஒரு பெண்மணி. இன்று உன்னை நினைக்கும்போது அத்தனை பேரும் நினைவில் நிறைகிறார்கள். அத்தனை பேரையும் பிணைத்த பொற்சங்கிலியாக நீ இருந்தாய். சங்கிலியன் நாடகத்தைக் கவிதையில் எழுதியவனல்லவா நீ. அந்தப் பதினொரு பேர்களில், இன்று இல்லாதவர்கள் பட்டியலில் நீயும் சேர்ந்து கொண்டாய். திருச்செந்தூரன் இந்தியாவில் காலமானதை அறிந்தோம், கல்யாணசுந்தரேசனின் இறுதிக்கிரியைகளுக்கு மருதனார்மடம் சென்றிருந்தோம். சிவானந்தனைக் கடைசிவழி அனுப்பி வைக்கவும் போனோம், சுந்தரலிங்கம் கொழும்பில் காலமாகி மரணச் சடங்குகள் அங்கு நடைபெற்றன. போகமுடியவில்லை. நீ லண்டனில் உன் பயணத்தை முடித்துக்கொண்டாய். இங்கிருந்து என்னை நினைந்து ஏங்க விட்டுவிட்டு நீ உன்பாட்டுக்குப் போய்விட்டாய். பாட்டெழுதும் கவிஞன் நீ வேறு என்ன செய்வாய்? உன் பாட்டுக்களால்

உருக்கினாய். இப்போ எமை இங்கிருந்து உருக விட்டு விட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டாய். மாத்தளையைச் சேர்ந்த சத்தார் பற்றி எந்தத் தகவலும் அறிய வாய்ப்பேற்படவில்லை. கந்தவனமும், குறமகளும் கனடாவில் குடியேறிவிட்டனர். தாசீசியஸ் லண்டனில் குடியிருக்கிறார். உன்னை வந்து பார்த்திருப்பார். "கவிஞர் கவிஞர்" என்று உன்னை வாயார அழைப்பாரே அவர். திருச்செல்வம்யாழ்ப்பாணத்தில்தான் இருக்கிறார். நானும் இருக்கிறேனையா!

கொழும்பில் நாடகம் கற்றவேளை நீயும், கந்தவனமும் ஒரு வீட்டில், ஓரறையில் இருந்தீர்கள். இருவரும் கவிஞர்கள். முன்னம் பலகாலம் கவியரங்க மேடைகளில் ஒன்றாகக் கவிபாடி வந்தவர்கள். கவிதையால் வந்த நட்பு உங்களுடையது. சங்கப் புலவர்கள் போல் வீற்றிருந்தீர்கள். சேர்ந்து படிப்பதற்காக நானும் உங்களோடு வந்து ஒட்டிக்கொண்டேன். அன்போடு என்னை அரவணைத்தீர்கள். தினமும் மாலை முதல் இரவு ஒன்பது மணிவரை உங்கள் தெகிவளை அறையில் நான் வந்திருப்பேன். பரீட்சைக்காகப் படிப்பதை நான் விட்டு இருபது ஆண்டுகளாக இருந்தது. சோதனைப் பயம் என்னைச் சோதித்தவண்ணமிருந்தது. "சேர்ந்து படிப்போம் எல்லாம் சரிவரும்" என்று நீ என்னை அரவணைத்தாய். அந்தப் பொழுதுகளை நினைத்தால் இப்பொழுதும் ஆனந்தமாக இருக்கின்றது. இனி, நீ இல்லையே என்ற நினைப்பு இடையில் புகுந்து என்னை வாட்டப் போகிறதேயையா!

நீ இல்லையென்று எப்படிச் செல்லிவிடமுடியும். என் நினைவுகள் நெஞ்சை நிறைத்து நிற்கின்றனவே. நீ எழுதி வெளியிட்ட நூல்கள் கண்முன்னே கிடக்கின்றனவே. "காரை சேர் எழுதிய சிங்கள அரங்கு இருந்தால் தாருங்கள்" என்று கேட்டுவரும் மாணவருக்கு அதைக் கொடுக்காமல் இருக்க முடியவில்லையே. உன்னிடம் இருந்தவற்றை நீ எல்லோருக்கும் கொடுத்தாயே. உன்னிடம் வேண்டிப் பழகிய நான், உனது நூல்களைக் கேட்டு வருபவர்களுக்கு எப்படி

"இல்லை" என்று சொல்வேன். நீ தந்துவிட்டுப் போய்விட்டாயையா! உன் படைப்புக்களினூடே உன்னை நான் பலருக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். உன் படைப்புக்கள் எதையும் நான் விலை கொடுத்து வாங்கியதில்லை - வாங்க நீ எங்கே விட்டாய்? அத்தனையும் நீ மனமுவந்து உன்கையால் தந்தவை. நான் பெற்றுக் கைசிவந்தவன். இனி எங்கே தரப்போகிறாய்? நீதான், "போகிறேன்" என்று சொல்லாது போய்விட்டியேயையா!

போகும்வரை நீ சும்மா இருக்கவில்லை என்பதை அறிந்த உன் சுபாவத்தையும், சுறுசுறுப்பையும் அறிந்திருந்த நான் மனதுக்குள் மகிழ்ந்து கொண்டேன். நீ எழுதி வெளியிடும் நாடகம் சார்ந்த நூல்கள் ஒவ்வொன்றையும் என்னிடம் தரும்போது நான் பெற்றுக் கொண்டு சும்மா இருப்பதில்லை. "காரை நீர் தொடர்ந்து எழுத வேண்டும். உம்மால்தான் அது முடியும். விடாதையும் எழுதும். அடுத்தது எது எழுதப்போகிறீர்?" என்று கேட்பேன். நீ அடுத்து எழுதவுள்ள விஷயம்பற்றிக் கூறுவாய். ஈழத்து மலையகக் கூத்துக்கள் பற்றி எழுத வேண்டும் என்று கூறிக் கொண்டிருந்த நீ, அதுபற்றியும் எழுதிவிட்டாய் என்பதை அந்த நூலுக்கு மு. நித்தியானந்தன் எழுதிய முன்னுரை பத்திரிகையில் வந்தபோது வாசித்து அறிந்துகொண்டேன். லண்டன் சென்றபின் இன்னும் என்னென்ன எழுதினாயோ நானறியேனையா!

"நீர்" என்றே அழைப்பேன் இப்போ நீரில்லை என்ற துணிவில் உன்னை நான் ஒருமையில் விளிக்கவில்லை. இன்று நீ இறைபதம் அடைந்து இறையோடு இரண்டறக் கலந்து நிற்கிறாய். இறைவனை ஒருமையில் அழைப்பதுதான் எங்கள் வழிபாட்டு மரபு. அந்த மரபில் நின்றுதானையா, இன்று உன்னை ஒருமையில் வாயார விழிக்கிறேனையா! தமிழை அறிந்த நீ இதை அறிவாய். இந்துநாகரிகத்தில் ஊறிய நீ இதை அறிவாய். உனக்கு என் விளக்கம் தேவையில்லை; உலகுக்காக உரைத்தேனையா.

எவரும் தராத ஒரு உறவை எனக்குத் தந்தவன் நீ. அதை எப்படி நான் மறப்பேன். நீ என்னை உனக்கு மூத்தவனாக ஏற்றுக் கொண்டாய். "அண்ணாச்சி" என்ற அன்பும் பாசமும் நிறைந்த சொல்லால் நீ என்னை விழிப்பாய். அந்தவாறு நீ அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பாய். உன்னைத் "தம்பி" என்று அழைக்க, என்னிடம் இராமனின் உயர்வும், மாட்சிமையும், மனப் பக்குவமும் இருக்கவில்லை. நீ தந்த அண்ணன் ஸ்தானத்தில் நான் இறங்கிக் கிடந்தேன் "அண்ணாச்சி அண்ணாச்சி" என்று அழைக்கும் உன் அன்புக் குரலின் நாதமும், தொனியும் என் செவிகளை நிறைத்த வண்ணமிருக்கின்றன. நீ பிரபஞ்சத்தில் வியாபித்து நிறைந்து நிற்க-றாயையா!

காரை உன்னை நினைக்கையில், உன் அன்பை நினைப்பதா, பாசத்தை நினைப்பதா, பற்றை நினைப்பதா, நட்பை நினைப்பதா, உறவை நினைப்பதா, உதவும் பான்மையை நினைப்பதா, தண்ணற-ிவை நினைப்பதா, அறிவை நினைப்பதா, ஆற்றலை நினைப்பதா, உயர்வை நினைப்பதா, எளிமையை நினைப்பதா, உன் கவிதையை நினைப்பதா, முத்தமிழ் வல்லமையை நினைப்பதா, மும்மொழிப் புலமையை நினைப்பதா! எதை நினைப்பது? நீள நினைந்திட நீ இருக்க, நீ இல்லை என்று யார் சொன்னார். நித்தலும் கைதொழ, இருக்கும் வரை நான் இருப்பேனையா!

உனக்கென்ன கொடுத்து வைத்தவன் நீ இல்லறத்தால் விளைந்த பேறுகளாலும், கலை இலக்கியத்தால் விளைந்த பேறுக-ளாலும், உன் எச்சத்தால் நீ உச்சத்தில் இருக்கிறாயையா! என்றும் இருப்பாய் போய்வா!

# எங்கள் பெரியப்பாவிற்கு ஓர் அன்பு மடல்

பாசத்தின் உறைவிடத்திற்கு,

முதல்நாள் கனவு ஏதோ மனதை உறுத்தியபடி என்ன பயங்கரம் நிகழவிருக்கின்றதெனச் சஞ்சலத்துடனிருக்க, பூங்குன்றன் அண்ணாவின் தொலைபேசி அழைப்பு மறுமுனையில் "பெரியப்பா எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்".

"டேய் கருணா" என்றுரிமையுடன் அழைக்கும் நீங்கள் அவருக்கு ஆறுதல் பலகூறி, அவர் மரணமறிந்து கலங்கியதும், அவர் கிரியைகளை முன்னின்று செய்ததும் இன்றும் எம் கண்முன் நிற்கின்றன.

கவலைகளிற் துவளாது, பிள்ளைகளுக்காக நீ திடமாக இருக்க வேண்டும். அவர்கள் கெட்டிக்காரர்கள் படித்து உன்னைத் தேற்றுவர் என அம்மாவை ஆற்றுப்படுத்தியதும் நினைவில் வருகிறது.

எங்கள் அண்ணா என்ன செய்தி அறிந்தாலும் அவற்றை முதலில் பெரியப்பா - பெரியம்மாவிற்குச் சொல்லியே எங்குளுக்குச் சொல்வான். உங்கள் அறிவுரைகளை ஏற்று நடக்கும் அவன் பல மைல் தூரத்திலிருப்பினும் உங்கள் சுகம் விசாரிக்க ஒருபோதும் தவறுவதில்லை.

எங்களைச் சொந்தப் பிள்ளைகளைப்போல் பார்க்கும் நீங்கள் எங்கள் அக்காவின் திருமணத்தை ஒப்பேற்றி வைத்து, அவர்களிடத்திலும் நல்ல பாசத்தைவைத்து நடந்தீர்கள்.

நாம் சிறு பிள்ளைகளாக 1983 கலவரத்தின்போது யாழ்ப்பாணம் வந்தபோது, எனக்குப் பூப்போட்ட துணிதான் வேண்டும் என நான் அடம்பிடித்தபோது என்னை அழைத்துச் சென்று, முழுத்துணியையும் இறக்கவைத்து எடுத்துத்தந்து, இன்றும் அதைச் சொல்லிச் சிரிப்பதை பெரியப்பா உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?

எங்கள் தம்பி தான் சுகவீனமுற்றிருந்த போதும் உங்களுக்கு சிறுநீரக வியாதி என்றபோது தன்சிறுநீரகம் ஒன்றை உங்களுக்குத் தருவதாகக் கூறியதும், அதை அறிந்து "எனது பிள்ளை" என நீங்கள் கண்கலங்கியதும் நினைவிருக்கிறாதா பெரியப்பா?

நீங்கள் பாசமுள்ள குடும்பத் தலைவனாகவும், நல்ல தந்தையாகவும், நல்ல பெரியப்பாவாகவும் எங்கள் எல்லோருக்கும் வாழ்வின் கலங்கைரை விளக்காக நின்றொளி தந்தீர்கள் எப்படித்தான் உங்களை மறக்க முடியும்.

கருணாநிதி காவேரி

# புகழ்பூத்த நல்ல நண்பன்

வளலாயூர். செ. சிவசம்பு
அச்சுவேலி

காரை தந்த சுந்தரனார் புகழ்பூத்த பெருங்கவிஞர்
ஊரெங்கும் கவியரங்கால் உணர்வலைகள் எழுப்பியவர்
சீரியநற் கருத்தியம்பிச் சிந்தனையைத் தூண்டியவர்
பாரைவிட்டுப் பிரிந்ததினால் மக்களெல்லாம் பெருந்துயரில்

ஈடில்லாச் சாதனைகள் இலக்கியத்தில் நாடகத்தில்
ஈட்டியதால் பட்டங்கள் பலபெற்றுப் பெருமையுற்றார்
தேடரிய கல்விதந்த ஆசானாய் அதிபராய்
ஈடில்லா ஆசிரியர் பலரையிங்கு பயிற்றுவித்தார்

கல்விதந்து கற்பிக்கும் பயிற்சிதந்து பெருமையுடன்
நல்லிலக்கியம் நாட்டுக்கூத்து நாடகங்கள் ஆய்வுசெய்து
பல்சார்புடைய நூல்கள் பலபடைத்த பெருமையினால்
கல்வியுலகம் கதறியழக் காசினியை விட்டகன்றார்

முத்தமிழ் வித்தகனாய் முதுபெரும் நல்லாய்வாளனாய்
எத்திக்கும் புகழ்மணக்கத் தமிழ்த்தொண்டு புரிந்தவரே
இத்தரையில் ஏற்றமிகு நல்நண்பனாய் எம்முடனிருந்தவரே
பக்தியுடன் பரமனடி சென்றடையத் தொழுகின்றோம்

# கல்வி கலை இலக்கிய சமூகப் பணியில் கவிஞராய், ஆசிரியராய், நாடக நாட்டுக்கூத்து ஆய்வாளனாக - காரை செ. சுந்தரம்பிள்ளை

**கந்தையா ஸ்ரீகணேசன்** B.A.(Hons.), M.Phil.
ஆங்கில விரிவுரையாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வவுனியா வளாகம்

ஈழத்துத் தமிழர்களின் வரலாற்றில் எண்பதுகளின் ஆரம்பம் ஒரு முக்கிய சந்தி. ஆம் அரசியலில் வன்முறைச் சூழல் சமூகத்தைப் பிணித்த வேளை அது. அரசின் அரசியல் ஒடுக்குமுறையும், ஆயுத அடக்கு முறையும் தமிழர் சமூகத்தை ஆயுதக் கலாசாரத்துள் தள்ளிய காலம் அது. 1981 மாவட்டசபைத் தேர்தல் குழப்பங்கள் ஒருபுள்ளி.

சமூகப் பொறுப்புமிக்க எழுத்தாளர்கள் மண்ணின் மக்களின் பிரச்சினைகளைக் கூர்ந்து நோக்கி அவற்றுக்கு இலக்கிய உருவம் கொடுத்துத் தம்கடனைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளையும், கவிதைகளால் காவியம் தீட்டிக் கொண்டிருந்தார். மேடையிலும், பத்திரிகைகளிலும் எழுத்துக்கள், பேச்சுக்கள் ஊடாக அறிந்த பேர் அது.

1983 இல் பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆசிரிய மாணவராகச் சேர்ந்த காலத்தில் கவிஞர் அவர்களிடம் இந்துநாகரிகம் கற்கும் வாய்ப்பு எமக்குக் கிட்டியது. ஏற்கனவே இந்துநாகரிகத் துறையில் பேர்பெற்ற, இலக்கிய உலகில் அடிபட்ட பெயர்; இதன் மூலம் எனது ஈர்ப்பு அதிகரித்த நேரத்தில் அவரிடம் படிக்கக் கிடைத்தது மனதுக்குத் திருப்தியை அளித்தது. மடைதிறந்த வெள்ளம் போலச் செல்லும் விரிவுரைகள்; இந்துநாகரிகம் கங்கைக் கரையைத் தாண்டியும் செல்லும்; கதிர்காம மாணிக்க கங்கையிலும் நீராடிய சுகம் தரும்; சைவ சித்தாந்தம் கூறும் அநுபூதி கூடிவரும் பக்குவத்தையும் எடுத்தியம்பும்;

> "கூடும் அன்பினில் கும்பிடவேலன்றி
> வீடும் வேண்டா விறலின் வேண்டினார்"

எனும் சேக்கிழார் கூறும் பெரியபுராணத்து அடியவர்தம் மனோ நிலையையும் விரிந்து நிற்கும்; சிந்து வெளி தாண்டிச் சென்று சிவ வழிபாட்டை விளக்கி நிற்கும்; இப்படியாகத் தங்குதடையின்றி மெல்லிய ரீங்காரமான குரலில் எம்மை இப்பூவுலகை விட்டு வேறு உலகில் சஞ்சரிக்க வைத்துவிடுவார் கவிஞர் காரை .செ. சுந்தரம்ப-ிள்ளை அவர்கள்.

இதே குரலைக் கம்பன் கழக மேடைகளில் கவிதைப் புனலூ டாக நுகர்ந்து கொண்டது இன்னொரு கதை. சலசல எனப் பாய்ந்து ஓடும் அருவி நீரூற்றுப்போல எம்மவர் பிரச்சினைகளைப் பாடி-வரும் அவர் கவிதைகள். ஆம் 1983 இல் வெடித்த இன அழி-ப்புக் கலவரம் தமிழரைத் தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வடக்குக் கிழக்கு நோக்கி விரட்டியதும், தொடர்ந்த போரும் அதனால் விளைந்த அவலங்களும் கவிஞரின் கவிதைகளோடு எளிமையுடன் பதிவாகின. அவரது ‘காவேரி’ காவ-ியமும், ‘சங்கிலியம்’ வரலாற்று நூலும், பிறவும் அவர்தம் கவிதை ஆற்றலைப் பறைசாற்றுவன.

நாடகத்துறையில் ஒரு நடிகராக, எழுத்தாளராக, கூத்தாளராக, விமர்சகராகப் பின்னர் ஒரு ஆய்வாளராக மிளிர்ந்த கதை இன்னொ-ாரு தனிக்கதை. பழகுவதற்கு இனிமையாய், எளிமையாய்த் திகழ்ந்த காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் ஒரு கூத்துப்பரம்பரையில் தோ-ன்றியதும், ‘இசைநாடக வரலாறு’ பற்றிப் பட்டப் பின்படிப்பு ஆய்வு செய்து நூலாக வெளியிட்டதும் முதலில் அறிந்த செய்திகள். எமது பட்டப்படிப்புக்கு, நாடகத்துறையில் உசாத்துணைக்கு உதவிய நூல் அது. அதனை வாசித்த காரணத்தால் எழுந்த ஆர்வத்தினால் இசை நாடகங்களைத் தேடிப்பார்க்கப் புறப்பட்டது ஒரு கதை. அதைவிட இசைநாடகத்தில் முத்திரை பதித்த நடிகமணி வி. வி. வைரமுத்-துவின் ஆளுமை துலங்கும் வண்ணம் அவர் எழுதி வெளியிட்ட ‘நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்’ எனும் நூ ல் எதிர்காலச் சந்ததிக்கு ஒரு வரப்பிரசாதமான நூலென்றால் அது மிகையாகாது. ஒவ்வொரு அதிகாரமும் ஒவ்வொரு ‘வாசகங்களுடன்’ தொடங்கும். அது அந்த அதிகாரத்தின் தொனிப்பொருளைச் சுட்டிநி-ற்கும். அரங்கில்

வைரமுத்துக் காட்டிய மேதகு நுட்பங்ளை மனக்கண்கொண்டுவந்து நிறுத்தும் ஒரு நடை கவிஞரின் நடை; இதற்கு மெருகூட்டுவது அவரது ஆய்வு நோக்கும் நுட்பமும்.

கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை அவர்களின் மேன்மை துல-ங்கிய இடம் அவரது கலாநிதிப் பட்ட ஆய்வு நூல் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. எமது பட்டப்படிப்புக் காலங்க-ளில் கவிஞரும், பேராசிரியர் சிவத்தம்பியும் மேற்கொள்ளும் கூத்-துப்பற்றிய விவாதங்கள் மாணவராகிய எங்களுக்குச் சுவைமிக்க உணவாகியது ஒன்றும் புதுமையில்லை. ஒருமுறை 'spectators' என்ற சொல்லுக்கு, 'பார்ப்போர்' என்ற சொல்லையே அறிமுகப் படுத்த வேண்டும்; 'பார்வையாளர்' அல்ல என விவாதம் தொட-ர்ந்தது. அவரது நுண்மாண்நுழைபுலம் செறித்த நூல் 'வடஇலங்கை நாட்டார் அரங்கு' இதற்கான ஆய்வுப் பகுதியும் அறிமுறை விவா-தமும் அதனைச் சுட்டி நிற்கின்றது.

கிழக்கிலங்கைக் கூத்துக்கள்பற்றி அறியக் கிடைக்கும் பேராச-ிரியர் சி. மௌனகுரு எழுதிய 'மட்டக்களப்புக் கூத்து மரபு' எனும் நூலுக்குச் சமாந்தரமாக வடஇலங்கை நாட்டுக்கூத்துக்கள் பற்றி முல்லைத்தீவு, மன்னார், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் என யாழ்ப்பாண மாவட்டம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் வழக்கில் இருந்து வந்த, இன்றும் பயில் நிலையில் இருக்கின்ற சகல நாட்ட-ார் மரபுகளையும் ஆய்வுக்கு எடுத்துப் பதிவு செய்துள்ள முறைமை எமது அரசியல் இருப்பை ஆழமாகத் தெளிவுபடுத்துகிறது. பல்வேறு கூத்துக்கலைஞர்களை நேரடியாகச் சந்தித்தும், கூத்து நூல்களை, ஏடுகளை ஆய்வு செய்தும், கூத்துக்கள் சிலவற்றில் நடித்தும், மாண-வர்களுக்குப் பழக்கியும் தன்பணியைச் செவ்வனே செய்தமை அவர் தன் சமூகத்திற்கு ஆற்றிய தொண்டு என்பது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

ஒரு ஆசிரியராக, விரிவுரையாளராக, ஆசிரியர் கலாசாலை அதிபராகச் சேவையாற்றி ஓய்வுபெறுவதற்கும் மேலாக ஒரு கவிஞனாக, மேடைப் பேச்சாளனாக, இலக்கிய சமயச்

சொற்பொழிவாளனாக, நாடக நடிகனாக, கூத்து ஆய்வாளனாகத் தனது பங்கை சமூகத்தார்க்கு வழங்கிவரும் காரை செ. சுந்தரம்பி- ள்ளை அவர்களுடன் இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1993 இல் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடாத்திய நாடகக் கருத்தரங்கு அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பத்தை வழங்கியது.

மாணவனாகப் பழகிய வேளையிலும் இனிமையுடனும், எளிமையுடனும் பழகியவர். பின்னர் தோழமையுடனும், நட்புடனும் இணைந்து கொண்டார். போர் காரணமாக இடம்பெயர்ந்து வாழ்ந்த வேளையிலும் ஷேக்ஸ்பியரின் நாடக நூல்கள் சிலவற்றைத் தந்து மேலும் ஆங்கில, தமிழ் நாடகத் துறையில் செயற்படும்படி ஊக்குவ- ித்தமை அவரது பெரும் மனப்பாங்கைத் தெட்டெனப் புலப்படுத்- துகின்றது. தமிழர்தம் போர்வாழ்வு எம்மவரைப் பேணவும், அவர்தம் உறவுக்கு மேலும் விருத்தி பெறவும் வாய்ப்பை வழங்கவில்லை. போர் தந்த பெரிய சங்கடம் உறவுகளைப் பிரியநேர்ந்தமை. நே- ாய்நொடிகளினின்றும் நாம் தப்பி வாழ்ந்தாலும், போர் தந்துள்ள பல இடைஞ்சல்கள் எமது பூமியில் மூத்தவரின் முதுமைக்கால வாழ்வை மேற்கொள்ள வசதி செய்யவில்லை. கவிஞர் காரை செ. சுந்தரம்பி- ள்ளை போன்ற அறிஞர்கள் இலக்கிய கர்த்தாக்களின் நல்ல பல கருத்துக்களை எமது சமூகமும், நாமும் பகிர்ந்துகொள்ள முடியாத நிலையில் எமது நாட்டுச் சூழ்நிலை இருந்தது அவலமான நிலை. இருப்பினும் நீண்டநெடும் பயணமான இந்த வாழ்வில் பல்வேறு கலை இலக்கிய கல்வி மற்றும் சமூகப் பணிகளை ஆற்றியும் அவற்றை இன்று பதிவுகளாக்கியும் வந்த காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களின் மறைவு ஈடுசெய்யமுடியாதது.

# காரைதந்த அறிஞர் பெருமகன் காரை செ. சுந்தரம்பிள்ளை தமிழ் உலகம் போற்றும் கல்விமான்

**ஐ. தி. சம்பந்தன்**
ஆசிரியர் – இலண்டன் 'சுடரொளி'

சைவமும் தமிழும் வளர்த்த காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை 1938 ஆம் ஆண்டு மே 20 ஆம் திகதி பிறந்தார். அன்னார் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதி இலண்டனில் இறைபதம் எய்தினார். இவ்வுலகில் 67 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார்.

பெற்றதாயையும் பிறந்த பொன்னாட்டையும் மறவாத நாட்டுப்பற்றாளர். இன உணர்வுடன் வாழ்ந்து தமிழுக்கும் சமூகத்திற்கும் அளப்பெரும் பணியாற்றியுள்ளார்.

ஒருவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பதல்ல. அவர் வாழ்ந்த காலத்தில் தமது குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் பிறந்த நாட்டிற்கும் எத்தகைய பணியாற்றினார் என்பது நோக்கற்பாலது.

பிறந்தவர் எல்லோரும் பெரும்பணியாற்ற வாய்ப்புக் கிடைப்பதில்லை. நானும் அவர் ஊரில் பிறந்து அவருடன் இளமையில் கல்வி கற்கும் காலத்தில் பாடசாலைக்குச் செல்லும்போது இருவரும் 1 அல்லது 1 $^1/_2$ மைல் தூரம் நடந்து சென்றுதான் பஸ் வண்டியில் பிரயாணம் செய்வோம்.

நான் படித்தது காரைநகர் இந்துக்கல்லூரி. அவர் படித்தது சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி. இருவரும் இளமையிலிருந்தே தந்தை செல்வாவின் தமிழ் அரசுக்கட்சி அரசியலில் ஈடுபட்டவர்கள்.

கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை 1980 இல் காரைநகர் இந்துக்கல்லூரியின் அதிபரானார். இவர் எக்கட்டத்திலும் குழப்பமடையாது ஒரு பண்பாளனாகப் பெருமை காத்த மனிதனாகக் கல்லூரியின் உயர்வுக்குச் சிறப்பாகப் பணியாற்றினார்.

கல்வித்துறையில் பட்டதாரியான இவர். முதுமாணிப் பட்டம் பெற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலாநிதி ஆக்கியது. மேலும் இவரது கல்வி உயர்வுக்கும் கல்விப் பணிக்கும் வாழ்வின் வளத்துக்கும் அவர் புகுந்த இடம் பெரும் உயர்ச்சியைக் கொடுத்தது.

தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளரும் அதிபரும், சமூகத் தொண்டருமாகிய அல்வாய் வடக்கைச் சேர்ந்த ஆசிரியர் திலகம் முருகேசு வாத்தியார் தம்பதிகளின் ஏகப் புதல்வி இந்திராவதியை 1964 இல் திருமணம்செய்து கொண்டார். தமிழ்ப்பற்று நாட்டுப்பற்றாளரின் மகளைத் திருமணம் செய்யும் வாய்ப்பு இவரது கல்விப்பணிக்குத் தூ ண்டுகோலாக அமைந்தது.

அவர் எந்த ஊரில் திருமணம் செய்து கொண்டபோதிலும் தமது பிறந்த ஊரை நினைவுகூரும் முகமாக காரை சுந்தரம்பிள்ளை என்ற முத்திரையை எல்லாத் துறையிலும் பொறித்துக்கொண்டவர். அதனால் காரைநகருக்குப் பெருமை தேடிய பெருமகன்.

கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் ஆசிரியராக, அதி-பராக, விரிவுரையாளராக, கவிஞராக, எழுத்தாளராக, நடிகராக, நாடக ஆசிரியராக, தமிழரசுக் கட்சி ஆதரவாளராகப் பல்துறையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் வித்திட்ட நாடகத்துறையை மிளிரவைத்த பெருமை காரை சுந்தரம்பிள்ளை அவர்களுக்கு உண்டு.

தமிழர் தாயகத்தில் வளர்ந்துவந்த நாடகக் கலைகளை மட்டும-ன்றி மலைகயகத் தமிழ் மக்களின் நாட்டுக் கூத்து, நாடகக் கலை பற்றி மறையும்வரை எழுதிக்கொண்டிருந்தார்.

சில மாதங்களாக நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருந்து கொ-ண்டு வாசிக்க, எழுத முடியாத நிலையில் தனது மனைவி, மக்க-ளின் உதவியுடன் அந்த நூலை நிறைவு செய்து 'ஈழத்து மலையகக் கூத்துக்கள்' ஆக்கப் பிரதியைப் பார்த்த பின்னரே அன்னார் ஆவி பிரிந்தது. சாகும் போதும் 'தமிழே' என்ற உணர்வுடன் மறைந்த பெருமைக்குரியவர்.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாளி, சிங்களம் ஆகிய

மொழிகளில் அறிவு பெற்றுள்ளார்.

எழுத்துத் துறையில் தீவிரமாக ஈடுபட்ட இவர் படைத்த தேனாறு, சங்கிலியம், ஈழத்து இசைநாடக வரலாறு, இந்துநாகரிகத்திற் கலை, நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் ஆகிய நான்கு நூல்களுக்கு இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தன.

தமிழர்களிடையே கிராமம் தோறும் மறைந்திருந்த நாடகத்துறைக்கு மெருகூட்டிய பெருமைக்குரியவர் கலாநிதி சுந்தரம்பிள்ளை அவர்கள்.

நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் ஊடாகப் பல்வேறு அம்சங்களை மிகச் சுவையுடன் வெளிக்கொணர்ந்துள்ளார். இந்த நாடக வரலாற்றின் சிறப்பினை உணர்ந்தும், அன்னார் நோயுற்றுப் படுக்கையில் இருக்கின்றார் என்பதையும் அறிந்து அவரை இருக்கும்போதே கௌரவித்து நடிகமணி 'வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்' எமது இரு மாத வெளியீடான 'சுடரொளி' இல் வெளியிட்டு வருகின்றோம்.

இதற்கு வாசகர்களிடமிருந்து கிடைத்துவரும் பாரட்டுக் களிலிருந்து ஒரு வரலாற்றுப் பணியைச் செய்துவிட்டுச் சென்றுள்ளார் என்பது தெரிகிறது.

அன்னாரது எழுத்துப் பணி, கல்விப்பணி, சமூகப்பணி வளர அவருக்குத் தோற்றாத் துணையாக இருந்த அன்னாரது துணைவியார் திருமதி இந்திராவதி பாராட்டப்பட வேண்டியவர்.

அன்னார் மறைந்துவிட்டாலும் அவர் விட்டுச் சென்ற தமிழ்ப் பணியைத் தொடர்வதற்கு வாரிசுகளை உருவாக்கிச் சென்றிருப்பது எமக்கெல்லாம் ஆறுதல் அளிப்பதாகும்.

இந்த மன நிறைவுடன் அன்னார் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போமாக.

களபூமி, காரைநகர்,<br>தமிழீழம் – 10.10.2005

# கலைஞர் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளைக்கு ஓர் அஞ்சலி

சு. ஸ்ரீகாந்தலிங்கம்
ஸ்ரீகாந் - சட்டத்தரணி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுலகம் எய்துவிட்ட என் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய காரை அவர்களை 25 வருட-ங்களுக்கு மேலாக நான் அறிவேன். அவர் மோட்டார் சைக்கிளில் இறங்கி தலைக் கவசத்தைக் கழற்றிக் கையில் எடுத்துக்கொண்டு அதை விசிக்கி விசிக்கி மிடுக்கான நடையுடன் தன்னம்பிக்கை-கயின் உதாரண புருஷனாக வகுப்பறைக்குள் நுழைந்து மாணவர் முன்னிலையில் நிற்கும் காட்சி என் கண்ணில் இன்றும் பசுமையாக நிற்கின்றது.

1970களின் இறுதியிலும் 1980களின் ஆரம்பத்திலும் தனியார் கல்விக் கூடங்களில் அவருடன் சக ஆசிரயராக அவர் கல்வி போதி-க்கும் அதே மாணவருக்குக் கல்வி போதிக்கும் பாக்கியம் பெற்றவன் நான். அவர் இந்துநாகரிகம், தமிழ் ஆகிய பாடங்களைப் போதிக்க நான் அதே மாணவருக்கு அளவையியல் (Logic) என்ற பாடத்தைப் போதித்தேன். அவரோ ஓர் பெரிய கல்லூரியின் அதிபர் (காரைநகர் இந்துக் கல்லூரி) நானோ ஒரு கல்லூரி மாணவன் (சட்டக் கல்லூ ரி).

அக்காலகட்டத்திலே அவர் ஓய்வாக இருந்த நேரங்களில் அரசியல், இலக்கியம், இந்துமதம், இந்துகலாச்சாரம், கலை, நாடகம், நாட்டியம் போன்ற பல்வேறு விடயங்களிலும் அவர் கலந்துரையா-டியவற்றைக் கேட்கச் சந்தர்ப்பம் கிடைத்தமை பெரும் பாக்கியமாக அன்றும் கருதினேன்; இன்றும் கருதுகிறேன்.

மிகவும் எளிமையான, மிகவும் நேர்மையான, கொண்ட கொ-ள்கையில் உறுதி தவறாத நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும் கொண்ட அவரின் அன்பு கனிந்த "தம்பி" என்ற

வார்த்தைகளை இன்னும் எண்ணிப் பார்க்கிறேன். நான் கண்ட பெரிய மனிதர்களுக்கெல்லாம் பெரிய மனிதர் அவர்.

ஏறத்தாள 4 வருடங்களுக்கு முன் ஆசிரியர் அவர்கள் லண்டன் வந்துள்ளார் என்ற செய்தி அறிந்து அவரை அவரது இல்லத்தில் சந்தித்தேன். 63 வயதானாலும் அவரது உடலிலோ, மனத்திலோ அது தெரியவில்லை. அவரிடம் அவர் ஆடிய கூத்துக்கள் பற்றி விசாரி–த்தேன் சோபா செற்றியிலே இருந்தவர் வில்லில் இருந்து புறப்பட்ட அம்புபோல் பாய்ந்தார், எழுந்தார், நாலைந்து நிமிடமாகப் பம்பரம்போல் ஆடினார். அதைப்பார்த்த அனைவரும் பயந்தோம் அவருக்கு ஏதும் ஆகிவிடுமோ என்று. ஆட்ட முடிவில் கட்டளையொன்று போட்டார் "தம்பி வடஇலங்கை நாட்டார் அரங்கு என்ற நான் எழுதிய நூலை லண்டனில் வெளியிட உள்ளேன் நீர் அதற்கு விமர்சனம் செய்கிறீர்" என்று. ஓர் கவிஞன், எழுத்தாளன், சமூகசேவையாளன், கலைஞன், ஆசான், கல்லூரி அதிபர், பல்கலைக்கழக விரிவுரையாளர், இரு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர், ஒரு கலாநிதி தான் எழு–திய நூலை விமர்சிக்கும்படி கேட்டதை பெரும் பேறாகக் கருதி அன்பரின் அன்புக்கட்டளையை நிறைவேற்றியதை என் வாழ்வில் பெறும் பேறாகக் கருதுகிறேன்

காரைநகர் பெற்ற தவப்புதல்வன் இறைவனடி சேரச் சில நாட்களுக்கு முன் அவரை வைத்தியசாலையில் கண்டபோது அன்று நான் கண்ட சிங்கமா இது என்று என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை.

புகழுடன் தோன்றிப் புகழுடன் வாழ்ந்து புகழுடன் மறைந்த தமிழ்த்தாயின் தவப்புதல்வன், காரைநகர் தந்த அறிஞன் காரை சுந்தரம்பிள்ளை. அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொ–டர அவரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் சக்தியை வழங்குமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

சாந்தி சாந்தி சாந்தி.

# எங்கள் அத்தான்

முருகேசு இராஜவரோதயன்
ஆசிரியர்

ஈழத் திருநாட்டை உலுக்கிய பேரழிவு 26.12.2005 இடம்பெற்றது. ‘சுனாமி’ என்ற ஆழிப்பேரலை எமது நாட்டின் கரையோரப் பகுதி-களைத் தாக்கிப் பெரும் உயிர்களையும், உடைமைகளையும் துவசம் செய்தது. இந்தத் துன்பகரமான நிகழ்வோடு 2005 ஆம் ஆண்டு பி-றந்திருந்தது.

இந்த 2005 ஆம் ஆண்டு எமது குடும்பத்திற்கும் பல சோக நிகழ்வுகளைத் தந்திருக்கிறது. எமது தந்தை (வட அல்வை முருகே-சனார்), எமது ஒரு அக்காவின் மகன் (கருணாநிதி கஜன்) அடுத்து எங்கள் அத்தான் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை என மூவரை இழந்துள்ளோம். இந்த இழப்புக்கள் எமக்கு என்றென்றும் ஈடு செய்ய முடியாதவை.

எங்கள் அத்தான் பெரியக்காவின் கைபிடித்துக் கணவரானதன் மூலம் எமக்கு அத்தானானார். உண்மையிலேயே எங்களுக்கு இப்படி-யொரு அத்தான் கிடைத்தமைக்கு எமது குடும்பம் பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

எங்கள் தந்தையின் நல் மனம், நல் நோக்கம், நற்சிந்தனை இவற்றுக்குக் கிடைத்த பெறுமதி மிக்க பரிசு என்றால் அது அத்தான் என்றுதான் சொல்ல வேண்டும்.

எங்கள் வீட்டிற்குக் காலடி எடுத்து வைத்த அத்தான், எமது குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் அன்புள்ள சகோதரனாக, மைத்துனனாக, மாமாவாக, பெரியப்பாவாக இறுதிவரை வாழ்ந்து வந்தார்.

நான் மூன்றாம் தரத்தில் படித்துக்கொண்டிருந்த காலம் பாடசாலை விடுமுறை எப்போது வரும் என எதிர்பார்த்திருப்பேன். விடுமுறைக்கு முன்னதாக “அன்புள்ள தாத்தா பாடசாலை விடுமுறைக்கு ஞானியை வீட்டிற்கு அனுப்பி வைக்கவும்” என மாது, பூங்குன்றன் எழுதும் கடிதம் எங்கள் வீட்டிற்கு வந்திருக்கும். பாடசாலை விடுமுறைக்காக மூடப்பட்ட மறுநாளே எனது உடுப்புக்களையெல்லாம் மடித்து வைத்துக்கொண்டு பெரியக்கா வீட்டிற்குச் சென்றுவிடுவேன். இப்படியாக ஒவ்வொரு விடுமுறைக் காலங்களையும் பெரியக்கா, அத்தான், பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாகக் கழிப்பேன். சுருக்கமாகக் கூறினால் பெரியக்கா, அத்தான் ஆகியோருக்கு ஒரு பிள்ளையாகவே வாழ்ந்து வந்தேன்.

தொடர்ந்து ஆறாம் தரத்தில் படிப்பதற்காகப் பாடசாலை மாற்றலாகி, யாழ் மத்திய கல்லூரிக்குச் சென்றேன். அங்கே பூங்குன்றன், திருப்பரங்குன்றன் ஆகியோர் படித்துக்கொண்டிருந்தனர். அதன் பின்னர் என் வாழ்நாளின் பெரும் பகுதி பெரியக்கா வீட்டிலேயே கழிந்தன. இன்றுவரை என் வாழ்க்கையில் பெரும்பகுதி பெரியக்கா, அத்தானின் அரவணைப்பிலேயே இருந்தது.

இன்றைக்கும் சிறுவயதிலே கூறிய விடயமொன்று ஞாபகம் வருகின்றது. எங்கள் வீட்டில் அண்ணா கந்தவரோதயன் தான் அப்பாவின் பிள்ளை என்று சொல்ல, எங்கள் அம்மா தனது பிள்ளை தம்பி இந்திரோதயன் என்று சொல்ல, சிறிது நேரம் யோசித்து விட்டு நான் பெரியக்காவின் பிள்ளை என்று கூறினேன்.

நானும், அண்ணாவும், தம்பியும் எங்கள் ஒரேயொரு அக்காவைப் பெரியாக்கா என்றே அழைப்பது வழக்கம். இதற்குக் காரணங்கள் உண்டு. எங்கள் அப்பா என்றைக்கும் தானும் தனது குடும்பம் என்று வாழ்ந்தவரல்ல. தனது குடும்ப உறவுகள் பலரைத் தனது பிள்ளைகளாக வளர்த்தவர் மட்டுமன்றிக் குடும்பத்திற்கு அப்பாற்சென்று நாடகக் கலைஞர் நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களையும் வளர்த்தெடுத்து உருவாக்கிய பெருமை அப்பாவிற்கு உண்டு. அவரை இன்றும் வைரமுத்துப் பெரியண்ணா என்றே நாம்

கூறிவருகிறோம்.

பிள்ளைகளின் நலன் கருதி யாழ்பாணத்தில் பெரியக்கா குடும்பம் குடியேறியது. இயற்கையாகக் கடலோடு சூழ்ந்த அவர்களது இருப்பிடம் மிகவும் அழகானது. கடலிலே அடுக்கடுக்காகச் செல்லும் கப்பல்கள், ஓ . . என்று வீசும் சோழகக் காற்று, தப்புத் தண்ணீரில் மீன்பிடிக்கக் காத்திருக்கும் கொக்குகளும், நீர்க்காகங்களும், வானத்தில் உயர உயரப் பறக்கும் பட்டங்களும் எங்களுக்குப் பிடித்தவை. அவர்களது வீட்டைச் சுற்றியிருந்தவர்கள் பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் எனவே கிறிஸ்மஸ், வருடப்பிறப்பு என்றால் பெரும் கொண்டாட்டமாகவே இருப்பது வழக்கம். அவர்கள் அத்தான் - பெரியக்கா குடும்பத்தோடு உடன்பிறவா சகோதரர்களாகவே வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கும் அத்தானின் இழப்புப் பெரும் சோகமாகவே இருக்கும்.

நானும் பூங்குன்றனும் உயர்தர வகுப்பில் ஒன்றாகப் படித்தவர்கள். படிக்கின்ற காலங்களில் நண்பர்களுடன் கூடியாடித் திரிந்து விட்டு வீட்டுக்கு வரச் சில வேளைகளில் இரவு 10 மணியாகிவிடும் அந்த வேளையில் அத்தான் கண்டிப்பார் எனப் பயந்து பின்பக்கத்தால் வந்து பெரியக்காவிடம் உணவை வாங்கி உண்டுவிட்டு உறங்கிவிடுவோம். அப்போது அத்தான் விழித்திருந்து அவரின் அறையில் ஏதாவது எழுதிக்கொண்டேயிருப்பார். பின்னர் இரவு விடிந்ததும் அத்தான் காலை 6 மணிக்கே தனது கடமைகளுக்காகப் புறப்பட்டுவிடுவார். அதன்பின்னரே நாம் நித்திரையால் எழும்புவோம். அத்தான் ஒருபோதும் எம்மைக் கண்டித்தது இல்லை.

1995 ஆம் ஆண்டின் இடப்பெயர்வின் பின் பல மாற்றங்கள் நிதழ்ந்தன. துளசி, மாது ஆகியோர் இலண்டனிலும், பூங்குன்றன், பரங்குன்றன் ஆகியோர் கொழும்பிலும் வாழ்ந்தனர். இராணுவ நடவடிக்கை காரணமாகப் பெரியக்கா வீட்டாரும் அந்த இடத்தை விட்டு வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டது.

அத்தான் தனது இறுதிக் காலங்களில், சில மாதங்கள்

புத்தூரில் உள்ள எமது வீட்டில் சேர்ந்து வாழ்ந்தது பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. இந்தக் காலத்தில்தான் யாழ் சேவை ஒலிபரப்பாளர்கள் பொங்கல் கவியரங்கம் ஒன்றினை எமது வீட்டில் வைத்து ஒலிப்பதிவு செய்தனர். இதில் அத்தான் உட்படப் பல முன்னணிக் கவிஞர்கள் பங்குபற்றினர். இதுதான் எங்கள் அத்தான் 'கவிஞர் காரை' இன் இறுதிக் கவியரங்கமாக இருந்திருக்கும் என நினைக்கிறேன். அவர் வடித்து வாசித்த அந்தக் கவிதை வரிகள் எங்கள் வீட்டுச் சூழலில் இன்றும் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

அத்தான் எங்கள் அம்மா மீது அளவு கடந்த அன்பும், மரியாதையும், நம்பிக்கையும் வைத்திருந்தார். நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் பெரியக்காவிற்கு கூறினாராம் "உங்கள் அம்மா எனக்குப் பக்கத்தில் இருந்து சமைத்துத் தந்தால் நான் இன்னும் பலகாலம் இருப்பேன்" என்று. இது மட்டுமல்லாது கொழும்பு அப்பலோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அம்மாவிற்குக் கூறினார் நான் விரைவாக இறந்து விடுவேன் எனது பிள்ளைகளைக் கவனமாக நீங்கள்தான் பார்க்கவேண்டும். இந்த வார்த்தைகள் எங்கள் நெஞ்சை உருக்கிக் கொண்டே இருக்கின்றது.

அத்தான் எப்பொழுதும் சுறுசுறுப்பானவர் தலையிடி, காய்ச்சல், என்று படுக்கையில் படாதவர். இறுதிக் காலங்களில் நோய்வாய்ப்பட்டது எங்கள் எல்லோர் மனதையும் மிகவும் வேதனைப் படுத்தியது. எனினும் இந்த 67 வருடத்தில் அவர் செய்த சாதனைகளும், அவருக்கு உள்ள புகழும் இந்த மண்ணில் அவரை வாழவைத்துக் கொண்டேயிருக்கும்.

'ஆனந்தகானம்'
ஆவரங்கால், புத்ததூர்

## அன்பின் சிற்றப்பா

பெறாமகன் ந. யோகராஜா
ஜேர்மன்

பார் போற்றும் எம் - சிவ
பெருமான் குடி கொள்ளும்
சீர் பூத்த ஈழத்து
சிதம்பரத்தை தன்னகத்தே கொண்ட
கடல் தமிழ் பொங்கும்
காரைநகர் பிட்டியொல்லை கிராமத்தில்
கண்ணகி அம்மன் அருளினால்
கவ்விக் கண்ணாய் உதித்தீர்கள் - பெரும்
கல்வி மானாய் திகழ்ந்தீர்கள்
கவிஞனாய் கலை இலக்கியவாதியாய்
கலை பண்பாட்டினைக் காத்த
கவி நாயகனாய் திகழ்ந்து
காலமெல்லாம் போற்றும்
கல்விக் களஞ்சியமாய் வாழ்ந்தீர்கள்
கற்றவர் அவை தனிலே
கல்விப் பெருந் தகையாய்
புகழென்னும் உச்சியிலே
மணிமகுடம் தரித்தீர்கள்
காரை ஈழத்துச் சிதம்பரத்தை
சீராக வேண்டி நின்று
சிறப்புடன் வாழ்ந்து
காரைநகர் தன்னிலே கல்வியின்
தலை சிறந்த தலைமகனாய் திகழ்ந்து
அன்பான குடும்பத்தில் பண்பான
தலைமை தலைவனாய் வாழ்ந்தீர்கள்
யார் கண்பட்டதோ

பொல்லாத நோய்வந்து நீங்கள்
உறங்காமல் தவித்தபோதும்
உறங்காத உங்கள்
கலை இலக்கிய பணிதனை தினம்
மனதில் கொண்டு வாழ்ந்தீர்கள்
சொல்லிழந்து செயலிழந்து
சொப்பனம் தானிழந்து தங்கள்
வனப்பிழந்து சுந்தர
வதனம் தான் கலைந்து
உடம்பினில் உயிர் மட்டும்
ஊசலாடி நின்ற வேளை
தங்கள் திருமுகம் காண - அன்பு
தனயன் நான் வந்தவேளை தனில்
இவ்வுலகம் தாங்கள்
இறைவனடி சேர அவர்
சம்மதம் கேட்டு சாந்தமாய் படுக்கையில்
உற்றார் உறவினர்
உங்கள் திருமுகம் பார்த்ததை
உணராதிருந்த இறுதிநாளை
அகிலத்தில் நாம் உள்ள வரை
அழியாது எம் நெஞ்சைவிட்டு
பண்பும் பாசமும் கொண்ட
எங்கள் சிறிய தந்தையை இழந்து
வேதனையாயல் தவிக்கிறோம் - இவர்
ஆத்மா சாந்தி பெற - பிட்டியொல்லை
கண்ணகி அம்மனை வேண்டுகிறோம்

# நீள நினைந்திருப்பேன்
# உம்மை நித்தலும் கைதொழுவேன்

பாசத்தால் வந்த மகன்
நயினை கி. கிருபானந்தா

அனுபூதிமானாகிய அருணகிரியார் "வருவாய் குருவாய் குகனே" எனக் கந்தப் பெருமானைக் கூவி அழைத்தார். ஒருவனை வாழவைப்பதற்கு 'நல்ல குரு' அமைவது அவசியமாகும்.

ஆசிரியர்கள் பிறக்கிறார்கள்; ஆசிரியர்களை உருவாக்க முடியாது. முதல் வகையைச் சார்ந்தவர் என் குரு. தெளிந்த சிந்தையராகிக் கசடறக்கற்பிக்கும் ஆற்றலில் அவரே அவருக்கு நிகராவர். 'சான்றோன்' எனும் தமிழ்ச் சொல்லின் இன்றைய விளக்கமாய் விளங்கும் வித்தகர் எல்லோருக்கும் நல்லவர். பழகுவதற்கு இனியவர். பண்பாளர். சொல்வது ஒன்று செய்வது வேறொன்று என வேடம் போடத் தெரியாதவர். பேசியபடி வாழ்ந்த பெருமகன். கவிதைமழை பொழிவதில் அவர் காளமேகமாகத் திகழ்ந்தார்.

வட்டநிலா முகத்தில் என்றும் மாறாத புன்னகையோடு தமக்கே உரிய கம்பீரமான குரலிலே "வாடா" என அழைத்துக் கூறிய ஆலோசனைகள், புத்திமதிகள், நல்வழிகள், குழப்ப நேர சமாதான முயற்சிகள், உறவுகளுக்குள்ளே நட்புக்குள்ளே விரிசல்கள் எது வந்தபோதும் தஞ்சமடைந்த நாட்கள் எல்லாவற்றையும் பொறுத்து அஞ்சேல் என்று ஆசான் அபயம் அளித்த நாட்கள் என் உயிரோடு கலந்தவை. பழைய நினவுகளை இதயப் பேழையிலே பத்திரமாகப் பேணிய வண்ணம் நீள நினைந்தழுகின்றேன்.

கல்லூரியில் அவரிடம் கற்றதைவிட அதன் பின் கற்றுக்கொண்டவை அதிகம். இவை ஏட்டில் இல்லா எழுதா மறையாக

அடியேன் அவரிடம் கற்ற சிறந்த கல்வியாக அமைந்தது.

அன்பாகிப் பின் அடிமையாகிப் பின் அவரே முழுதுமென என்னை ஆட்கொண்டார். என் வாழ்வின் நல்லதுக்கும், கெட்டதுக்கும் தோள் கொடுக்கும் பீஷ்மாச்சாரியாரானார்.

தான் தொட்டதுறைகளையெல்லாம் துலங்கச்செய்கின்ற வரப்ப-ிரசாதம் வாய்க்கப் பெற்ற பாடிய குயில், பேசிய கிளி இன்று பறந்-துவிட்டது. பல்வேறு துறைகளில் அவர் பதித்துச் சென்ற சுவடுகள் பல காலத்துக்கு அவர் பெயரை நினைவூட்டியபடி திகழும் என்பது நிச்சயம்.

தமிழுக்குத் தொண்டு செய்தவர்கள் சாவதில்லை. பூதவுடல் மறைந்தாலும் அவர்களின் பணியும், புகழும் நீண்டகாலம் நிலை-த்தே நிற்கும் என்பது உண்மை. இன்று ஆசிரியர் எம்முடன் இல்லை-லயென்பது துன்பமான உண்மை. என் இனிய ஆசானை இனி எப்ப-ிறப்பில் காண்பேன். கண்கண்டதெய்வமே காலமெல்லாம் நீ எனக்குக் காவல்.

# அரங்கியல் நோக்கில் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள்

ஆ. கா. யோகராஜா
சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரி

கவிஞர், கலைஞர், இலக்கியப் புரவலர், கல்வியியலாளர், பன்மொழிப் புலமையாளர் என்று பன்முகநோக்கில் ஆராயப்படவேண்டிய கல்விமான் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள். 'அரங்கியல் நோக்கில் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை' என்ற தலைப்பிலேயே இதற்கான கேள்வியும் தொக்கி நிற்பதை உணரமுடியும். மேற்படி தலையங்கத்திற்குரிய பூரணத்துவம் வாய்ந்த ஒரு கட்டுரையையும் இங்கு கொடுத்துவிட முடியவில்லை. கால அவகாசமற்ற நிலையில் அதற்கான தளமும் இதுவல்ல என உணர்ந்து மேற்படி தலையங்கத்திற்குரிய ஒரு முகப்புரையை மட்டும் இங்கு வழங்க முற்படுகிறேன்.

1960களில் க. கைலாசபதி, க. முருகையன், கா. சிவத்தம்பி ஆகியோரை முன்னிலையாளர்களாகக் கொண்டு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தேசிய அளவில் இயங்கிக் கொண்டிருந்தபோது, கனக செந்திநாதன், வி. கந்தவனம், அம்பி, இ. நாகராசன் போன்றோர் யாழ் இலக்கிய வட்டக்காரர்களாகப் பரிணமித்துக்கொண்டிருந்தனர். இவர்களுடன் இணைந்த ஓர் இளங்கவிஞராகக் காரை செ. சுந்தரம்பிள்ளை காணப்பட்டார். இதேகாலப்பகுதியில் காரைநகரிலிருந்து வடமராட்சி புலோலிக்கு ஈ. வே. ரா. பெரியார் வழிவந்த பகுத்தறிவாளன், தமிழறிஞர் கந்தமுருகேசனார் அவர்களிடம் வந்துசென்று கொண்டிருந்தார் காரை செ. சு. அவர்கள். பாகுபாடுகளைக் கடந்து தொன்மை இலக்கியங்களின் சிறப்புகளை, இலக்கண, இலக்கியங்களை கசடறக் கற்பிப்பவர் கந்தமுருகேசனார். தமது இறுதிக்காலம் வரை பண்டைத் தமிழர் திண்ணைக் கல்வி முறையிலேயே கல்வி புகட்டி

வந்தவர் இவர். யாழ் இலக்கிய வட்டத்துடன் இணைந்த கவிஞராக அறியப்பட்ட காரை. செ. சு. இன் நாடக ஆர்வம் பற்றி நாம் அப்போது அறிந்திருக்கவில்லை. 1960களின் மத்தியில் தேவரையாளி இந்துக்-கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் மாணவர்களை நடிகர்களாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட 'தம்பி கொழும்பில' நகைச்சுவை நாடகம் மூலமே இவரது நாடக ஆர்வம் பற்றித் தெரிந்து கொண்டோம்.

தமது வளர்நிலை கருதி அரசியல் நோக்கிலும், சமூகம் சார்ந்த மிதவாதப் போக்குடையவராக இருந்தபோதும், தொன்மை இலக்க-ியங்கள் சார்ந்து இவர் ஒரு புரட்சிகர இளைஞனாகவே திகழ்ந்தார். கம்பராமாயணத்தில் அடிநிலைச் சமூகத்தைச் சேர்ந்த படகோட்டியாகிய குகனிடம் பெரும் பற்று இருந்தது. சிலப்பதிகாரத்தில் கண்ணகியை விட மாதவி சிறந்த பாத்திரமாக இவருக்குத் தோன்றியது. நடனமாடிப் பிழைக்கின்ற பாலியல் தொழில்சார் சமூகத்தில் இருந்து வந்தபோதும் பாலியல் உறவில் நெறிமுறை தவறாத, நேர்மையானவளாகவே மா-தவியை நோக்கினார். மேடைகளில் கண்ணகியா, மாதவியா சிறந்தவள் என்ற பட்டிமன்ற விவாதங்களின் போதும் மாதவியின் பக்கம் நின்று-தான் இவர் விவாதம் புரிவார். மேடைக் கலகலப்பிற்காக மட்டுமன்றி மனம் திறந்தும் மாதவியை நோக்கியதனால்தான் தனது இரண்டாவது மகளுக்கு மாதவி என்று பெயரிட்டு சிலப்பதிகார மாதவிக்குச் சமூக அந்தஸ்தைப் பெற்றுக்கொடுத்தார்.

மேற்கு நாடுகளில் சிறார்களின் கல்வியில் அரங்கியல் தொழி-ற்பாடுகள் பேணப்பட்டுவருகின்ற போதும், Education towards free-dom எனும் நோக்கில் மாற்றுக் கல்வியை மேற்கொண்டுவரும் பாட-சாலைகளில் இதற்கான முக்கியத்துவம் அதிகமாகவே காணப்படுகி-ன்றது. Rudolf steiner schule (school) இதை ஒரு உதாரணமாகக் கொள்ளலாம். இங்கு மாணவர்களின் ஆரம்பக் கல்வியில், கைவினை, ஓவியம், இசை, நாடகம் போன்ற கலைவடிவங்களுக்கூடாகவே மே-ற்கொள்ளப்படுகிறது.

மாணவர்களுக்கான எழுத்துப் பயிற்சி ஏழு வயது முடிந்தபின் முதலாம் வகுப்பிலேயே ஆரம்பிக்கப்படுகிறது. எழுதுகோல்களை லாவகமாக-வே பிடிக்க வைக்கும் நோக்கிலே கைமூட்டில் ஏற்படும் வலியைத் தடுக்கவும் எழுதுகின்றபோது மாணவர்களுக்குத் தோன்றுகின்ற புலமைத்திறன் கலைந்து போகாமல் இத்தகைய நடைமுறைகள் கையாளப்படுகின்றன. இந்த அளவுக்கு இல்லாவிட்டாலும், எமது சமூகத்தின் வளர்ச்சிநிலை நின்று, அரங்கியலுடன் இணைந்த கல்வ-ிமுறையையே காரை செ. சு. அவர்களும் வற்புறுத்துகிறார்.

இவரது இசை ஞானம், சமூகக் கோட்பாடு, நாட்டுக்கூத்துப் பயிற்சி, அண்ணாவியாருக்குரிய ஆற்றல், வி. வி. வைரமுத்துவைப் புதியதொரு பரிமாணத்தை நோக்கி நகர்த்தியதில் இவருக்கு இருந்த ஆர்வம் என்று, இவரது அரங்கியல் பார்வை பரந்திருந்தது. இவற்றை இவரது 'வடஇலங்கை நாட்டார் அரங்கு' எனும் நூலில் காணக்கூ-டியதாக இருந்தது.

2001 ஆம் ஆண்டு சுவிற்சலாந்தில் ஏப்பிரல் மாதக் கடை-க்கூற்றில் ஒருநாள் பலமணிநேரக் காத்திருப்பிற்கு மத்தியில் மணித்-துளி நேரத்தைச் செலவிடும் நோக்கில் சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூ ரிக்கு வருகை தந்திருந்தார். ஆனால் மாணவர்களின் தொடர்ச்சியான ஆர்வம் மிகுந்த கேள்விகளும், தேடல்களும் சிலமணிநேரம் அவரை தக்கவைத்துக்கொண்டது. அந்த சிலமணிநேரம் வடமோடி, தெ-ன்மோடி அவற்றிற்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகளும், வடஇல-ங்கை நாட்டார் அரங்கு பற்றிய முகப்புரையுடன் பாடலுடன் கூடிய ஆட்டவடிவங்களையும் நிகழ்த்திக்காட்டியிருந்தார். இந்நிகழ்வின் மூலம் நாடுகடந்து, புலம்பெயர் சூழலிலும் இவரது பணி தொடரும் வகைய-ில் ஒரு சிறு விதையை நட்டுச்சென்றார். பண்டைய தமிழர் அரங்கு பற்றிய பல தகவல்களுடன் பின்னிப் பிணைந்திருப்பதால் இளங்கோ அடிகளின் சிலப்திகாரத்தை அரங்குநிலைப்பட்ட காவியமாகக் கொள்க-ின்றோம். இலக்கியம் சார்ந்து கம்பராமாயாணத்தில் மிகவும் புலமை உடையவரான இவரை அரங்கியல் வழிநின்று சிலப்பதிகாரத்தில் ஆழ்ந்து அறிவுடையவராகவே

திகழ்ந்தார்.

பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி, ஆகியோர் இங்கில-ாந்துப் பல்கலைக் கழகத்தில் முதுபெரும் பேராசிரியராக விளங்கிய ஜோர்ஜ் தொம்சன் அவர்களின் கருத்துடன்பாடு கொண்டு சடங்குகள், கரணங்களின் வழி வந்ததே நாடகம் என்பர். காரை செ. சு. அவர்க-ளும் இவர்களது இக்கருத்துடன் மிகுந்த ஈடுபாடு உடையவராகவே காணப்படுகிறார். உயர்நிலையில்லாத நிலையில் நாடகம் செழிப்புற்று வளர்ந்தது என்றும் அந்தச் சமூகமட்டத்தாரின் வரலாறு பதியப்படாது போனது பேலவே, அவர்களது நாடக முயற்சிகளும் பதியப்படாது பே-ாயின என்பது பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் கூற்றாகும். 'நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்' நூலினூ டாக இவர் இப்பணியை மேற்கொண்டுள்ளார். இதில் வைரமுத்துவின் வரலாற்று ஓட்டத்தில் அவரது சமூக நிலை குறித்தும் அச்சமூகத்தில் அவரது வளர்ச்சிக்கு உதவிய அவரது சமூகத்தைச் சேர்ந்த பெரியா-ர்கள் பற்றியும் தெரியப்படுத்தியுள்ளார். இந்தவகையில் வைரமுத்துவை அலங்கரித்த வைரமணிகள் பற்றி நீண்ட பட்டியல் ஒன்றைத் தயாரி-க்கும் அளவிற்குப் பெயர்கள் இந்நூலில் பதிவாகியுள்ளன.

வடஇலங்கை நாட்டார்அரங்கு ஆய்வு நூலில் நாட்டுககூத்-துக்கள் சார்ந்தும், கூத்துக்கள் ஆடியவர்கள் குறித்தும், ஆடிவந்த சமூகம் வந்தும், அச்சமூகங்களின் நிலத்தடி வேர்கள் குறித்தும் வில-ாவாரியாகத் தெரியப்படுத்தியுள்ளார். மலையகக் கூத்து நூலிலும் இப்பணி தொடரப்பட்டிருப்பதாகவே அறிகின்றோம். அரங்கு சார்ந்த இவரது எழுத்தாற்றல்களை அரங்கு சார்ந்தது என்றதற்கப்பால் சமூகம் சார்ந்த பாரிய முயற்சியாகவே கொள்ளவேண்டும். சமூகம் சார்ந்து மேற்கொள்ளப்பட்டிருக்கும் இப்பணிகளினால் கலாநிதி கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் வானுறையும் தெய்வத்துள் வைக்க-ப்படுகிறாரோ இல்லையோ சமூகம், இனம், தேசம் சார்ந்து மக்கள் மனங்களில் இருத்தப்படுவார்.

# செந்தமிழ் வானிலே ஒளிவீசும் தாரகை

கவிஞர் வ. யோகானந்தசிவம்
வட்டுக்கோட்டை

ஆற்றல் பலபடைத்த அறிஞன்
        ஆழமான சிந்தனை யாளன்
தோற்றம் எளிமை யானவன்
        தோழ னாகப் பழகுவான்
ஏற்றம் மிக்க இயல்பினன்
        என்றும் அன்பு உடையவன்
போற்று தற்கு உரியவன்
        புகழ் நிறைந்த சுந்தரன்

நாட்டுக்கூத்து நடிகனாம்
        நல்ல தமிழ்க் கவிஞனாம்
பாட்டுப் பாடி ஆடுவான்
        பட்டி மன்றம் கூடுவான்
காட்டி நின்ற திறமையால்
        காலத் தாலே வாழுறான்
தீட்டி வைத்த நூல்களும்
        திறமை தன்னைக் கூறுமே

காரை நகரின் மைந்தனாய்க்
        கால மெல்லாம் வாழ்ந்தவன்
காரை நகர் இந்துவின்
        கல்விச் சாலை அதிபனாம்
ஊரை மதித்துப் பெயருடன்
        ஒட்டிக் கொண்ட பெருந்தகை
பேரை மறக்க இயலுமோ
        பெருமை கூற முடியுமோ

நாட கங்கள் இருபது
        நல்ல தமிழில் எழுதினான்
கூடக் கவிதை நூல்களும்
        குறித்துப் பெருமை தேடினான்
தேட அரிய பொக்கிஷம்
        திகமும் எங்கள் சுந்தரன்
நாட றிந்த உண்மையே
        நல்ல தமிழ் அறிஞனே

செந்தமிழ் வானில் ஒளிவீசும்
        சிறந்த தாரகை சுந்தரன்
எந்தமிழ் மக்கள் வாழ்விலே
        இயல்இசை நாடக முத்தமிழ்
சிந்தை அள்ளும் விதத்திலே
        செப்பி நின்ற வித்தகன்
எந்த மேடை தன்னிலும்
        இவனின் திறமை விஞ்சுமே

பட்டி தொட்டி எங்கிலும்
        பல்கலைக் கழகம் தன்னிலும்
கொட்டிக் கொட்டித் தமிழையே
        குழைத்து வைத்தான் தேனிலே
கட்டி வெல்லம் போலவும்
        கருப்பின் இனிமை போலவும்
தட்டித் தட்டிப் பேசிடும்
        தமிழை மறக்க முடியுமோ?

# கவிதைகள் நிலைக்க வேண்டும் கவி பேர் உடைரக்கவேண்டும்!

சட்டத்தரணி கனக மனோகரன்
கனடா

மகிமை நிறைந்த மாமனார்க்கு இரங்கல் உரை எழுதி ஒன்பது திங்களில் புலமை பொதிந்த மருகர்க்கு எழுதிட நேர்ந்திருப்பது என்னளவில் துரதிஷ்டமே. இலக்கிய ஆர்வலராகிய ஞான் அண்ணன் இன்று அமரன், காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் என் சின்ன அகவையிலேயே கண்டதுண்டு; கவியரங்குகளில்; கவிதைகளை இரசித்ததுண்டு. எனினும், பேசிடும் வாய்ப்பினைப் பெற்றதில்லை.

அந்த வாய்ப்பு எனக்குக் கிட்டியது 1968 இல் அந்நிலையிலும் நான் பள்ளி மாணவன் தான்! அப்போது என் தாய்நகர் வல்வெட்டித்துறையின் நடுநாயகமாக அமைந்திருக்கும் சனசமூக சேவாநிலையம் விழாக்கோலம் பூண்டது; வெள்ளிவிழாக் கண்டது. கவிஞர்களை ஒழுங்கு செய்து கவியரங்கு செய்யும் பாரிய பணி எனக்குத் தரப்பட்டது. கவிஞர்கட்கு இறைமை, தாய்மை, கேண்மை, காதல், சகோதரத்துவம் என்ற தலைப்புகளைக் கொடுப்பதென முடிவெடுத்தோம்.

எனக்குப் பிடித்தமான சுந்தரரை முதலில் பிடிப்பதென முடிவெடுத்தேன். அப்போது அண்ணன் அல்வாயில் குடியிருந்தார். வல்வைக்கு அல்வாயோ பக்ககம் (பக்க அகம்) கவிஞர்க்கோ அது புக்ககம். ஒரு நண்பனுடன் அவர் மனையை நாடினேன்.

அன்று கவிஞரின் தரிசனம் கிட்டவில்லை. அவரது புதுமனையாள் இந்திரா அக்கா எங்களை கரிசனையோடு வரவேற்று, கணவர்க்குரிய அழைப்பை ஏற்று, தலைப்புகளை தானே கேட்டு, காதல் தலைப்பை அவர் சார்பில் ஏற்று, அவர் கட்டாயம் உங்கள் விழாவில் கலந்துகொள்வார் என்ற உத்தரவாதத்தையும் தந்து எங்களை வழி அனுப்பினார்.

நாம் திரும்பும் வழியில் என் தமிழரசுக் கட்சி அரசியல் ஈடுபாடு காரணமாக முன்னறிமுகத்தைக் கொண்டிருந்த அமரர் முருகேசு மாஸ்டர் அவர்களை எதிர்கொண்டேன். அவருடன் அளவளாவுகையில் கவிஞர் அவர் மருவிப் பெற்ற மகன் (மருமகன்) என்பதையும் அவரது மணமகள் இவரது மகள் என்பதையும் அறிந்து கொண்டேன். கவிக்குயிலின் இணைக்குயிலும் கலைப்பட்டதாரி என்பதையும் தெரிந்து கொண்டோம்.

அன்று எங்கள் கவியரங்கிற்கு தலைமை ஏற்றிருந்தவர் பிந்நாளில் சென்னையில் இடம்பெற்ற 2ஆம் உலகத் தமிழாராச்சி மாநாட்டில் உலக மகா கவிஞர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்ட கவிஞர் இ. நாகராஜன் அவர்கள். கவிஞர்கட்கு அடியவன் அன்று கவிதையிலே நன்றி நவின்றேன். அதுவே என் கன்னிக் கவியரங்கக் கவிதை. அதில் பொருத்தமான அடிகளை மட்டும் ஈண்டு நினைவு கூர்கிறேன்.

காரைச் சுந்தரரை கண்டிடச் சென்றேன்
கார் கொண்டுதான் அல்வாய் சென்றேன்
இல்லான் இல்லால் அகன் றிருந்தார்
இல்லாள் இல்லினில் நன்கமர்ந் திருந்தாள்
கணவனின் அழைப்பை மகிழ்வுடன் ஏற்றார்
களவியல் தலைப்பை நகுவுடன் ஏற்றார்
களவியல் வாழ்வின் உயர்நிலை கண்டேன்
களிப்போடு விடைதர யான் கொண்டேன்

இந்த நிகழ்வின் பின்னர் கவிஞருடன் உளப்பூர்வமாக உறவாடுகின்ற, உளந்திறந்து உரையாடுகின்ற பல சந்தர்ப்பங்கள் எனக்குக் கிட்டின.

அண்ணன் சுந்தரம்பிள்ளை அவர்கள் தன்னைச் சார்ந்த இளைஞர்கள் பலரும் 'முற்போக்கு அணி' என்று சொல்லப்பட்ட ஓர் அணி சார்ந்து நின்ற வேளையில் தான் அந்த அணியினரின் நடைமுறைக் கொள்கைகளில் இருந்த பிற்போக்குத்தனங்கள், கூனல்குணங்கள், கோமாளித்தனங்களை அவதானித்து, தானாகவே முடிவெடுத்து ஒரு நற்போக்கு அணி சார்ந்தது பற்றியும் அமிர்

அண்ணனின் தம்பியாகி, தமிழரசுக் கட்சித் தொண்டனாகி களங்கள் கண்டது பற்றியும் சொன்னதுண்டு.

தமிழரசுக் கொள்கை வழி வாழ்ந்திருந்த கவிஞர் அதே கொள்கைகளில் தோய்ந்திருந்த ஒரு குடும்பத்திற்றான் மணம் புரிந்தார். முருகேசு ஆசிரியப் பெருமகன் மட்டு எனக்குப் பெருமதிப்புண்டு. அப்பெருமகன் விடை கொண்ட வேளையிலே என் வாதனைகள் - ரோதனைகளை அன்னவரின் நினைவு மலரில்

'சம்பூரண இராம கவியன், எனின்
சடுதியில் மறைந்த இராகவன் அல்ல'

என்ற மகுடத்தில் வடிய விட்டிருந்தேன்.

கவிஞரின் புதுமண வாழ்வின் புகுமுக விழா அண்ணன் அமிர் தலைமையில் புரட்சிகரமாக நடந்துது. அண்ணன் அமரித்தவேளையில் கெள்கைக் குன்றம் சுந்தரம்பிள்ளை அவர்கள் எதிர்ப்பிற்கும், வெறுப்பிற்கும், ஏன் இறப்பிற்கும் அஞ்சாது அனைவரின் இறுதி ஊர்வலத்திலும் பங்கெடுத்தார். அதை அறிந்து பெருமிதம் அன்று கொண்டேன்; அவர் பிரிவால் பெருந்துயரம் இன்று கொண்டேன்.

கனகச்சிதமாய் கவிபாடும் ஆற்றலை அண்ணன் சுந்தரன் பெற்றது எங்ஙன்? நாதனார் சிவனார்தான் நாயனார் சுந்தரரை விழித்து "சொற்றமிழால் என்னைப் பாடுக" என்று பணித்திருந்தார். இத்தேதாரன்ன கட்டளையை காரை சிவனாரிடம் காரை நகரார் பெற்றிருப்பாரோ?

ஒருசமயம் புத்தூரியில் ஒரு விழா நடந்தது. அப்போது நான் சட்ட மாணவன். பட்டிமன்றத்தில் நான் பங்கெடுத்தேன். அண்ணன் கவியரங்கில் கலந்து கொண்டார். (அவருடன் கவியரங்கில் பங்கெடுத்த பாக்கியமும் எனக்குக் கிடைத்ததுண்டு) அண்ணன் கவி பாடுகையில் நாயொன்று மக்களின் நடுவில் நுழைய அவர்களுட் சிலர் அதை அடித்து விரட்டினார்கள்.

நளவெண்பாவில் இடம்பெற்றுள்ள ஒரு நளினமான இலக்கிய நிகழ்வு. . கடுகதி நளன் தேரோட்டுகிறான் தேரிலிருந்த அயோத்தி மன்னனின் அங்கவஸ்திரம் (சால்வை) விழுகின்றது. விழுந்த

ஆடையை எடுக்க முடிந்திலது.. காரணம்..

மேலாடை விழ்ந்த தெடுவென்றான் அவ்வளவில்
நாலாறு காதம் நடந்ததோ . .

அதிவிரைவில் காரை அண்ணன் வாயில் அன்று கவிதை பிறந்தது..

நாயேன் கவிதையினை நயக்க வந்த
நாயை ஏன் அடிக்கின்றீர் விடுங்களைய்யா
நாய் பாவம் உங்களை கடிக்குமய்யா . .

'நாயேன்' என்பது தன்னடக்கத்தை வெளிப்படுத்த மணிவாசகப் பெருமான் அடிக்கடி பாவித்த மணியான சொற்பதம். 'பெண்பாவம் பொல்லாதது' என்றுதான் பொதுவில் பேசப்படுவது. . நாய்பாவம் என்பது நகைச்சுவையை மட்டுமல்ல இப்பாலவரின் ஜீவகாருண்ய உணர்வையும் அன்று ஒருசேர வெளிப்படுத்தியது. கவிஞரின் சமயோசிதத்தை அன்று அனைவருமே பாராட்டினார்கள்.

இன்னொரு சந்தர்ப்பத்தில ஒரு விழா முடிந்தது திரும்புகையில் அண்ணனை நான் அவர் வீட்டுக்கு அழைத்துச் சென்றேன். விடை தருகையில் தன் 'தேனாறு' கவிதைத் தொகுப்பை என் கைகளில் திணித்து "இதற்கு உமது விமர்சனத்தை எழுதி அனுப்பும்" என்றார். யானும் அங்ஙனமே செய்தேன். தேனாறு என்ற தலைப்பில் அமைந்து அன்று என் விமரிசனத்திற்கல்ல நிச தரிசனத்திற்கு ஆளான சில வரிகள் 35 ஆண்டுகள் கடந்தும் என் நினைவில் இன்றும் நிழலாடுகின்றன

பானையைத் தூக்கி உடைப்பதுவும் - அதன்
பக்கத்தில் நின்று சிரிப்பதுவும்
பூனையின் வாலை இழுப்பதுவும் - ஒரு
புத்தகந் தன்னைக் கிழிப்பதுவும்

புழுதி அளைந்த பின் ஓடி வந்தே - என்றன்
புத்தாடை பற்றி இழுப்பதைப்பார்
கழுவக் கரைச்சல் கொடுப்பதைப்பார் - ஒரு
கம்பெடுத் தென்னை அடிப்பதைப்பார்!

பின்னர் அண்ணனைக் கண்டபோது அவர் சொன்னது “உங்கள் விமர்சனம் உங்கள் ஊர் சுப்பிரமணியம் சோடா போல . .” TOO SWEET . . உணர்ச்சிகளின் வெளிப்பாடுகள் தான் உன்னத இலக்கியம் ஆக முடியும். எனது மற்றைய பாடல்கள் என் கற்பனையில் எழுந்தவை. தேனாறு என் மகள் துளசியின் குறும்புகள் அனுபவித்து அனுபவித்து நான் எழுதியவை என்றார்.

யாழ் இலக்கிய வட்டச் செயலாளர் யாழ்வாணன் என்னை தங்கள் மாதாந்த கூட்டங்களுக்கு அழைப்பார். பார்வையாளனாகப் பங்குகொள்ளத்தான்; அங்கத்துவம் பெறும் அகவையோ அறிவோ எனக்கு அப்போது இருக்கவில்லை. ஒரு கூட்டம் மலாயன் கபே மேல் மாடியில் இடம்பெற்றது. பின்னர் தேனீர் விருந்தும் நடைபெற்றது. இன்று கனடாவில் வாழும் குறமகளுக்கு இடம்பெற்ற பாராட்டு வைபவம் அது.

அப்போது நான் “எனக்கு கடன்கொண்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன் என்ற அடிகள் இடம்பெற்ற கம்பராமாயணப் பாடல் தேவை தந்துதவுவீர்களா? கம்பராமாயணத்தில் தேடி என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை” என்றேன். பலரும் தம்பி “நன்றாகத் தேடிப்பார் கிடைக்கும்” என்றார்கள் காரை அண்ணன் மட்டும் “தேடிக் கிடைக்காது இது கம்பனின் வரிகள் அல்ல” என்று அடித்துச் சொன்னார். அங்கு ஓர் இலக்கியச் சர்ச்சையே இடம்பெற்றது.

ஒரு வாரத்தில் எனக்கு ஒரு தபாலட்டை வந்தது. அதில் கவிஞரண்ணை எழுதியிருந்தவை வருமாறு: தம்பி அந்தப் பாடலை கண்டுபிடித்துவிட்டேன் அது இராமச்சந்திரக் கவிராயர் உடையது அது இதோ,

விடங் கொண்ட மீனைப் போலும்
வெந்தழல் மெழுகு போலும்
படங் கொண்ட பாந்தள் வாயில்
பற்றிய தேரை போலும்
திடங் கொண்ட ராம பாணம்
செருக் களத் துற்ற போது
கடன் கொண்டார் நெஞ்சம் போல
கலங்கினான் இலங்கை வேந்தன்

அன்றைய காலகட்டத்தில் ஒரு தபாலட்டையின் விலை ஐந்து சதம் மட்டுமே. ஆயின் என் ஐயறவை அறுப்பதில் அமரர் காரை சுந்தரம்பிள்ளை காட்டிய அன்பிற்கும் அக்கறைக்கும் விலை இருக்க வாய்ப்பில்லை.

முடிவாக . .

என் நினைவினில் நீங்கா இடம்பெற்றிருக்கின்ற கவிஞரின் இன்னோர் பாடலில் அவர் எழுப்புகின்ற வினாக்கள் . .

மூவேந்தர் பரம்பரையா? முச்சங் கத்தில்
முழங்கியது முன்தமிழா? முற்றுங் கற்ற
பாவேந்தர் போற்றியபண் புனக்கு முண்டா?

பாவேந்தர் போற்றிய பண்புகள் இன்றைய தமிழனிடம் இல்லாதிருக்கலாம். ஆனால் பாவேந்தரைப் போற்றும் பண்பு இன்றும் நின்று நிலைக்கிறது.

எனவே இந்த அமர கவியின் அன்பு மனையாளும், அருமைப் பிள்ளைச் செல்வங்களும் இன்று பாவனையில் இல்லாத அன்னவரின் 'தேனாறு' உட்பட அனைத்து ஆக்கங்களையும் மறு பிரசுரம் செய்து மீளவும் அவை உலா வர வழிவகை செய்ய வேண்டும் என்பதே என் வேணவா!

கவிதைகள் வாழ வைப்பின்-அவை
கவிஞரை வாழ வைக்கும்

# பல்துறை ஆற்றலன் பாவலன் போனான்


கவிஞர் காசி ஆனந்தன்

காரை சுந்தரம் பிள்ளை
    காலம் ஆனான் எனச்சொன்னார் . .
ஊரை அசைத்தது செய்தி!
    உள்ளம் துடித்தனர் ஆன்றோர்
நீரைச் சொரிந்தன கண்கள்!
    நெருப்பில் எரிந்தது நெஞ்சம்!
ஆரை முடித்தனை சாவே?
    அன்பிலாய் . . என்செயல் செய்தாய்?

பல்துறை ஆற்றலன்! அறிஞன்!
    பாவலன்! இலக்கியன்! ஆசான்
சொல்வளம் மிக்கவன்! தமிழன்
    சுவைதோய்ந்து நின்றவன்! கலைஞன்
தொல் தமிழ்க்கூத்தினை ஆராய்ந்தோன்!
    தொய்வறியாத் தமிழ்த் தொண்டன்!
நல்லவன் மடிவதோ? எங்கள்
    நாடிதைத் தாங்குமோ? அம்மா!

பாட்டை இயற்றினான் . . ஈழம்
    பற்றியே எழுதினான் . . புலிகள்
காட்டிய திசையில் நடந்தான் . .
    காரை சுந்தரம் பிள்ளை
நாட்டை நிமிர்த்தினான் . . ஏனோ
    நடுவழிப் பயணத்தில் ஓய்ந்தான்?
ஏட்டில் அடங்குமோ துயரம்?
    எங்ஙனம் ஆறும் எம் நெஞ்சே

# வம்ச வரலாறு




* அமரத்துவம் அடைந்தவர்கள்

# முதல்வரின் மணிவிழா





## ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் - 1998







## நன்றிகள்

எமது தந்தையின் மறைவையொட்டிப் பலருக்கு நாம் இதயசுத்தி–யோடு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

Colombo Appolo Hospital, London Ealing, Hammersmith Hospital ஆகிய வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் மற்றும் ஊழ–யர்கள் இவர்களுடன் ஆலோசனைகள் வழங்கிய வைத்தியர்கள், நண்பர்கள்.

சுகவீன காலத்தில் அரவணைத்தோர், ஆறுதல் வழங்கியோர், வைத்தியசாலையில் பார்வையிட்டோர், பங்களித்தோர்.

மரணச்செய்தியறிந்து செய்தி வெளியிட்ட ஊடகங்கள், அஞ்சலி நி–கழ்வுகள் செய்தவர்கள் மற்றும் துயரில் பங்குகொண்ட ஊடகங்கள், உறவினர்கள், நண்பர்கள்.

இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டோர், நிழ்வுகளை ஒழுங்கு செய்தோர், உடனிருந்தோர், ஆறுதல் வழங்கியோர்.

பலவழிகளிலும் பங்குகொண்டோர், ஆறுதல்,ஆகாரம் அளித்தோர்.

நினைவு தினநிகழ்வுக்கு உதவிபுரிந்தோர், மலருக்கு ஆக்கங்கள் வழங்கியோர், சேகரித்தோர் மற்றும் அச்சிட்ட வாசன் அச்சகத்–தவர்கள்.

அனைவர்க்கும் இதயபூர்வ நன்றிகள்.

குடும்பத்தினர்

23.10.2005

வாழையடி வாழையாய் இந்த மண்ணில்
வரலாறு காணாத காலந் தொட்டே
கீழைநாட் டார்க்கெல்லாஞ் சிறப்பை யீட்டிக்
கீர்த்தியுடன் வாழ்ந்திட்ட தமிழா! இன்று
கோழைகளாய்க் குள்ளநரிக் கும்ப லாகக்
குன்றிமணி யளவேனும் வீர மின்றி
ஏழைகளாய் எடுப்பார்கைப் பிள்ளை யாக
இருப்போரைப் போல்நீயும் வாழ லாமோ?

மூவேந்தர் பரம்பரையா? முச்சங் கத்தில்
முழங்கியது முன்தமிழா? முற்றுங் கற்ற
பாவேந்தர் போற்றியபண் புனக்கு முண்டா?
பழந்தமிழர் வழியாநீ? பலநா ளாக
நாவேந்தர் நாவினிலே நடன மிட்ட
நற்றமிழன் புகழ்நாக ரீக மெங்கே?
பூவேந்த ரோடுபல புலவர் நித்தம்
போற்றிவழிப் பட்டதமிழ்ச் சாதி யெங்கே?

காரை செ. சு.
தேனாறு - 1968